PAATHUKAVALAN
REGISTERED AS A CATHOLIC WEEKLY (P.197) FOUNDED 19 FEB 1876

# பாதுகாவலன்

இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க வார ஏடு

மலர் 126
இதழ் 19
பக்கங்கள் 16
விலை 10/=
மார்கழி 1-31
2002

December St.Joseph's Catholic Press, 360 Main Street, Po.Box.2, Jaffna, Sri Lanka. Tel:- 021-2378 E-mail:pillai01@sltnet.lk ISSN No. 1391-7633



# 2002 ~ நத்தார்
# 2003 ~ புதுவருட
# சிறப்பு மலர்

ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என அழைக்கப்படும் (எசாயா 9:6)

## நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

## HAPPY CHRISTMAS AND NEW YEAR



## நிரந்தர சமாதானத்திற்கு முன்னர் ஏற்பட்டுள்ள இந்த அமைதிக்காலத்தை நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர்த்திச் செல்வது ஒவ்வொருவரதும் விசேட கடமையாகும்

### கிறிஸ்மஸ் தின செய்தியில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

கடந்த பல வருடங்களில் இல்லாத மகிழ்வும், நிறைவும் இவ்வாண்டு ஆண்டவர் இயேசுவின் மாபெரும் பிறப்பு விழாவைக் கொண்டாடும்போது எமக்குக் கிடைத்திருப்பது உண்மையிலேயே இறைவனின் பேரருளாகும். யுத்த மேகங்கள் அகன்று போரின் கொடூரங்கள் முடிந்து அமைதியும் சமாதானமும் துளிர் விட்டுள்ள வேளையில் ஆண்டவர் இயேசு வியத்தகு ஆலோசகராகவும், வலிமை மிகுந்த இறைவனாகவும், என்றுமுள்ள தந்தையாகவும், அமைதியின் அரசராகவும் எம் மத்தியிலே தோன்றியுள்ளார்.

இறைவாக்கினர் எசாயா 'ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார். ஆட்சிப் பொறுப்பு அவர் தோள் மேல் இருக்கும். அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என அழைக்கப்படும்' என்று தெரிவிக்கிறார் (எசாயா 9:6).

சமாதானத்துக்கான தேடல்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்து இயல்பு வாழ்க்கை ஓரளவு அமைதியாகத் தொடங்கிவிட்டாலும் எம் மண்ணில் தோன்றிய சமாதான ஒளி இன்னும் நிரந்தரமாகவில்லை. ஒவ்வொரு நாள் செய்திகளும் அவற்றின் பின்னணிகளும் அவை தருகின்ற விளக்கங்களும் எமது உள்ளத்தில் தோன்றியுள்ள சமாதான சூழ்நிலையின் பின்னிலையில் ஏதோ ஒருவித பயத்தை தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது. அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்க உணர்வு இன்னும் எம் உள்ளங்களைவிட்டு முழுமையாக நீங்கவில்லை.

மருதமடு அன்னையின் தென்னிலங்கை பவனியின் பின்னர்தான் சிங்களப் பேரினவாதிகளினதும் இனவாதத்தைத் தூண்டும் தீவிரவாதிகளினதும் மனங்கள் இறைவன் அருளால் ஓரளவு கனிந்துபோயின. மருதமடு அன்னையின் பவனியின் பின்னர்தான் அரசியல் தலைவர்களினதும், மதத் தலைவர்களினதும் பெரும்பாலான சிங்கள மக்களினதும் மனதுகளில் எமது நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் துளிர்விடத் தொடங்கியது. மருதமடு அன்னையின் அருளால்தான் மிக நீண்ட காலமாக நாம் நம்பி நம்பி ஏமாந்துபோன யுத்த நிறுத்தம் கைகூடியது. மருதமடு அன்னையின் அருளால்தான் நிரந்தர சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகளும், அரசும் இணக்கம் தெரிவித்தன என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

போரின் பின்னர் நிரந்தர சமாதானத்திற்கு முன்னர் ஏற்பட்டுள்ள இந்த இடைக்கால அமைதிக்காலத்தை உரிய விதமாக நிரந்தர சமாதானத்தை நோக்கி நகர்த்திச் செல்வது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரதும் விசேட கடமையாகும். அண்மையில் நெடுந்தீவில் தோன்றியுள்ள அரசியல் பதட்டமான நிலை அனைவரையும் குழப்பமடையச் செய்துள்ளது. அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்துக் கட்சிகளுக்கும் உரிமை உண்டு அதனைத் தடுப்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்ளுகின்ற வேளையில் அவ்வரசியல் நடவடிக்கைகள் மக்களையும் அவர்கள் மன உணர்வுகளையும் எந்த வகையிலும் குழப்பமுறச் செய்யவோ அவர்களின் வாழ்க்கை முறையை பாதிக்கவோ கூடாது என்பது கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டிய ஒரு விடயமாகும்.

மனித உரிமைகள், மனித மாண்பு, அன்றாட இயல்பு வாழ்வு, அடிப்படைச் சுதந்திரம், மக்களின் பொதுத்தேவைகள், என்பன எல்லாம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய காலம் இதுவாகும். இவ்வுரிமைகளை நிலைநாட்ட அனைவரும் உழைக்க வேண்டும். இவ் அடிப்படை உரிமைகளிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் செயல்படுவோரை இனங்காணுவதும், தடுத்து நிறுத்துவதும் அதிகாரத்தில் உள்ளவர்களது தலையாய கடமையாகும். இவை நேரத்தோடு தடுத்து நிறுத்தப்படாதவிடத்து நாம் இன்னும் ஒரு உரிமைகள் மறுக்கப்பட்ட நிலைக்கே தள்ளப்படுவோம்.

நிலைமைகள் இன்னும் முற்றுமுழுதாக சமாதானத்தின் பால் திரும்பிவிடவில்லை. எதிர்க்கட்சிகள் எதிர்க்கும் கட்சிகள் என்ற தவறான நிலைப்பாட்டுடனே பல அரசியல் கட்சிகள் சமாதானத்தை எதிர்த்துக்கொண்டே இருக்கின்றன. சில சமர்தான எதிர்ப்பு சக்திகளும், தீவிர மதத் தலைவர்களும் சமாதானத்தை குழப்புவதிலே கண்ணாய் இருக்கின்றனர். ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் தற்போதைய சமாதானம் பற்றிய அரசியல் நிலைப்பாடு கவலை தருவதாகவே உள்ளது. இவை யாவற்றையும் தாண்டி நீதியோடு கூடிய ஒரு நிரந்தர சமாதானத்தை இலங்கை மண்ணில் ஏற்படுத்த இறைவன்தான் தம் அருளினைப் பாலிக்க வேண்டும்.

தமிழீழ விடுத்லைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தமது மாவீரர் தின உரையில் - இத்தீவில் வதியும் சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக - ஒத்திசைவாக - ஒன்றுகூடிவாழ வேண்டும் என்பதுமே எமது ஆழமான அவா. பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புடனும், உலகத்தின் நல்லாசியுடனும் நிகழ்ந்துவரும் சமாதான பேச்சுக்களை தமது சுயநல அரசியல் நோக்கங்களுக்காக சிங்களப் பேரினவாத சக்திகள் குழப்பிவிட்டால் தமிழ் மக்கள் அதை ஒரு வரலாற்று துரோகமாகவே கருதுவார்கள் என அவர் தெரிவித்த கருத்துக்கள் சமாதானத்தின் பால் முழு நம்பிக்கையையும் மனநிறைவையும் தருகின்றன.

இன்றைய சமாதான சூழலை ஏற்படுத்த வழிவகுத்த இறைவனுக்கு நாம் எப்போதும் நன்றியுடையவர்களாய் இருக்கவேண்டும். இன்றைய சமாதான சூழ்நிலையை உருவாக்க உழைத்த அனைவரும் நன்றிக்குரியவர்களே. குறிப்பாக இலங்கைப் பிரதமர் மேதகு ரணில் விக்கிரமசிங்கா, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே. பிரபாகரன் ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள். போரில் ஈடுபட்ட இரு தரப்பினருக்குமிடையில் உறவினை ஏற்படுத்தும் பாலமாக தளராத உறுதியுடன் உழைத்த நோர்வே தரப்பினரை மறப்பதற்கில்லை.

சமாதானம் வந்துவிட்டது என்ற நினைப்பில் கடந்தகால கடின அனுபவங்களையும், மண்ணின் வேதனைகளையும் மக்களின் அவலங்களையும் மறந்து வெறும் கொண்டாட்டங்களிலும் வெளி ஆடம்பரங்களிலும் மட்டும் கிறிஸ்து பிறப்பு விழாவினைக் கொண்டாடுவது ஏற்புடையது அல்ல. இவ்விழா ஒரு பகிர்வின் விழா. இறைவன் தன் வாழ்வை மனிதர்களோடு பகிர்ந்துகொண்ட விழா. எமது இவ்விழாக்கால கொண்டாட்டங்களை விருந்துகளை இனிமையான பொழுதுகளை இல்லாதவர்களோடும் பகிர்ந்து கொள்ளுவோம். மிக நீண்ட கால இடைவெளியின் பின்னர் சுதந்திரமாக இவ்விழாவினைக் கொண்டாடவும் பட்டாசினை வெடிக்க வைக்கவும் கூடிய ஒரு நிலை தோன்றியுள்ளது. பட்டாஸ் கொழுத்துகின்ற அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளாத எம் இளையவர்கள் பட்டாசினைக் கொழுத்தும்போது நடந்துகொள்ளுகின்ற விதம் பற்றி கவனத்தில் எடுத்துக்கொள்வது நல்லது. பட்டாஸ் கொழுத்தும் மகிழ்வில் மற்றவர்களைப் பயமுறுத்துவதும், துன்புறுத்துவதும், குழப்பித் தொந்தரவு செய்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பர் தமது பணியின் 25ஆவது ஆண்டின் ஆரம்பத்தில் திருச்செபமாலை ஆண்டினை பிரகடனம் செய்து உலக சமாதானத்துக்காகவும் குடும்பங்களின் ஒற்றுமைக்காகவும் செபமாலையைச் செபிக்கும்படி வேண்டியுள்ளார். எமது மண்ணில் தோன்றியுள்ள சமாதான ஒளிக்கீற்று என்றும் நின்று நிலைக்கவும், நீதியோடு கூடிய நிரந்தர சமாதானம் ஏற்படவும் திருச்செபமாலை ஓதுவோம்.

பாலகர் இயேசு பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினிடையே பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வியத்தகு ஆலோசகராகவும் பேச்சுவார்த்தையின்போது கடினமான விடயங்களையும், விட்டுக்கொடுக்காத விடயங்களையும் இலகுவாக்குவதில் வலிமை மிகுந்த இறைவனாகவும் இலங்கையில் வாழும் எல்லா மக்களையும் அன்போடு அரவணைத்து பாதுகாத்து வழிநடத்தும் என்றுமுள்ள தந்தையாகவும் எம் மண்ணில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவதில் அமைதியின் அரசராகவும் எப்போதும் இருக்க இறை ஆசீர் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வத்திக்கான் புனித பேதுருவானவர் சதுக்கத்தில் இலங்கை மண்ணின் நிரந்தர சமாதானத்திற்காக திருந்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் விசேட திருப்பலி

## புலம்பெயர்ந்து இத்தாலியில் வாழும் லட்சக்கணக்கான இலங்கையர்கள் இவ் விசேட திருப்பலியில் கலந்து இலங்கை மண்ணின் நிரந்தர சமாதானத்திற்காக வேண்டுவர்

திருத்தந்தை வழங்கவிருக்கும் இரு மாதா சுருபங்களில் ஒன்று ஜா-எல தேவாலயத்திலும் மற்றையது மருதமடு அன்னையின் யாத்திரை ஸ்தலத்திலும் வைக்கப்படவுள்ளது.

இலங்கையில் தற்போது நிலவிவரும் அமைதி நிரந்தரமாகி நீடித்து நிலைக்க வேண்டி டிசம்பர் 18 ஆம் திகதி புதன் கிழமை ரோமிலுள்ள புனித இராயப்பர் பஸிலிக்கா பேராலயத்தில் திருத்தந்தை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரால் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருப்பலியின் பின்னர் இலங்கை வாழ் மக்களுக்கும் மண்ணிற்கும் நிரந்தர அமைதி வேண்டி விசேட ஆசீர்வாதத்தையும் திருத்தந்தை வழங்கவுள்ளார். இத் திருப்பலியில் இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து இத்தாலியில் வாழும் இலட்சக்கணக்கான இலங்கையர்கள் பங்கேறகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதன்போது இத்தாலி மக்களால் இலங்கை மக்களுக்காக அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள இரு மாதா சொரூபங்களும் திருத்தந்தையால் ஆசீர்வதிக்கப்பட்டு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனாவிடம் கையளிக்கப்படவுள்ளது. இந்த மாதா சொரூபங்களில் ஒன்று மடு தேவாலயத்திலும், மற்றையது ஜா-எல தேவாலயத்திலும் வைக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான விசேட திருப்பலியில் இலங்கையிலிருந்து அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனா, இத்தாலிக்கான இலங்கைத் தூதுவர், சிங்கள நடிகர் ஜெக்சன் அந்தனி ஆகியோர் சிறப்பு பிரதிநிதிகளாக பங்கேற்கவுள்ளார்கள். இவர்களுடன் சுவர்ணவாஹினி தொலைககாட்சி ஊடகவியலாளர்களும் மற்றும் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் - யாழ் ஆயர்கள் களுத்துறை சிறைச்சாலைக்கு விஜயம்

மார்கழி மாதம் 8ஆம் திகதி யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையும் களுத்துறை பங்குத்தந்தையின் உதவியுடன் களுத்துறை சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள கைதிகளை பார்வையிட்டு அவர்களோடு அன்பாக உரையாடினார்கள். ஆயர்கள் கூட்டாகத் திருப்பலி ஒப்புக்கொடுத்து அவர்களுக்காக வேண்டிக் கொண்டனர். குற்றச்சாட்டுகள் இல்லாமலும் குற்றச்சாட்டுகளுடனும், சிறிய குற்றச்சாட்டுகளுடனும் நீண்ட காலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை அறிந்து தமது வருத்தத்தை அவர்களுக்குத் தெரிவித்தனர். அவ்வேளையில் தமது விடுதலைக்காக உழைத்துவரும் ஆயர்களுக்கு நன்றி தெரிவித்ததோடு மன்னார் ஆயரின் விசேட முயற்சிகளை வெகுவாகப் பாராட்டி ஆசீர் பெற்றனர்.

## யாழ் ஆயர் மறியற் போராட்டம் நடத்தும் நெடுந்தீவு மக்களைத் தரிசித்தார்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக மறியற்போராட்டம் நடத்தும் நெடுந்தீவிற்குச் சென்று அங்குள்ள மக்களையும் ஈ.பி.டி.பி. குழுவினரையும், விடுதலைப் புலிகள் உறுப்பினரையும், அங்கு நிலைகொண்டுள்ள பொலிஸ் படையினரையும் சந்தித்து பிரச்சனைக்கு தீர்வு காண முயற்சிகளை மேற்கொண்டார்.

ஆண்டவர் யேசுவின் பிறப்பு விழாவை கொண்டாடும் இக் காலத்தில் இன்னும் சிறப்பான விதமாக நீண்ட காலத்தின் பின்னர் அமைதியான முறையிலும் மகிழ்வான வகையிலும் நாட்டு நிலைமை காரணமாக இவ்விழா கொண்டாடப்பட இருக்கும் இவ்வேளையில் நெடுந்தீவு நிலைமைகள் பெரிதும் கவலை தருகின்றன. உங்கள் நியாயமான போராட்டத்திற்கு நியாயமான தீர்வு மிக விரைவில் கிடைக்கும். உங்கள் பிரச்சனை தீர சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் மற்றவர்களுடனும் பேசி ஒரு நல்ல முடிவை மிக விரைவில் கொண்டு வர முயற்சிகளை மேற்கொள்வோம், என்று யாழ் ஆயர் அவர்களுக்கு உறுதி தெரிவித்தார்.

## சுவர்ணவாஹினி தொலைக்காட்சியில் கிறிஸ்து பிறப்பு நேரடி ஒளிபரப்புக்கள்

சமாதானச் சூழலில் வருகின்ற நத்தார் பண்டிகையை சிறப்பிக்கும் முகமாக புனர்வாழ்வு மீள் குடியேற்ற அகதிகள் அமைச்சும், சுவர்ணவாஹினி தொலைக்காட்சி நிறுவனமும் இத்தாலியின் இலங்கைத் தூதுவராலயமும் இணைந்து ரோம் நகரின் இயேசு பிறப்பு வரலாற்றுச் சிறப்புக்களை இலங்கை மக்களுக்கு நேரடியாக சுவர்ணவாஹினி தொலைக்காட்சி மூலமாக ஒளிபரப்புச் செய்யவுள்ளன. 'ரோமபுராண' எனும் பெயரில் விவரணக் குறுந்திரைப் படமாக இக் காட்சிகள் காண்பிக்கப்படவுள்ளன. இக் காட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக சுவர்ணவாஹினி குழுவினர் இம் மாத ஆரம்பத்தில் இத்தாலி பயணமாகியுள்ளார்கள்.

இந்த ஒளிபரப்பில் இயேசுவின் வாழ்க்கை வரலாறுகளைச் சித்தரிக்கும் ரோமாபுரியின் விசேட இடங்கள், இயேசுவின் இறுதி யாத்திரையைக் குறிக்கும் பரிசுத்தப் படிகள், வெனிஸ் நகர நிகழ்வுகள், மிலானோ புனித செபஸ்தியார் தேவாலாயச் சூழல்கள், பாதுவா நகரின் புனித அந்தோனியாரின் திருத்தல சிறப்புப் பிரதேசம், பிரான்சீஸ் அசீசியாரின் நினைவுச் சித்தரிப்புக்கள், ரோமியோ - ஜூலியற் வரலாற்றுக் குறிப்புக்கள், கொலோசியம் மாளிகை, வத்திக்கான் புனித பேதுரு திருத்தலம், விசுவியல் எரிமலை போன்றவை இடம்பெறவுள்ளன.

இவ் ஒளிபரப்பு கிறிஸ்மஸ் தினமான 24ஆம் திகதி நள்ளிரவு 11.45 மணிக்கு ஜாஎல வெலிகம்பிட்டிய புனித அன்னம்மாள் தேவலாயத்தில் நடைபெறும் நத்தார் சிறப்புத் திருப்பலியைத் தொடர்ந்து நேரடி ஒளிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். தொடர்ந்து 25ஆம் திகதியும் இவ் ஒளிபரப்பு இடம்பெறும். இதன்போது இத்தாலி வாழ் இலங்கையர்கள் இலங்கையிலுள்ள தமது உறவுகளுக்கு வழங்கும் வாழ்த்துக்களும், கருத்துக்களும் இடம்பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## விழாக் கொண்டாடும் திருக்குடும்ப கன்னியர்களை வாழ்த்துகிறோம்

### வைர விழா

அருட்சகோ. சிறில் மத்தியாஸ்

### பொன் விழா

அருட்சகோ. செறபின் பெணாண்டோ, அருட்சகோ. நசரேத் கூஞ்ஞை, அருட்சகோ. லிட்வின் பெரேரா, அருட்சகோ. டெல்பின் பாக்கியநாதர், அருட்சகோ. கி றிஸ் தேவசகாயம்

### வெள்ளி விழா

அருட்சகோ. அன்சில்லா ஜேம்ஸ் அருட்சகோ. ஜெயசீலி றொட்றிக்கோ, அருட்சகோ. அருள் மத்தேஸ்பிள்ளை, அருட்சகோ. இக்னேஷியா சூசைப்பிள்ளை

### நித்திய அர்ப்பணம்

அருட்சகோ.மேரி மெட்டலின் திரேசா, அருட்சகோதரி கீதலோஜினி, ஆருட்சகோ. திருச்செல்வராணி, அருட்சகோ. ராஜேஸ்வரி, அருட்சகோ. பேரின்பமலர், அருட்சகோ. மரியகொரற்றி.

விழாக்கொண்டாடும் திருக்குடும்பக் கன்னியர் சபை சகோதரிகள் அனைவர்க்கும் பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களையும், வாழ்த்துக்களையும் காணிக்கையாக்குகிறோம்.

### ஜெயக்குமார் அடிகளாரின் தந்தையார் காலமானார்

யாழ் மனித முன்னேற்ற இயக்குனர் சீ.ஜி. ஜெயக்குமார் அடிகளாரின் தந்தையார் *பஸ்தியாம் பிள்ளை கிறிஸ்தோபர்* இறைவனடி சேர்ந்தார்.

கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டு கனடாவில் வசித்து வந்த இவர் யாழ் நகருக்கு வந்தபோது 28.11.2002 இல் மரணமானது குறிப்பிடத்தக்கது. யாழ் மறை மாவட்டத்தில் பணிபுரிய தம் மகனை அர்ப்பணித்த இத் தந்தையாரின் ஆன்மா இறைவனின இன்ப சந்நிதானத்தில் அமைதியில் இளைப்பாற பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகிறோம்.

## அகவொளி நிலைய திறப்பு விழா

புனித பத்திரிசியார் வீதியில், புனித பத்திரிசியார் கல்லூரியாக செயற்பட்ட கட்டிடம் காலப் போக்கில் செயற்படாமல் பாழடைந்து இருந்தது. அக்கட்டிடத்தை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் அனுசரணையுடன் அகவொளி நிலைய இயக்குனர் எஸ். ஜே. இராசநாயகம் அடிகளாரின் நேரடிக் கண்காணிப்பில் புதிதாகத் திருத்தி அழகுற அமைக்கப்பட்டு 01-12-02ல் பி.ப. 3.30 மணிக்கு ஆயரால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவிற்கு யாழ் மறைவட்ட குருமுதல்வர் செல்வராசா அடிகளாரும் அருள் தந்தையர்கள், அருள்சகோதரிகள் நிலையப் பணியாளர், சுகவாழ்வு நிலையத்தினர், அகவொளி குடும்ப ஆற்றுப்படுத்தல் பயிற்சி நெறியாளர்கள், பொதுநிலையினர், கட்டிட புனர்நிர்மாணப் பணியாளர்கள் யாவரும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

மறை ஆசிரியர் எஸ். எவ் சௌந்தரம் தொடக்க வழிபாட்டை முன்னின்று நடாத்தினார். அதனைத் தொடர்ந்து, மறை ஆசிரியர் அன்ரனிப்பிள்ளை வரவேற்புரை வழங்கினார். தொடர்ந்து அகவொளி நிலைய இயக்குனர் எஸ். ஜே. இராஜநாயகம் அடிகளார் அகவொளி நிலைய பணிகள் பற்றியும், நிலையத்தின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் பற்றியும் விளக்கிக் கூறினார். பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய எமது ஆயர், காலத்தின் தேவைக்கேற்ப இக் கட்டிடத்தைத் திருத்தி அமைப்பதற்கு தாம் வழங்கிய ஒத்துழைப்பையும், நல்லாசியையும் பற்றி அழகுற எடுத்துக் கூறினார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போல் றொகான் அடிகளார் மரபணுக்கள் மந்திரமா? மருத்துவமா? என்ற தலையங்கத்தில் பல அரிய உண்மைகளை விளக்கிக் கூறினார்.

இறுதியில் ஆசிரியர் திரு. அகஸ்ரீன் அவர்களின் நன்றி நவிலலுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

அன்ரனிப்பிள்ளை
மறை ஆசிரியர்

## நவாலிப் பங்கில் இறுதியாண்டு குருத்துவ மாணவர்கள்

டிசம்பர் மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் நவாலி புனித பேதுரு பாவுலு ஆலயத்தைச் சேர்ந்த மறைக்கல்வி மாணவர்க்கும் மறையாசிரியர்களுக்கும் ஓர் ஒன்றுகூடல் நடைபெற்றது. இவ்வொன்றுகூடலை கொழும்புத்துறை குருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டில் இறையியல் கற்றுக்கொண்டிருக்கும் அருட் சகோதரர்கள் நெறிப்படுத்தினர்.

காலை நேரங்களில் மறைக் கல்வி மாணவர்களின் இல்லங்கள் தரிசிக்கப்பட்டன. இது மிகவும் பயன் அளித்ததைக் குறிப்பிட முடியும். மாணவர்களின் இன்றைய மறைக்கல்வி நிலையும், பாடசாலைகளில் பயிலும் மறைக் கல்வியும் பங்கு மறைக்கல்வியும் எவ்விதம் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கின்றது என்பதை மாணவர்களிடமிருந்து அறிய முடிந்தது. பங்கு மறைக்கல்வியில் பெற்றோர் பிள்ளைகளின் மீது கொண்டிருக்கும் அக்கறை, பங்குத்தந்தையின் முழுமூச்சுடன் கூடிய அயராத உழைப்பு, ஊக்குவிப்பு என்பவைகள் இல்லத் தரிசிப்பின்போது வெளிக்கொணரப்பட்டன.

பிற்பகல் வேளைகளில் கற்பித்தல் மூலம் மட்டுமன்றி விளையாட்டுக்கள், விநோதங்கள் மூலமாகவும் மறையறிவை மகிழ்ச்சிகரமாக அமைத்துக் கொள்ளலாம் என எடுத்துக் காட்டும் வகையில் பற்பல விளையாட்டுக்கள் இடம்பெற்றன. அருட்சகோதரர்கள் மாணவர்களுடன் இணைந்து தாமும் மழலைகளாக மாறி விளையாட்டில் ஈடுபட்டனர். இந்நிகழ்வு மாணவர்க்கு எதிர் காலத்தில் மேலும் மறையறிவில் புத்தூக்கமும் ஆர்வமும் கொள்ளத் தூண்டி நின்றது.

அருட்சகோதரர்கள் ஆலயத்தைச் சேர்ந்த மறையாசிரியர்களுடன் ஓர் ஒன்று கூடலை நடாத்தினர். மறையாசிரியர்கள் எவ்விதம் மாணவரின் மறைக்கல்வி வாழ்வில் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அவர்களது பணி வாழ்வில் மறைக்கல்வி மாணவர்களின் பெற்றோர் காட்டும் அக்கறை பொறுப்புணர்வு என்பவைகள் பற்றியும் இருசாராரும் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடல் மறையாசிரியர்கள் தமது பணியை மேலும் ஊக்கத்துடன் புரிய உந்துசக்தியாக அமைந்தது.

இரண்டாம் நாள் சனியன்று மாலை 5.15 மணிக்கு திருப் பணியாளர் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அ. சகாயநாதனால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. மறைக்கல்வி பயிலும் மாணவர்கள் திருப்பலி வழிபாடுகளில் பங்கேற்று வழிபாட்டைச் சிறப்பித்தனர்.

'இலவசமாகப் பெற்றுக்கொண்டீர்கள். இலவசமாகக் கொடுங்கள்' இவ்வாறாக அருட்தந்தை தமது மறையுரையில் குறிப்பிட்டார். இவ்விரு நாட்களும் இறைவனால் இவ்வாலயத்தைச் சேர்ந்த மறைக் கல்வி மாணவருக்கும் மறையாசிரியர்களுக்கும் அளிக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த நாட்களாகும். எனவே மாணவர்கள் தாம் பெற்றுக் கொண்ட அனைத்து அறிவுரைகள், ஆலோசனைகளை தம் ஆன்மீக வாழ்வை வளப்படுத்தப் பயன்படுத்திக கொள்ள வேண்டும் என்றும் கூறினார்.

மறையாசிரியர் திருமதி. ஞானப்பிரகாசம் அவர்கள், எம் மாணவ, ஆசிரியருடன் இணைந்து பற்பல வழிகளில் எம் மறை வாழ்வுக்கு புத்தூக்கம் அளித்த அருட்சகோதரர்களின் பணிக்காக நன்றிகூறி, அவர்களை பாராட்டினார்.

நடைபெற்ற இந்நிகழ்வுகள் எமக்கு இறைவனால் அளிக்கப்பட்ட பெறுமதிமிக்க கொடைகள் எனலாம். ஆன்மீக வாழ்வை ஏனோ தானோ என வாழ்ந்துகொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் இத்தகைய ஓர் நிகழ்வை எம்மவர்க்கு ஏற்படுத்தித் தந்த எம் பங்குத்தந்தை நேசராஜா அடிகளாருக்கு எம் ஆலய சார்பில் இதயம் கலந்த நன்றிகளை அர்ப்பணிக்கின்றோம்.

தவம் குருசுமுத்து
நவாலி.

## திருநெல்வேலி ஆலயத் திருவிழாவும் உறுதிப்பூசுதலும்

இயேசுக் கிறிஸ்துவினுடைய நற்செய்தியில் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்த புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் திருவிழா கார்த்திகை மாதம் 24ஆம் திகதி மாலை 4.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. இப்புனிதரின் விழாவை சிறப்பிக்க வெவ்வேறு பங்கு மக்களும் வழிபாட்டில் கலந்து கொண்டனர். ஏழாம் நாள் உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனத்தை யாழ் ஆயர் மேதகு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை மிகவும் பக்தியுடன் வழங்கினார். இத் திருவருட்சாதனத்தை பெற்றுக் கொள்வதற்கு வெவ்வேறு பங்குச் சிறார்களும் வருகை தந்தனர். புனிதரின் விழாவை சிறப்பிக்கும் இறுதி நாளில் "கொண்டு செல்ல என்ன கொண்டு வந்தோம்" என்ற மையப் பொருளில் போல் நட்சத்திரம் அடிகள் மறையுரை ஆற்றினார். திருநாள் திருப்பலியை சிறப்பிப்பதற்காக பல அருட் தந்தையர்களும் வருகை தந்தனர். இவ்விழாவானது மிகவும் பக்தியுடனும் புனிதரின் ஆசீருடனும் நிறைவுற்றது.

அ. பிரியதர்சினி
திருநெல்வேலி.


## யாழ் ஆயரின் நிறப் புகைப்படம்

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை ஆயர் பணியில் 20 ஆண்டுகளை நிறைவு செய்ததன் ஞாபகமாக எடுக்கப்பட்ட நிறப்புகைபடத்தினை பெற்றுக்கொள்ள விரும்புவோர் கவனத்திற்கு. 8X10 அளவிலாலான கலர் புகைப்படத்தினை பங்குப் பணிமனைகளிலும் மற்றைய நிறுவனங்களிலும், வீடுகளிலும் வைத்துக்கொள்ள விரும்புவோர் பாதுகாவலன் பணிமனையில் தொடர்பு கொள்ளவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கிழக்கு மாகாண அமைச்சின் சாகித்திய விருதுபெறும் இரு நூல்கள்






வடக்கு கிழக்கு மாகாண அமைச்சினால் வருடந்தோறும் நடாத்தப்படும் சாகித்திய விருது பெறும் நூல்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டுக்கான திறனாய்வியலும் விமர்சனமும் என்னும் பிரிவில் சாகித்திய விருது பெறும் நூலாக ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகள்ார் எழுதிய கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள் என்னும் நூல் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ் பல்கலைக்கழக கிறிஸ்தவ இஸ்லாமிய நாகரிகத்துறைகள் முதுநிலை விரிவுரையாளரான ஞா. விக்ரர் பிலேந்திரன் அடிகளார் தமது முதுகலை மாணிக் கற்கை நெறிக்கு சமர்பித்த ஆங்கில ஆய்வின் சில முக்கிய பகுதிகளை சாதாரண மக்களுக்கு பயன்தரும் வகையில் எளிமைப்படுத்தி இலகுதமிழில் கத்தோலிக்க கலை இலக்கியப் பாரம்பரியங்கள் என்னும் தலைப்பில் வெளியிட்டிருந்தார். அந்நூலே மேற்படி விருதினை பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது. மேற்படி நூலுக்கான அ.பி. ஜெயசேகரம் அடிகள் எழுதிய ஆய்வினை பாதுகாவலன் பத்திரிகை 30.05.2001இல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பிற துறை நூல்கள் என்னும் பிரிவில் சாகித்திய விருது பெறும் நூலாக ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் எழுதிய பத்திரிகை இயலுக்கோர் அறிமுகம் என்னும் நூல் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆரம்ப பத்திரிகையாளர்களுக்கு பத்திரிகை இயலை அறிமுகம் செய்யும் நூலாகவும் பத்திரிகை இயலில் அடிப்படை பயிற்சியை பெற்றுக்கொள்ள விரும்புவோருக்கு உகந்த நூலாகவும் இளம் பத்திரிகையாளர்களை கவனத்திற் கொண்டு இந்நூல் எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி நூல்களுக்கான விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 28, 29, 30 ஆகிய தினங்களில் திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரியில் இடம்பெறும் தமிழ் இலக்கிய விழாவின் இறுதித் தினத்தில் இடம்பெறும்.

## இராணுவகடற்படை தளபதிகள்யாழ் ஆயருடன் முக்கிய விடயங்கள் ஆராய்வு

இராணுவ கடற்படை தளபதிகள் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி திடீரென யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையை ஆயர் இல்லத் தில் சந்தித்து முக்கிய விடயங்கள் பற்றி ஆராய்ந்தனர். இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி ஆகியோருடன் உயர் படை அதிகாரிகளும் இந்த மகாநாட்டில் கலந்துகொண்டனர். யாழ் ஆயர் இல்லத்தில் நடைபெற்ற இந்த மிக முக்கிய சந்திப்பு பற்றிய விபரங்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டன. தமது ஊர்காவற்துறை பயணத்தை இத்திடீர் சந்திப்பிற்காக ஆயர் சில மணிநேரம் தள்ளிப் போட்ட பின்னரே சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்க இலக்கியப் போட்டி முடிவுகள் 2002

சிங்கள தமிழ் ஆங்கில கத்தோலிக்க எழுத்தாளர்களுக்கான வருடாந்த போட்டி முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன. 2001 - 2002 காலப்பகுதியில் பாதுகாவலன் பத்திரிகையில் வெளிவந்த கவிதைப் போட்டித் தெரிவில் முதலாமிடத்தை கொழும்புத்துறை எஸ். ஜேசுதாசும் இரண்டாமிடத்தை கொழும்புத்துறை ஜோ. ஜெஸ் லினும் மூன்றாமிடத்தை நவா லியூர் நாயகியும் பெற்றுக்கொள்கின்றனர்.

2001ஆம் ஆண்டு போட்டியில் மேற்படி பரிசை நவாலியூர் நாயகி பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

## குமுழமுனை பங்கில் திருப்பாலத்துவ சின்னம் சூட்டும் விழா

2002-11-04 அன்று காலை குமுழமுனை பங்கில் திருப்பாலத்துவ சபை சிறுவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா இடம்பெற்றது. எட்மன் மைக்கல் அடிகளார், பங்குத் தந்தை, அருட்சகோதரிகள் ஆகியோர் நுழைவாயிலில் இருந்து குமுழமுனைப் பங்கு திருப்பாலத்துவ சபை தலைவர் செல்வி கொன்சலாவினால் அழைத்து வரப்பட்டனர்.

திருப்பலியினை திருப்பாலத்துவ சபை இயக்குனர் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். அவருடன் இணைந்து அன்பக இயக்குனரும் பங்குத் தந்தையும் பலி நிறைவேற்றினர். அன்றைய தினம் 33 சிறார்களுக்கு சின்னம் வழங்கி நிரந்தர அங்கத்தவர்களாக சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இப்பலியின் வழிபாடுகளை தி.பா.சபை சிறார்களும் அவர்களுடைய பெற்றோரும் இணைந்து சிறப்பித்தமை ஒரு குடும்ப நிகழ்வை உணர்த்தியது.

மறையுரையில் சிறுவர்கள் மானிட மகனின் இன்றைய எதிர்பார்ப்பின் சின்னங்கள் என்றும் பாலத்துவ சபையினரின் கடமை, பணி, பொறுப்பு அனைத்தும் தெளிவாக அறிவுறுத்தப்பட்டது. பலியின் முடிவில் சிறார்களுக்கான ஒன்று கூடல் இடம்பெற்றது. அதில் பங்குத் தந்தை தலைமை ஏற்று சிறார்களை பாராட்டினார். நீங்கள் அனைவரும் சிறிய மறைதூதர் என்பதை உணர்த்தி தமது உரையை நிறைவு செய்தார்.

அதனை தொடர்ந்து இயக்குனர் அவர்களால் ஆற்றப் பட்ட உரை யில் வன்னி பிராந்தியத்தில் அமைந்துள்ள பங்குகளில் மிகவும் சிறப்பான முறையில் திருப்பாலத்துவ சபையின் திட்டங்களை செயல்படுத்திவரும் பங்கு என்றால் குமுளமுனை பங்கே ஆகும் எனக் கூறினார். அதனை தொடர்ந்து கிளி-முல்லை மறைக்கோட்ட ஊக்குவிப்பாளரின் தலைவர் திருவாளர் றோமியல் உரையாற்றினார். அன்றைய தினம் காலை நிகழ்வின் முடிவாக பல தரப்பட்ட அடையாள விளையாட்டுக்கள் நிகழ்த்தப்பட்டன.

அன்றைய மாலை நிகழ்வாக கலை நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்வின் விருந்தினர்களாக அருள்செல்வி மேரிலதா, குருமட மாணவன் செல்வன் ஜேக்கப் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வினை ஊக்குவிப்பாளர் செல்வி ம. ஓமைக்ஸியா நெறிப்படுத்தினார். மங்கள விளக்கினை அருள்சகோதரி, குருமட மாணவன், பங்குத்தந்தை, திருப்பாலத்துவ சபை தலைவர் செல்வி. அ. கொன்சலா ஆகியோர் ஏற்றிவைத்தனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அருட்சகோதரன் ஜெகத், பிள்ளைகளின் பணியில் பெற்றோரின் ஊக்கமான செயற்பாடு பற்றி உரையாற்றினார். பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அன்பக இயக்குனர் எட்மன் மைக்கல் அடிகளார் தனது உரையில், இச் சபையினுடைய பணி, நோக்கம் பற்றிப் பேசி அப்பணியானது சிறப்பாக நமது பங்கிலே, நமது சமூகத்திலே எமது குடும்பத்திலே அமையவேண்டுமென்று எடுத்துக் கூறினார். நன்றியுரையினை பங்கின் திருப் பாலத்துவ சபை செயலாளர் அ. கிருபமலர் ஆற்றினார்.

**ஊக்குவிப்பாளர்**
**ம. ஓமைக்ஸியா**

## தூய சவேரியாரின் விண்ணகப் பிறப்பின் 450 ஆம் ஆண்டு நிறைவு

**அருட் சகோ. அ.பீ. திருமகன்**

மறைபோதக நாடுகளின் பாதுகாவலராம் தூய பிரான்சிஸ்க் சவேரியாரின் இறப்பின் நானூற்று ஐம்பதாம் ஆண்டு நிறைவு இன்றாகும். இவர் ஒரு பிரவுத்துவ குடும்பத்திலே ஸ்பெயின் நாட்டில் 1506ஆம் ஆண்டில் பிறந்து பாரிஸ் நகரில் படித்து பட்டம் பெற்றார். செல்வமும், கல்வியும், புகழும் சேர்க்க வேண்டும் என்று குறிக்கோளுடன் இருந்தவருக்கு தூய லொயாலா இஞ்ஞாசியாரின் தோழமை ஒரு திருப்புமுனையாக அமைந்தது. மனிதர் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தம் வாழ்வையே இழப்பாராகில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?

1537ம் ஆண்டு இயேசு சபைக் குருவாக திருநிலைப் படுத்தப்பட்டார். 1542ல் கிழக்கு நாடுகளுக்கு மறைபோதக பணிக்காக வந்தார். இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளில் பல ஆயிரக் கணக்கானோரை உண்மை நெறியில் வழி நடத்தினார். பல கட்டங்கள மத்தியில் துணிவுடன் கத்தோலிக்க சமயத்தை ஆசிய மண்ணில் நிலைபெற செய்தார். புதிய சூழல், வேறுபட்ட கலாச்சாரமே தெரியாத மொழிகள் இதன் மத்தியிலும் இறை ஊழியனாக பத்து வருடங்கள் உற்சாகத்துடன் பணியாற்றினார். 1552ல் சீனாவுக்கு செல்லும் வழியில் இறைவனடி இணைந்தார். 1622ம் ஆண்டு இவரை புனிதராக திருத்தந்தை 15ம் கிரகோரியார் உயர்த்தினார். எம் அயல் நாடாம் இந்தியாவில் இவரது திருவுடல் அழியாது பாதுகாக்கப்படுகின்றது.

இவரது பெயருடன் கொழும்புத்துறையில் இயங்கிவரும் குருமடத்தில் இவரது திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இப்புனிதரின் இறப்பின் நானூற்று ஐம்பதாம் ஆண்டு நினைவை நினைவு கூரும் முகமாக இக்குருமடத்தின் முன்றலில் அவரது திருச்சுருவம் திறந்து வைக்கப்படுகின்றது. இயேசு சபையினர் 2002-2003 ஆண்டினை சவேரியார் ஆண்டாக பிரகடணப்படுத்தி செயற்பட உள்ளனர்.

ஐரோப்பியரான சவேரியார் தன்னை ஆசிய மண்ணோடு இணைத்து ஆசிய மக்களின் உற்ற நண்பரானார். பல மிரட்டல்கள் அச்சுறுத்தல் மத்தியில் உண்மைக்காக குரல் கொடுத்தார். தீய வழியில் சென்றவர் பின் சென்று அவர்கள் பாதையை மாற்றினார். நித்தியத்துக்கும் வாழும் ஆன்மாவை வாழவைக்க தன்னை கரைத்தார். பல மைல்கள் பயணமானார். இவர் வீசிய விதைகள் இன்று ஆசியாவில் விருட்சமாகி பலன் கொடுக்கின்றது.

## யாழ் மறைக்கோட்ட இளைஞர் தினமும் முன் எழும் வினாக்களும்

யாழ் மறைமாவட்டத்தில் இவ் ஆண்டு இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு இப்போது நிறைவை நோக்கிச் செல்கின்றது. 'இளைஞர் ஆண்டு' என்று குறிப்பிடும் அளவுக்கு இவ் ஆண்டில் எமது மறைமாவட்டத்தில் இளைஞர்களை நோக்கிய செயற்பாடுகள் பெரிய அளவில் முன்னெடுக்கப்படவில்லை. செயற்திட்டங்கள் பல வகுக்கப்பட்டாலும் செயற்பாடுகள் குறைவாகவே இருந்தன. யாழ் ஆயர் அவர்கள் 'பாதுகாவலன்' தினத்தை முன்னிட்டு வெளியிட்ட சுற்றுமடல் 5/2002 இல் இளைஞர்களுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மீளவும் வலியுறுத்தியிருந்தார்.

இளைஞர் ஆண்டின் இறுதி நாட்களிலாவது சற்று நிறைவையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தும் நிகழ்வு இடம்பெற்றது. யாழ் மறைக்கோட்ட இளைஞர்களுக்கு மட்டும் ஏற்படுத்தியிருந்த தினமாக டிசம்பர் 01 ஆம் திகதி கொண்டாடப்பட்ட 'இளைஞர் தினம்' அமைந்திருந்தது. அதனை முன்னிட்டு பங்கு இளைஞர் அமைப்புக்களிடையே போட்டிகளும் நடாத்தப்பட்டன. ஆனால் இதில் கூட நிறைவுகளுக்கப்பால் சிந்திக்கப்பட வேண்டியதும் கவனிக்கப்பட வேண்டியதுமான அம்சங்கள் நிறையவே இருந்தன.

யாழ். மறைக்கோட்ட இளைஞர் தினம் முதன் முதலாக 1997 டிசம்பர் 14 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அப்போது நிலவிய நெருக்கடி மிகுந்த சூழலில் இந்நிகழ்வு மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தது என்பதுடன் மிக அதிகமான பங்கு இளைஞர் அமைப்புக்களின் பங்களிப்பையும் அதில் காணக்கூடியதாக இருந்தது.

1998ஆம் ஆண்டிலும் "யாழ் மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்' உருவாக்கப்பட்ட பின்னர் அதே வருடம் ஒக்ரோபர் 25இல் 'இளைஞர் தினம்' கொண்டாடப்பட்டது. இதன் போதும் பங்கேற்புகள் மிகவும் அதிகரித்தே இருந்தன.

1999 ஆம் ஆண்டில் 'இளைஞர் தினம்' கொண்டாடப்படவில்லை. அதற்கு பதிலாக ஜூபிலி 2000 ஆண்டின் முதற்பகுதியில் 'இளைஞர் தினம்' கொண்டாடப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றிருந்தாலும் அப்போது இம் மண்ணில் நிலவிய போர்ச் சூழலும், தொடர்ந்து வந்த இடம்பெயர்வுகளும் அதனை இல்லாமல் செய்தன. அதன் பின்னர் மூன்றாண்டுகள் கடந்து இம்முறைதான் மீண்டும் இளைஞர் தினம் கொண்டாடப்பட்டுள்ளது. இடைப்பட்ட காலத்தில் 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 02 இல் இந்தியா - இறைதியான இல்லத்திலிருந்து வருகை தந்திருந்த அருள்தந்தை அகஸ்ரின் முண்டக்கட், சகோதரர் ஜோர்ஜ் ஏகன் ஆகியோரால் நடத்தப்பட்ட இளைஞர்களுக்கான பொது வழிபாட்டிற்காக யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் மதுரம் சதுக்கத்தில் யாழ். மறைமாவட்டத்தின் பல திசைகளில் இருந்தும் ஏராளமான இளைஞர்களும், யுவதிகளும் குழுமியிருந்தார்கள். ஆனால், யுத்த இருள் நீங்கி, அமைதி ஒளி வீசிக் கொண்டிருக்கும் இக் காலத்தில், இடம்பெயர்ந்தவர்கள் மீளவும் குடியமர்ந்து வரும் சூழலில் - பல பங்குகளிலும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள வேளையில் - முன்னர் நெருக்குவாரம் மிகுந்த காலங்களில் இருந்த பங்கேற்புகள் மிகவும் குறைந்த நிலையில் தான் இம்முறை 'இளைஞர் தினம்' கொண்டாடப்பட்டுள்ளது.

இளைஞர் தின நிகழ்வுகளுக்காக பல பங்குகளில் இருந்தும் பல நூற்றுக்கணக்கான இளைஞர்களும், யுவதிகளும் வருகை தந்திருந்தாலும் இன்றைய சூழலில் திருப்தி தரக்கூடியதாக அது இருக்கவில்லை என்பதுடன், முன்னைய இளைஞர் தினங்களுடன் ஒப்பிடுகையில் குறைவு என்றே சொல்லலாம். இதே போல் இம்முறை இளைஞர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளிலும் ஒரு சில பங்கு இளைஞர் அமைப்புக்களைத் தவிர பல பங்குகள் குறைந்தளவு போட்டிகளில் மட்டுமே பங்கேற்றிருந்தன. முடிவுகளைப் பார்த்தால் ஏனைய அமைப்புக்கள் போட்டியிட்டு [illegible] லாம். ஆனால் சில போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற மூன்று அமைப்புக்கள் மட்டுமே பங்கேற்றன என்பது கவலையுடன் நோக்கப்பட வேண்டியது. இத்தகைய கவலை தரக்கூடிய நிலைமைகள் தோன்றுவதற்கு ஏராளமான காரணங்கள் இருக்கின்றன. அவற்றுள் சில நோக்குதற்குரியன.

* இன்றைய இளைஞர், யுவதிகளைப் பொறுத்த வரை ஆலயம் சார்ந்த - திருச்சபை சார்ந்த பணிகளில் - அதில் தாமும் ஒரு அங்கத்தவர் என்ற முறையில் தமக்குரிய பணிகளை ஆற்றும் எண்ணம் அறவே இல்லாது செல்கின்றது. திருப்பலிக்கு செல்வதுடன் தமக்குரிய விசுவாச வாழ்வை அவர்கள் நிறைவுபடுத்திக் கொள்கின்றார்கள்.
* இதே போல், இன்றுள்ள பெற்றோர்கள் ஆலயத்தில் செயல்படும் இளைஞர் மன்றம் அல்லது பாடகர் குழாம் போன்றவற்றில் தமது பிள்ளைகளை இணைய விடுவதில்லை. சிலவேளை பிள்ளைகள் விரும்பினாலும் அவர்கள் தடுத்து விடுகிறார்கள்.
* சில பங்குகளில் மிகவும் குறைந்தளவு அங்கத்தவர்களுடன் அமைப்புக்கள் செயற்படும் போது ஆளணிப் பற்றாக்குறை காரணமாக செயற்பாடுகள் பின்னடைகின்றன.
* அங்கத்துவம் வகிப்பவர்கள் கூட கூட்டங்களில் பங்கேற்பதற்கப்பால், செயற்பாடுகளில் பங்கேற்க விரும்புவதில்லை. உதாரணத்திற்கு, வருடத்தில் ஒரு முறை நடக்கும் இளைஞர் தினத்திற்கு கூட "கிளாஸ் கட் பண்ண ஏலாது" என்று வராமல் விட்ட கத்தோலிக்க இளைஞர் அதிகம் பேர் உள்ளார்கள்.
* செயற்பட முனைபவர்களுக்குக் கூட போதிய ஊக்கப்படுத்தல்கள் இல்லை. இதற்குப் பல பங்குளில் இருக்கும் பங்குத் தந்தையர்களும் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் அவர்கள் கூட இந்த விடயங்களில் போதிய அக்கறை எடுப்பதில்லை. பல பங்குகளில் போட்டிக் காலங்களில் மட்டும் ஞாபகத்துக்கு வரும் இளைஞர் அமைப்புக்கள் பின்னர் செயற்பாடுகள் இன்றி முடங்குகின்றன. இந்த விடயத்தில் மிகுந்த அக்கறை எடுத்து செயற்படும் பங்குத்தந்தையர்களும் இருக்கிறார்கள். அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

இவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தி, புதிய முற்போக்கான சிந்தனைகள் உருவாக்கம் பெறாவிட்டால் இனிவரும் காலங்களில் எமது மறைமாவட்டத்தில் திருச்சபைப் பணிகளில் இளைஞர்களின் செயற்பாடுகள் இல்லாது போகும் நிலைகூட வரலாம்.

எனவே, விரைந்து செயற்பட்டு அடுத்த இளைஞர் தினம் 2003 முற்பகுதியில் யாழ் மறை மாவட்டம் முழுவதையும் இணைத்து நடைபெறும்போது அது முழுமை நோக்கியதாக அமைய அனைவரும் முன்வருவோம்.

*மதுரா,*
*பாண்டியன்தாழ்வு.*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒளிவெள்ள ஆசிகள் குடும்பத்திற்கு

கிறீஸ்து பிறப்பு எமது வாழ்வில். நிறைவும். அமைதியும். மகிழ்வும் நிறைவாக பெற்றுக் கொள்ளவும். பகிர்ந்து கொள்ளவுமான ஓர் உன்னதமான வசந்தகாலம். சமாதானத்தென்றல். அமைதிக்கான வழிகள் எமது நாட்டில் மெதுவாக மலர்ந்து மக்கள் மனதில் நம்பிக்கையின் ஒளி புலர்ந்துள்ளது. இத்தருணத்தில் இன்றைய வாழ்வு சாட்சிய வாழ்வு. சரிந்து விழாமல். அன்பிய வாழ்வு கட்டியெழுப்பி சரித்திரமும், சாதனையும் படைக்கும் அன்பியங்களை உருவாக்கி எமது குடும்ப வாழ்வை நிறைவான மகிழ்வும். அமைதியும் பொங்கும் வாழ்வாக்கி கொள்வோம். எமது குடும்பத்தில் கிறிஸ்து, அன்பிலும். பகிர்விலும், மன்னிப்பிலும், புரிந்துணர்விலும் இனம் கண்டு கொள்வோம். இவ்வேளையில் அனைத்து குடும்பங்களுக்கும் கிறீஸ்து பிறப்பு நல்வாழ்த்துக்களையும். புதுவருடத்தில் நல்லாசீர்களைப் பெற்றுக் கொள்ளவும், எமது வாழ்த்துக்கள். புதிய வருடத்தில் நாம் எம் குடும்பத்தை அன்பியக் குடும்பமாக வாழ எமது குடும்பத்தை அர்ப்பணித்துக் கொள்ளுவோமென புதுவருடத் தீர்மானமாக்கிக் கொள்ள எமது நல்லாசீகள்.

# இளமை இறைவனின் கொடை

ஒளியாகிய கிறிஸ்து என்றும் இளையோர் உள்ளங்களில் ஒளி வீச நல் வாழ்த்துக்ளும். புதிய வருடத்தில் இளமையை நிறைவான, வளமான காலமாக அமைத்துக் கொள்ளவும் திறமைகள், ஆற்றல்கள் என்பனவற்றை பன்மடங்காக்கிக் கொள்ள எமது ஆசிகளும் செபங்களும்.

கடந்த காலங்களை எண்ணி மனம் சோர்ந்து போகாமலும், இளமை இறைவனின் கொடை என்பதை எண்ணி ஒவ்வொரு இளையோரும் புதிய எண்ணங்களையும், நல் எதிர்பார்ப்புக்களையும் உருவாக்கிக் கொள்ள வேண்டுமென ஆசிக்கின்றோம். புதிய சமுதாயமாக நாம் திகழ இளையோரிடமிருந்து பெற்றோரும் பெரியவர்களும் இன்று எதிர்பார்ப்பது காலத்திற்கேற்ற பண்புகளையும், போக்குகளையும், நல் உணர்வுகளையுமே. மயமான ஆக்கபூர்வமான செயற்பாடுகளையே, இன்றைய சூழ்நிலையில். ஒவ்வொரு இளையோரும் தமது நிலைப்பாடுகளை சற்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பது ஜதார்த்த நிலையாக இருக்கிறது. . காலத்திற்கேற்றவாறு புதிய சிந்தனைகளையும், நம் உணர்வுகளையும் இளையோர் அனைவரும் உருவாக்கி, வாழ்விற்கு பொருள் கொடுப்போம் என்னும் திடமான உறுதியை உருவாக்கிக் கொள்ளுவோம்.

மேலும் ஒரு புதிய வருடம் எம் கையில் கொடுக்கப்பட விருக்கிறது. அவ் அருமையான காலதை எனக்கும், சமூகத்திற்கும் உகந்ததாக்கிக் கொள்ள எமது ஆசிகளும் வாழ்த்துக்களும்.

அருட்தந்தை சாள்ஸ் கொலின்ஸ்

# மெசியா எங்கே பிறப்பார்

'எதிர்பார்ப்பது' மனித இதயத்தின் தணியாத தாகம். அதுவும் முழுமனித விடுதலையை வழங்கும் மெசியாவின் பிறப்பை எதிர்பார்ப்பது



மேலான தாகம். ஆதாம் கீழ்ப்படியாமையால் இறையுறவிலிருந்து பிரிந்து சென்றார். மனிதனை தம் சாயலாகவும், பாவனையாகவும் படைத்த கடவுள் தம் உறவில் அவனை மீண்டும் இணைக்க மெசியாவை அனுப்புவதாக வாக்களித்தார். மெசியாவின் வருகைக்காக இஸ்ராயேல் இனத்தை தேர்ந்தெடுத்து ஆயத்தம் செய்தார். அவர்கள் காலத்துக்குக் காலம் இறைத்திட்டத்திலிருந்து விலகி வாழ்ந்த போதும் மெசியாவின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

இஸ்ராயேல் மக்கள் ஆவலோடு மெசியாவை எதிர்பார்த்தது பெத்தலகேம் மாட்டுத் தொழுவத்தில் அல்ல, வறிய ஏழைப்பெண் மரியாவின் வயிற்றிலுமல்ல, தச்சன் யோசேப்பின் அரவணைப்பிலுமல்ல மாறாக மாடமாளிகையில், அரசபரம்பரையில், பஞ்சு மெத்தையில், பாலும்தேனும் பருகும் செல்வக் குடும்பத்தில் வரவிருக்கும் மெசியா தமது யூத இனத்தின் அடிமைப்படுத்தி, ஆட்சிபுரிகின்ற உரோமை அரசுக்கு எதிராக போரிட்டு யூத இராச்சியத்தை உலகெங்கும் நிறுவுவார் என எதிர்பார்த்தனர் பலர். ஏரோதியர் தம் பரம்பரையில் அவர் பிறந்து தமது ஆட்சியை நிலைக்கச்செய்வார் என எதிர்பார்த்தனர். ஆனால் இயேசுவின் எளிய பிறப்பு அவர்களுக்கு ஏமாற்றமாக அமைந்தது.

பெத்லகேமின் சத்திரங்களின் கதவுகள் தட்டப்பட்டபோது ஏழைப் பெண் மரியாவைக்கண்ட உரிமையாளர்கள் கதவுகளை அடைத்தனர். ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்தது பணம் கதவுகள் அனைத்தும் மூடப்பட்டன, ஆனால் பாலகன் இயேசுவை பெற்றெடுக்க மாட்டுத்தொழுவம் மட்டும் வரவேற்று நின்றது. மெசியாவின் பிறப்பை எதிர்பார்த்த யூதர் ஏழையாக பிறந்த அவரை இனம் கண்டுகொள்ளவில்லை. ஆனால் கிழக்கு தேசத்தில் இருந்து ஞானிகள் அவரை இனம் கண்டு அவரை தேடி வந்தனர். ஏமாற்றம் அடைந்த ஏரோது மெசியா எங்கே பிறப்பார் என்று மறைநூல் அறிஞர்களிடம் கேட்டறிந்து மெசியாவை கொலை செய்யவும் முற்பட்டான்.

மெசியர் பிறந்தது ஒரு வரலாற்று நிகழ்வு. இன்று அது ஒரு ஆன்மீக நிகழ்வு. கடவுளிடமிருந்து பிரிந்து சென்றவர் கடவுளிடம் திரும்பும் போது, மனித மாண்பு மதிக்கப் படும்போது, மனிதன் அடிமைத் தனத்திலிருந்து, அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறும்போது, பறிக்கப்பட்ட மனித மாண்பு மீளளிக்கப்படும்போது, சமய, சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள். மனித வாழ்வை மேம்படுத்தும் போது, அமைதி இழந்தவர்கள் அமைதி பெறும் போதெல்லாம் மெசியாவின் பிறப்பு இன்றும் நடந்தேறுகின்றது.


இன்று மெசியா எம் ஆலய கதவுகளை அல்ல, வீட்டுக் கதவுகளை அல்ல மாறாக எம் உள்ளக் கதவுகளையே தட்டுகின்றார். எம் உள்ளத்திலே அவர் பிறக்க விரும்புகின்றார். கிறிஸ்து பிறப்பு ஓர் மகிழ்வின் கொண்டாட்டம். இவ் விழைவை கொண்டாட பல வண்ண அலங்காரங்கள், புத்தாடைகள். இனிய தீன் பண்டங்கள் என வெளிக் காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டு ஆயத்தங்களை மேற்கொள்கின்றோம். ஆனால் இவ் வாயத்தங்கள் சிலவேளைகளில் எம் உள்ளத்தை ஆயத்தம் செய்ய தடைகளாக அமைகின்றன. கிறிஸ்மஸ் விழாவின் பிரதமநாயகன் இயேசு என்பதை மறக்க வைக்கின்றன.

போரினால் காயப்படுத்தப்பட்ட, சோர்வுற்ற எம் உள்ளங்களிலே, அமைதிக்காக, விடுதலைக்காக ஏங்கித் தவிக்கின்றன எம் உள்ளங்களிலே பிறக்க விரும்பும் இயேசுவுக்கு எம் உள்ளத்தை கொடுப்போம். எம் உள்ளத்திலே உள்ள பாவ மாசுகளை களைந்து தூய்மைப்படுத்துவோம் அப்போது எம் உள்ளம் இறைவன் வாழும் இல்லமாக மாறும். பாலகன் இயேசுவின் குடிலாக மாறும். அங்கே எம் மீட்பர் மெசியா அமைதியின் அரசராக பிறப்பார். நாம் அமைதியின் தூதுவர்களாவோம். எம் நாடு அமைதியின் நாடாக மாறும். நாம் கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா அர்த்தமுறும்.

சகோ. இ. பெ. தயாபரன்

# மாடடை குடிலில் மாபரன் இயேசு

மறையாசிரியர் இ.ம.ஜெயசீலன்



பண்டிகை என்றால் கொண்டாட்டம். புத்தாடை, பட்டாசு, விதவிதமான அலங்காரங்கள், பலவிதமான பலகாரங்கள், இன்னிசைக் கீதங்கள், வாழ்த்து ஒலிகள், கிறிஸ்து பிறப்பு விழாப் பண்டிகையின்போது எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி இயேசு பிறப்புச் செய்தி, விண்ணும் மண்ணும் இணைந்தது. இயேசுவின் பிறப்பால் ஏழைகள், ஒடுக்கப்பட்டவர், துன்பச்சுமையில் வாடுவோர், மகிழ்ச்சியும் விடுதலையும் பெற்றது. இயேசுவின் பிறப்பால் இறைவன் மீட்பு நமக்குக் கிடைத்தது. கிறிஸ்து பிறப்பு விழா மகிழ்ச்சியின் விழா. ஆனால் அவ்விழா அர்த்தம் பெற வேண்டும். உண்மையான உன்னதமான மகிழ்ச்சியைத் தரவேண்டும். இயேசுவின் பிறப்பை இரு நற்செய்தியாளர் கூறுகின்றனர். லூக்கா இயேசுவை வரலாற்று நாயகனாகக் காட்டி நிற்கின்றார்.

## பெத்லகேமில் உதித்த ஒளி

அகுஸ்து சீசர் தன் ஆளுகைக்குள் வாழும் மக்களின் தொகையை கணக்கிட விரும்பினான். அதன்படி சிறிய நாட்டில் குரேனியு என்பவன் ஆளுநராய் இருந்தபோது மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. தம் பெயரைப் பதிவு செய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். தாவீதின் வழி மரபினரான யோசேப்பும் தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு பெயரைப் பதிவுசெய்ய, கலிலேயாவிலுள்ள நசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். (லூக்2:3-5)

அக்காலத்தில் உரோமையரின் வழக்கப்படி மக்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்ய தத்தம் சொந்த ஊருக்குத்தான் செல்ல வேண்டும். எகிப்தில் கிடைத்த ஒரு பப்பிரஸ் ஓலைச்சுருள் இத்தகைய பழக்கத்திற்கு சான்று பகர்கின்றது. எகிப்திலே நடத்தப்பட்ட ஓர் உரோமைய கணக்கெடுப்பு பற்றி விபரிக்கும் இந்த சுருள் திருமணமான பெண்களும் கணக்கெடுப்பில் பதிவு செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றது. எனவே தான் யோசேப்பும் அவர் மனைவி மரியாவும் பெத்லகேம் ஊருக்குச் சென்றனர். அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. (லூக் 2:6) எனவே இயேசு பெத்லகேமில் பிறந்தார் என்பது வரலாற்று உண்மை.

யோசேப்பும் மரியாவும் பெயரைப் பதிவு செய்யச் சென்றனர். (லூக் 2:3-5) இக்கூற்றை ஏற்றுக் கொள்வதில் சில முரண்பாடுகள் உள்ளன. யோசேப்புஸ் என்ற வரலாற்று ஆசிரியரின் கருத்துப்படி இக்கணக்கெடுப்பு கி.பி. 6-7ம் ஆண்டு எடுக்கப்பட்டது. இக்கணக்கெடுப்பை யூதத் தீவிரவாதிக் கலிலேயனான யூதாவின் தலைமையில் எதிர்த்தனர். (தி.ப. 5:37) மத்தேயு நற்செய்திப்படி (மத்.2:1) பெரிய ஏரோது பலஸ்தீனா நாட்டை ஆட்சி செய்தபோது இயேசு பிறந்தார் என கூறுகிறார். இந்தப் பெரிய ஏரோது கி. பி 4ல் இறந்துவிட்டான். எனவே பிரச்சனை எழுகிறது. லெக்ரான்ச் என்ற அறிஞர் கூற்றுப்படி இரண்டு கணக்கெடுப்புக்கள் நடந்திருக்க வேண்டும். ஒன்று கிபி 6-10 ஆண்டுகளில் மற்றது கி.மு. 6-10 ஆண்டுகளில். எகிப்தில் பதினான்கு ஆண்டுக்கு ஒருமுறை இவ்விதம் கணக்கெடுப்பு நடந்ததாக தெரிகிறது. மேலும் கி. மு. 9-10 இல் எகிப்திய மாகாணங்களில் உரோமையர் புதிய வரிகளை விதித்தனர் என்பதற்கு சான்றுகள் உள்ளன. எனவே கி. மு 6-10 ல் நடந்த கணக்கெடுப்பு பெரிய ஏரோதின் ஆட்சிக் காலத்தோடு ஒத்து வருகிறது. வேறு சில அறிஞர்களின் கருத்துப்படி இக்கணக்கெடுப்பு நடந்த ஆண்டில்தான் இயேசு பிறந்தார் என்பதை உணர்த்துவதுதான் லூக்காவின் நோக்கம் என்பர்.

## குடிலில் உதித்த ஒளி

மரியாவுக்கு பேறுகாலம் வந்தது. அவர்தம் தலை மகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதித்து தீவனத் தொட்டியில் கிடத்தினார். (லூக் 2:6-7) வழக்கமாக நாம்காணும் கிறிஸ்மஸ் கொட்டில்கள் மாட்டுத் தொழுவச் சாயலில் சித்தரிக்கப் பட்டிருக்கும். இயேசு பிறந்தது மாட்டுத் தொழுவத்திலா? லூக் 2:7 இல் மொழிபெயர்ப்பில் சிறு பிரச்சினை ஒன்று உண்டு. விடுதி என்ற சொல்லுக்கு லூக்கா பயன்படுத்தும் கிரேக்கச் சொல் 'கத்தலுமா' (Kataluma) இச்சொல் சுமைகளை இறக்கி வைக்கும் ஒரு இடத்தைக் குறிக்கும். எனவே பயணிகள் தங்கும் விடுதியாகவோ அல்லது ஓர் வீட்டின் அறையாகவோ இருக்கலாம்.

இயேசுவின் காலத்து யூதர்களின் வீட்டு அமைப்புப் பற்றி ஆராயும்போது மாட்டுத் தொழுவத்திற்கான புதிய விளக்கம் கிடைக்கின்றது. யூதேயா மக்கள் மலை முகடுகளில் குடியிருப்புக்களை அமைத்தனர். மலை ஓரமாக வாழ்ந்தவர்கள் குழிகளையும் குண்டுகளையும், தானியங்களைப் பாதுகாக்கும் அரங்குகளாகப் பயன்படுத்தினர். மலைமேல் வீடுகட்டியவர்கள் மலையை குடைந்து கல்லையும், மண்ணையும் எடுத்து மேலே வீடு கட்டினர். கல்லும் மண்ணும் எடுக்கப்பட்ட குகைகளில் தானியங்களை வைக்கோல்களைப் பாதுகாத்தனர். குளிர்காலங்களில் அக்குகைகளில் தங்கள் கால்நடைகளையும் அடைத்து வைத்தனர்.

இது போன்ற வீட்டிற்கு கீழே உள்ள குகை, தொழுவமாகப் பயன்படுத்தப்பட்ட குகைதான் இயேசு பிறந்த மாட்டுத் தொழுவக் குகையாகும். யூதரின் வீடுகள் தற்கால வீடுகள் போல் அல்ல. ஒரு சதுரமான பெட்டி போன்ற வடிவத்தில் அமைந்த வீடு. மக்கள் பலர் கணக்கெடுப்பிற்காக வீடுகளில் கூடியிருந்தபடியால் மகப்பேறு நடைபெறுவதற்கு ஏற்ற இடமாக வீடுகள் இல்லாதபடியாலும் வீட்டிற்கு கீழே உள்ள குகை போன்ற அந்த அமைதியான இடத்தில் இயேசு பிறந்தார். பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார். (லூக் 2:7) தீவனத் தொட்டிகள் எம் நாட்டில் உள்ளது போன்றதல்ல. கல்லிலே வெட்டப்பட்ட செவ்வக வடிவமாக ஒரு தொட்டி அல்லது களிமண்ணால் செய்யப்பட்டதாக இருக்கலாம். இதில்தான் மிருகங்களுக்கு உணவு தண்ணீர் வைப்பர். அப்படிப்பட்ட தீவனத் தொட்டியிலே இயேசுவை மரியாள் கிடத்தினாள்.

## ஆண்டவரின் மாட்சி உதித்தது

இயேசு பிறந்த செய்தி முதலில் இடையர்களுக்கு அறிவிக்கப் படுகின்றது. பெத்தலகேமை அண்டிய பகுதிகளில் யூதேயாப் பாலைவனத்தின் எல்லைப் பகுதிகளிலும் இக்காலத்தில் வாழும் 'பெடுயினர்' போல அக்காலத்தில் இடையர்களும் நாடோடிகள். அவர்கள் பரந்த வெளியில் வாழ்ந்தனர்.

இடையர்கள் பல காரணங்களின் நிமித்தம் பொதுமக்களால் வெறுக்கப்பட்டனர். இவர்கள் நேர்மையற்றவர்கள், கள்வர்கள் என்று சட்டம் கருதியது. யுதர்களின் நோக்கில் மந்தை மேய்ப்போர் அல்லது இடையர்கள் மிக மோசமான தொழில் செய்பவர்களாக "மிட்றாஷ்" அழுத்திக் கூறுகின்றது. பிலோவும் இதே பாணியில் இடையர்களைப் பற்றி கூறுகின்றார்.

"அஞ்சாதீர்கள் இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்(லூக் 2:10:11) என்று வானதூதர் இடையருக்கு மகிழ்ச்சி நற்செய்தியை அறிவிக்கின்றார். இயேசு ஒடுக்கப்பட்டவர்களை மீட்க வந்தார்.

பெத்தலகேமுக்கு கிழக்கே உள்ள நிலம் போவாசு - ரூத் நிலம் என அழைக்கப்படுகிறது. இச் சமவெளியில்தான் இடையர் முதன் முதலாக இயேசு பிறப்பு பற்றிய நற்செய்தியைப் பெற்றனர் என்பது மரபு. அதை நினைவுறுத்த இங்கு மூன்று ஆலயங்கள் உள்ளன. ஏரோணிமுஸ், ஆர்குல்புசு ஆகியோர் பெத்லகேமுக்கு கிழக்கே ஆயிரம் அடி தூரத்தில் ஒரு கோபுரம் இருப்பதாகவும் இதுதான் இடையர் காட்சி பெற்ற இடம் என்றும் எழுதியுள்ளனர்.

இடையர்கள் தமக்கு வானதூதரால் அறிவிக்கப்பட்ட அடையாளத்தை காண்கின்றார்கள்.(லூக் 2:11-12) இவர்கள் இயேசுவின் பிறப்பிற்கு உண்மைச் சாட்சிகள். அவர்கள் இயேசுவுக்கு விலையுயர்ந்த பொருட்களை வழங்கவில்லை. மாறாக இயேசுவின் பிறப்பின் செய்தியை எங்கும் அறிவித்தனர்.

இயேசுவைக் கண்டவர்கள் கேட்டவர்கள் அவரை மற்றவர்களுக்கு அறிவிக்க கடமைப் பட்டவர்கள். எனவே இயேசுவின் சீடர்களாக திருமுழுக்கினால் அழைக்கப்பட்ட நாமும் நாம் பெற்ற இயேசு என்னும் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிப்போம்.

# கைதிகளின் நத்தார்

**யாழ் ஆயர் களுத்துறை சிறைச்சாலைக்கு அண்மையில் விஜயம் செய்தபோது பாதுகாவலன் பத்திரிகைக்கென ஆயரிடம் கொடுத்தனுப்பப்பட்ட கவிதையை அப்படியே பிரசுரிக்கிறோம்.** (ஆ-ர்)

எத்தனை நத்தார்கள் இக்கொடும் சிறைதனில்
ஏங்கிடும் நெஞ்சங்கள் கைகளில் விலங்குகள்
ஏற்றங்கொள் மாகிழ்வு நமக்கேது இம் மண்ணில்
ஏசு பாலனே எம் குரல் உமக்காவது கேட்கிறதா?

மாடடைக் குடிலில் மானிடனாய் உதித்தீர்
மாசற்ற பாலகனே பாரினில் பிறந்தீர்
மாபெரும் வதைகளுடனே களுத்துறையில் வாடும் எமக்கு
மகிழ்ச்சிபொங்க விடுதலை வாங்கித் தருவாயோ?

சர்வமும் சிருஷ்டித்த சின்னப் பாலனே
சமகால சமாதானத்தை நாட்டுக்கு தந்தவனே
சகலமும் இழந்து விழிநீர் வடிக்கு மெம்மை
சீக்கிரம் விடுவிக்க விரைந்து வருவீரோ?

பொன் தூபம் வெள்ளைப்போளம் கொண்டு
ஞானிகள் அவர் தொழுதனர் நீர் பிறந்தபோது
கைகளில் விலங்குகள் கனக்க கரமகூப்பி இன்று
கைதிகளாய் தொழுகின்றோம் பதில் கொடுப்பீரோ பாலனே?

தமிழ் தேச மண்ணில் சவுக்குமரம் நட்டு - அதனை
கண்கவரும் விண்ணகக் கோலமாய் அலங்கரித்து
தித்திக்கும் இனிப்பு தீனிகள் பரிமாறினோம் அன்று
திசைதெரியாக் காட்டில் இன்று கலங்குகிறோம் காண்கிறீரோ?

பாலனே உம்பிறப்பு காலத்தில் யுத்தங்கள் ஓய்ந்தன
பாரெங்கும் பேச்சுக்கள் உற்சாகமாய் தொடர்கின்றன
பரதேசிகளாய் ஆகிவிட்ட தமிழ் அரசியற் கைதிகளெம்மை
பட்சபாதமில்லாமல் மீட்க இயேசு பாலகனே ஓடிவருவீரோ?

நெஞ்சுக்குள் எங்களின் நெருடல்கள் புரியாத
நேசமில்லா மறுதரின் சட்டங்கள் சமைத்த
பயங்கரவாதிகளா நாங்கள் நீ சொல்லு பாலனே
பனித்துளியாய் எம் தயர் மறைய இரங்குவீரோ
இந்நன்நாளில்?

எறிக்எஸ். யேசுதாஸ். தமிழ் அரசியற் கைதி
களுத்துறை சிறைச்சாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படுந்துயரம் பாருமையா!

அன்று பிறந்தார் புரட்சி பாலகன்
இன்று பிறந்துள்ளார். தமிழரின் விடிவுக்காய் தலைவர்
அவ் தலைவர் வழியில் தமிழ் மக்கள்
என்றும் சமாதானமாக வாழ நினைக்கிறார்கள் தமிழ் நெஞ்சங்கள்

சென்ற மார்கழி யுத்த நிறுத்தத்தில் பிறந்தார் யேசு
இவ்வருட மார்கழியில் சமாதானத்தில் பிறப்பார் யேசுபாலகன்
சமாதானத்தின் நல்வழிகாட்டி பாலகன்
அவ் பாலகனின் ஆசி காலம் காலம் மாறும் அரசியல்வாதிக்கு

சமாதானம் என்ற வாகனத்தை கவனமாக நோர்வே செலுத்துகிறது
அவ்வாகனம் பவனி வர அரசும், புலிகளும் இரு சக்கரம் ஆகவேண்டும்
அவ் சமாதான வாகனம் மேல் தமிழ் மக்கள் ஏற வேண்டும்
அவ் சமாதான வாகனத்தின் சாரதி தலைவராக வேண்டும்

அன்று மடிந்த வித்துடல்கள் சமாதான வாகனத்துக்கு
நல்லாசி கூறவேண்டும். அதுமட்டுமல்ல விண்ணிலும் பறை
சாற்ற வேண்டும்
சமாதான வாகனம் சுழன்று செல்ல - புரட்சி
பாலகன் அருளும் ஆசியும் வழங்க வேண்டும்.

*பதுமன்*
*ஏழாலை.*

## எல்லாமானார் யேசு

அன்பு மழையிலே அகிலம் நனைந்திட அன்பனானார் - யேசு
அதிகார வெறியை அடியோடொழிக்க அரசனானார் - யேசு
ஆணவமும் அகந்தையும் அழிந்தொழிந்திட ஆண்டவனானார் - யேசு
ஆசைப் புயலில் அகிலம் அமிழ்ந்திடாமல் ஆதரவானார் - யேசு
இல்லங்கள் தோறும் இறை ஒளி வீச இறைவனானார் - யேசு
இல்லாமை நீங்கி இன்பம் தழைத்தோங்க இறையருள் பொழிந்தார் - யேசு
ஈனர் எமக்காய் இன் உயிர் ஈந்தார் - யேசு
ஈரமான இதயங்கள் இம்மையில் செழித்திட இறையருள் ஈந்தார் - யேசு
உண்மை அன்பு உலகில் உதிக்க உத்தமனானார் - யேசு
உயர்ந்த பண்பை உலகிற்களிக்க உயிர்த்தியாகம் செய்தார் - யேசு
ஊரூராய்ச் சென்று உண்மை நெறி உரைத்தார் - யேசு
ஊக்கமுடையோர் உலகில் உயர்ந்திட ஊழியம் செய்தார் - யேசு
எதிரியை மன்னித்து ஏற்றும் படிப்பினை தந்தார் - யேசு
எல்லோர் மனதிலும் எப்போதும் வாழ்கின்றார் - யேசு
ஏழ்மை நிலையில் எம்மை மீட்கப் பிறந்தார் - யேசு
ஏற்றத்தாழ்வினை நீக்கிட ஏழையாகப் பிறந்தார் - யேசு
ஐயம் நீங்கி ஆனந்தம் நிறைந்திட அகிலத்தை வென்றார் - யேசு
ஐந்து திருக்காயங்களை எமக்காகத் தம் உடலில் ஏற்றார் - யேசு
ஒற்றுமையே பலம் என்றுலகுக்கு எண்பித்தார் - யேசு
ஒன்றுபட்டு இறையரசிற்காக உழைத்திட அழைப்பு விடுத்தார் - யேசு
ஓதும் வேதமே என்றும் எமது - யேசு
ஔடதம் எமக்கு என்றுமே - யேசு

*மே. மேரி அஜந்தா*
*பாஷையூர்*

## பொறுத்திருந்து பார்ப்போம்

மனுக்குலத்திற்கே மீட்புத் தரும் விடி வெள்ளியாய்
சூசை, மரியின் குலப் பெருமை கூறும் குலக் கொழுந்தாய்
ஏழை, எளியவர், அநாதை, விதவைகளின் ஆறுதலின் கேடயமாய்
எம்மவரின் பாவ இருளை நீக்கி ஒளியூட்டும் ஒளி விளக்காய்
அன்று மாடடைக் குடிலில் பிறந்தார் எம் பெருமான் இயேசு
ஆனால் இன்று மனித நேயம் சிதைவடைந்து, மனித மாண்பு அழிவடைந்து
சாதி, இன, மத, மொழி பிரிவினைகளினால் பிளவுபடும் மனிதகுலம் எம் இதய நாயகனின் இவ்வருட பிறப்பினாலாவது மனந்திருந்துமா.............?
இல்லை, வேதாளம் முருங்கை மரத்திலேறிய கதைதானா? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*ஜெ. மரியனி கயானி*
*யா;அடைக்கல அன்னை ஆலயப்பங்கு*

## ஏன் இந்தக் கோலம்

ஏழ்மையின் மகனாக எளிய உருவினிலே
மாபரன் இயேசு அவதரித்த மார்கழி மாதம் இது.
நடுங்கும் குளிரினிலே மாடடைத் தொழுவத்திலே
ஏழைத் தச்சன் மகனாக உதித்தார் பாலக இயேசு.

அண்டசராசரங்கள் அனைத்தையும் அழகழகாகப் படைத்த இறையோனுக்கு, தலைசாய்த்துத் துயில் கொள்ள இடமில்லையென்றால் உலகமே வியப்புறும். படைப்புக்கள் அனைத்தையும் வாழ்விக்க, பற்பல வழிகளைச் சிறப்புடன் அமைத்து அளித்த, தெய்வம், நாம் தங்குவதற்கு வீடு வீடாக, இடம் தேடி, இரந்து நிற்பது மிகவும் பரிதாபத்திற்கு உரிய விடயமாகும்.

"ஏன் இந்தக் கோலம்" இது கிறிஸ்து பிரானுக்கு ஏற்பட்ட சோதனையா? அன்றி வேதனையா? என சிந்தித்துப் பார்ப்போமானால், இறைத்திட்டமானது அவரது வாழ்வில் எந்தளவிற்குச் செயற்பட்டது என அறிந்து கொள்ளலாம்.

இன்றைய நவீன உலகின் போக்குகள் யாவும், யாவரையும் நரகப் பாதைக்கு இட்டுச் செல்கின்றது என்றால் அது மிகையாகாது. வீண் விரோதங்களும், ஆசாபாசங்களும், அநாகரீகமான செயற்பாடுகளும், மனித வாழ்வில் குறுக்கிட்டு, ஒவ்வொரு மனிதனையும், அவனது நல்வாழ்விலிருந்து தவறி வாழச் செய்கின்றது. பெற்றோரென்ன, பெரியோரென்ன, மூத்தோரென்ன எத்தகைய அறிவுரைகளை எடுத்துரைத்துவந்தாலும் இவற்றையெல்லாம் கேட்டு, அதன்படி வாழ யார் உள்ளனர்?

அன்று மீட்பர் மெசியா பிறந்த செய்தி முதலில் யாருக்கு அறிவிக்கப்பட்டது? ஆம், உளத்திலும், உடலிலும் ஏழ்மை நிலையில் வாழ்ந்து நின்ற இடையர்களுக்கே இம்மாபெரும் செய்தி வழங்கப்பட்டது. இத்தகையவர்கள்தாம் இறைஇயேசுவின் இதயத்தில் இடம்பிடித்துள்ளனர்.

எனவே ஏழை இடையர்களின் எளிய மனம் எம்மவர்க்கெல்லாம் இல்லையேல் நாம் இன்றென்ன, நாளையென்ன எக்காலமும் நாம் கொண்டாடிவரும் நத்தார் விழாவுக்கு அர்த்தமும் இல்லை. நான் என்ற நிலை மாறவேண்டும். நாம், எம் என்ற நிலை உருவாக வேண்டும். தன்னலம் துறந்து பிறர் நலம் காண முன்வருவோம். இல்லாதோர் இயலாதோரை நாம் இனம்கண்டு அவருக்கு எம்மாலான உதவிகளைப் புரிந்து வாழ்ந்து கிறிஸ்து பிறப்பு விழாவுக்கு அர்த்தம் காண்போம்.

# தேடிடும் அமைதியை அருளிடும் அரசராய் வா!

மண்ணிலே மாமன்னன் மகனாகப் பிறந்த நாள்
விண்ணதிர வானவர் வாழ்த்துக்கள் பொழிந்த நாள்
ஏழ்மைக்கும் தாழ்மைக்கும் எழிலான பிறந்த நாள்
பெருமையும் இறமையும் பதராக பறந்தநாள்
பொன் தூபம் மீறையொரு சமத்துவம் இணைந்த நாள்
வெண்கொடி பகைமையை வென்றிங்கே உயர்ந்த நாள்

பகைமையும் விரோதமும் தலைக்கேறி அழிந்தோம்
தகைமையும் பெருமையும் இழந்துமே அலைந்தோம்
உள்ளத்தில் சமூகத்தில் அன்பினை மறந்தோம்
பள்ளத்தில் வீழ்ந்தும் சமூக சீரழிவில் நுழைந்தோம்
அமைதி எங்கே? அமைதி எங்கே? என அனுதினமும் ஓடினோம்
சுமைகள் தீர்ப்பது உம்பிறப்பென உமை நாடினோம்.

சமாதானம் நிலைபெற விரைந்திங்கே பிறந்து வா!
கொடுமைகள் அகன்றிட குழந்தையாய் தவழ்ந்து வா!
அடிமை நாம் நிமிர்ந்தெழ உரிமையின் குரலாய் வா!
கூடிடும் பேச்சிலே குறைவின்றி நிறைவைத் தா!
தேடிடும் அமைதியை அருளிடும் அரசராய் வா!
வாடிடும் எம் தேசம் வழம்பெற வரம் நீ தா!

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

# வரமதை நீ தந்திடையா

*ஆண்டவரால் அர்ச்சிக்கப்பட்டு அவதரித்த*
*அருள் வடிவே அன்பின் உருவே*
*மாசுகள் அகற்றிடவே உருவெடுத்த – எம்*
*யேசுபாலனே மீட்பின் தேவனே.....!*

*யுத்தத்தால் எம் மக்கள் சிந்திய*
*ரத்த கறைகள் இன்னும் காயவில்லை*
*மன போராட்டம் ஓயவில்லை – தினம்*
*மௌனங்கள் வெடித்து இதயம் குமுறுது.....!*

*அமைதி தாராயோ இறைவா – எம்*
*சுமைகள் தீர்ந்திட உள்ளத்தில் பிறந்திடு*
*காத்திடு பாவம் போக்கிடு*
*கன்னி மரியின் திருப்பாலா......!*

*குவலயம் மீட்க உதித்த இறைமகனே*
*குழந்தை உருவில் வந்த சமாதான நாதனே*
*எல்லார் வீழிகளிலும் விடிவை காட்டு*
*எக்காலமும் எம்முடன் இசைமீட்டு.........!*

*தற்கால சூழ்நிலையில் கனிந்திட்டும்*
*தானத்தில் உயர்ந்த தானம் – அதுவே*
*போர்க்காலமதை போக்கிவரும் சமாதானம்–இதை*
*வெற்றியுடன் கொண்டுவா திருப்பாலா..........!*

ஜோ. ஜெஸ்ரின்.

### விடுதலை தேடும் வேதனை உலகில்

| விடுதலை | தேடும் | வேதனை | உலகில் |
|---|---|---|---|
| ...*.... | ...*.... | ...*.... | ...*.... |
| விடுதலை விடிவுகள் | தேடும் அளிக்கும் | வேதனை வேந்தே! | உலகில் வருக |
| இயல்பு அபயம் | வாழ்வை கொடுக்கும் | வளமை ஆயனே! | திருப்பி வருக |
| புண்பட்ட அண்ணலின் | பூமியைப் ஆசிகள் | புதுப்பிக்க அமைதி | வருகின்ற தருமே, |
| அழிப்பு குளிர்நிழல் | இழப்பு கொடுப்பீர் | அடிமைத் குழந்தை! | தவிப்பில் யேசுவே! |
| இன்னுயிர்த் மன்னிப்பு | தியாகம் வேண்டும் | இறையருள் "மானிட | சுவைக்க மகனே!" |
| சித்தம் கத்தும் | கலங்கிச் குரலைக் | சிதறிய கேட்பீர் | மந்தைகள் சுவாமி! |

*ஞா. அரியமலர்*
*மிருசுவில்*

# ஏழைக்கோலமாய் இயேசு பிறந்துவிட்டார்

ஒளியுடனே உருவெடுத்து யேசு பாலன்
உன்னதமாய் எமை நோக்கி பிறப்பெடுத்தார்
காலமதாய் பல மக்கள் படும் அவலம் போக்க
யேசு!
பார் முழுதும் பாவங்கள் யாவும் தீர
வென்றார்..............
படும் கொடுமை யாவும் இன்னல்
பட்டவர்களெல்லாம்..........
மீட்பர் யேசு பாலன் செய்த புதுமையதை வியந்து
நின்றார்?
இறந்தவனின் புகழுடலும் எழுந்த செய்தி........!
பாலன் யேசு செய்த செயல் உண்மையென
அறிந்து கொண்டார்.
பாவமதை பல வழியில் சுமக்கும் மக்கள்............
தீய வழி நன்மை பெற யேசு மீண்டும்
எம் நிலைமை மாற்றவென்றே நாளை வருவார்!
நல்ல உள்ளம் கொண்ட மக்கள் மீட்பு அதை..........
அன்புடனே அவர் தருவார் இது உண்மை !
எந்த இன்னல் கொடுமை நூறு மண்ணில் நாங்கள்
பட்டாலும், எங்கள் மீட்பர் யேசுவாலே புதுமை
காண..............
தூய உள்ளம் கொண்ட உண்மை தோன்றும்
மண்ணில்............
நம் மீட்பர் பாலயேசு பிறந்த தினம் எங்கள் நெஞ்சில்
நத்தாரென நிறையுமெங்கும் மனங்கள் நீள..............
உண்மையுடன் அவர் பாதம் நாம் தொழுது
பணிந்திடுவோம் இன் நாளில்.............

*ம. அருள்யோண்சன்*
*புதிய புன்னைநீராவியூர்*
*(விஸ்வமடு)*

MERRY CHRISTMAS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலகன் பிறக்கட்டும் சமாதானம் மலரட்டும்

மார்கழி பிறந்ததும் மனங்கள் மகிழ்வு கொள்ள ஆரம்பிக்கின்றது. காரணம் கிறிஸ்து பிறப்பு விழா. அதுதான் கிறிஸ்மஸ்.

கிறிஸ்து பிறப்பென்றதும் நம் மனங்களில் முதலில் தோன்றுவது இவ்விழாவினை எப்படிக் கொண்டாடலாம்? யார் யாருடன் கொண்டாடலாம் வீட்டை எவ்வாறு அலங்கரிக்கலாம்? துணிமணிகள் எவ்வளவு, எப்படிப்பட்டவை வாங்கலாம்? நத்தார் மரத்தை எப்படி அலங்கரிக்கலாம்? இவை போன்ற புறக்கிரியைகள், வெளி அலங்காரங்கள்தான் முதலிடத்தைப் பெறுகின்றனவேயன்றி, கிறிஸ்து பிறப்பை எப்படி நாம் வரவேற்க வேண்டும்? அவரின் பிறப்பின் மகிமை, எமக்கு அவர் தரவிருக்கும் செய்தி இவைகளில் மனநாட்டம் குன்றிவிடுகிறது.

கிறிஸ்து மார்கழி 25ல் மட்டும் பிறக்கவில்லை, இன்றும், ஒவ்வொருநாளும் எம்மத்தியில் அயலவர் மட்டில் பிறந்து கொண்டே இருக்கிறார். அன்று அவர் ஆடையின்றி பாடையிலே பிறந்ததுபோல, இன்றும் எம் ஊரில் வறுமையில் குழந்தைகள் யேசுவின் ரூபத்தில், சாயலில் பிறக்கின்றார்கள். இவர்களை நாம் மறந்து விடுகிறோம். "சின்னஞ் சிறிய இவர்களுக்குச் செய்வது எல்லாம், எனக்கே செய்தீர்கள்" என்பதை மறந்து விடுகிறோம்.

வீட்டலங்காரம் பற்றி சிந்திக்கும்போது வீடற்ற வீதிச் சிறுவர்களை எண்ணுவோம். ஆடை அலங்காரத்தில் அதிகம் பணம் செலவிடும்போது ஆடை அற்றவர்களை நினைப்போம். உண்ண உணவற்ற உறங்க இடமற்ற ஏழைகளை நினைப்போம். இவர்கள் மத்தியிலும், இவர்களுக்காகவும்தான் கிறிஸ்து பிறந்தார். நாம் வேண்டும், ஆசிக்கின்ற கிறிஸ்துவின் சமாதானம் இவர்களுக்கும் கிடைக்க வேண்டும். இவர்களும் கிறிஸ் துவின் சமாதானம் பெற உரித்துடையவர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

சுயநலத்தோடு செயல்படாது, பொதுநலத்தோடு நாம் வாழப் பழகிக் கொள்ள வேண்டும். அவரின் பிறப்பு அனைவருக்காகவுமேயன்றி தனியொருவனுக்காக அல்ல என்பதை உணர வேண்டும். இன்றுநாம் சமாதானம், சமாதானம் என்று குரல் கொடுக்கின்றோம். சமாதானம் வேண்டும் என்று அடித்துக் கூறுகின்றோம். பேட்டி கொடுக்கிறோம். ஆனால் கிறிஸ்துவின் சமாதானம் பெற நாம் தகுதியுடையவர்களா? என்பதை முதலில் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

மொறிஸ் தார்சியஸ்
மார்க்காம், கனடா.

கிறிஸ்துவின் சமாதானம் முதலில் பாமர இடையர்களுக்குத் தான் கிடைத்தது. சாமக்காவல் காத்தவர்களுக்குத்தான் கிட்டியது. அறிவாளிகளிற்கோ, அலங்காரிகளிற்கோ, பணக்காரர்களிற்கோ, மாடி வாசிகளிற்கோ கிடைக்க வில்லை. மாறாக அவர் ஏழ்மைக் கோலத்தில் பிறந்து ஏழ்மையை நேசித்து, ஏழை எளியவரைத் தேடி வந்தார். நீதிமான்களை அன்று பாவிகளைத் தேடி வந்தார். நாமும் எப்படி வாழ வேண்டும் என்று முன்மாதிரி காட்டினார். இதனை நாம் பின்பற்றுகிறோமா?

கிறிஸ்துவின் சமாதானத்தை பெறத் துடிக்கும் நாம், ஏழைகளின் சிரிப்பிலே, அவர்கள் வாழ்க்கை யிலே முதலில் சமாதானத்தை காண முயலுவோம். எமது வீட்டில் பாலன் கொட்டிலை அலங்கரிப்பதில் அதிக பணம் செலவிடாது, ஏழைகளின் கொட்டிலை அலங்கரிப்பதன் மூலம் சமாதானத்தை அடைய முயலுவோம். உண்டு கொழுத்தவர்களிற்கும், ஒருவேளை பசி, தாகத்தை அறியாதவர்களிற்கும், அனுபவியாதவர்களுக்கும் விருந்து கொடுத்து மகிழ்வதை விடுத்து, உணவிற்காக ஏங்கும், பசியாலே வாடும் ஏழைகளிற்கும் நம் அயலவர்களிற்கும் உண்ணக் கொடுப்பதன் மூலம் கிறிஸ்து தரும் சமாதானத்தைப் பெறுவோம்.

நாடுவிட்டு நாடு வந்திருக்கும் எமக்கும் உண்மைச் சமாதானம் கிட்ட வேண்டும். அதற்காக நாம் உழைக்க வேண்டும். எம்மிடையே வறுமையில் வாடும் மக்களை எண்ணிச் செயல்படும்போது, சேவை செய்யும்போது எமக்கும் சமாதானம் கிட்டும். கண்ணுக்கு எட்டாத தூரத்திலே உறவுகளைப் பிரிந்து வாழும், வாடும் எமக்கும் கிறிஸ்துவின் சமாதானம் கிடைக்க வேண்டும். கிறிஸ்துவின் சமாதானத்தை நாம் பூரணமாகப் பெற வேண்டும்.

கிறிஸ்து 2000ம் ஆண்டு களிற்கு முன்னர் கொண்டுவந்த சமாதானம் இன்னுமே, இன்றுமே எமக்கு நிறைவாகக் கிடைக்க வில்லை. காரணம் அவர் பிறப்பின் மகிமையை சரிவரப் புரிந்து கொள்ளாமையே ஆகும். உலக மாய்கையிலே மூழ்கி, போலி நாகரிக வாழ்க்கை வாழ்ந்து காலங் கடத்துகிறோம். இறைவனை முன்வையாமலும், முந்தத் தேடா மலும் எதை எதையோ எண்ணித் திட்டங்கள் போட்டு வாழ்கிறோம். இப்படியாயின் அவரின் சமாதானம் எம்மில் தங்குமா? எமக்குக் கிடைக்குமா?

இன்று நாம் எங்கிருந்தாலும், எந்த நாட்டில் இருந்தாலும் எம்மவர்க்கும், எம் தாய்நாட்டவர்க்கும் கிடைக்க வேண்டியது உண்மையான, முழுமையான, நிரந்தரமான சமாதானமே. இதற் காக நாம் முன் ஆயத்தம் செய்வோம். அவரை தகுந்த முறையில், எம்மிலும், மற்றவர்கள் மட்டிலும், எம் நாட்டிலும் வரவேற்க ஆயத்தமாகுவோம். அவரது சமாதானம் மலரட்டும். நம் வாழ்வும் வளரட்டும்.

# மாசற்ற குழந்தைகளின் அழுகுரல்கள்

"ரமாவிலே ஒரு குரல் கேட்கிறது
ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் இருக்கிறது
இராகேல் தம் குழந்தைகளுக்காக அழுது கொண்டிருக்கிறார்;
*ஆறுதல் பெற அவர் மறுக்கிறார்;*
ஏனெனில் அவர் குழந்தைகள்
அவரோடு இல்லை" (மத் 3:17-18)

என்ற இறைவாக்கினர் ஏரேமியாவின் இறைவாக்கு அன்று பெத்லகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும், இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் ஏரோது கொலை செய்த பொழுது நிறைவேறியது. இவ் இறைவார்த்தை அன்று மட்டுமல்ல, இன்றும் எம் மண்ணிலும் கூட நிறைவேறிக் கொண்டே இருக்கின்றது.

அன்று பெத்லகேமிலும், அதன் சுற்றுப்புற மெங்கும் நிகழ்த்தப்பட்ட கொலைகள் இன்றும் எம் மண்ணில் நிகழ்ந்து கொண்டே இருக்கின்றன. அன்று ரமாவில் கேட்ட இராக்கேலின் அழுகைக்குரல் யாழ் மண்ணிலும் கொல்லப்படும் பல சிசுக்களின் "ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் தொடர்கின்றது"

இன்று யுத்த அனர்த்தங்கள், துப்பாக்கி வேட்டுக்கள், பல்குழல் எறிகணை தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள், போர்விமானங்களின் இரச்சல்கள் ஓய்ந்து; பாதைகள் திறக்கப்பட்டு பிரயாணங்கள் இலகுவாக்கப்பட்டு அமைதியான ஒரு வாழ்வை நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும்: இன்றைய இந்த அமைதிச் சூழலில் வளர்ந்து கொண்டிருக்கும் சொகுசுப் பொருள் நுகர்வுக் கலாச்சாரம் இன்று எம் மண்ணில் பல பிறழ்வுகளை ஏற்படுத்தி நிற்கின்றது. இதில் முக்கியமான தொன்றுதான் "சிசுக் கொலை"

அன்று ஏரோதனின் அதிகாரப் பசிக்கு பல எண்ணற்ற மாசற்ற குழந்தைகளின் உயிர், இன்று பலரின் காமப்பசிக்கு பல சிசுக்களின் உயிர். அன்று இராகேல் தம் குழந்தைகளுக்காக அழுது புலம்பினாள், இன்று கருவறைகளே கல்லறைகள் ஆகும் அவலநிலை.

இன்று உலகமெங்கிலும், நமது நாட்டிலும் குறிப்பாக நாம் வாழும் பிரதேசங்களிலும் மறைமுகமாக அதிகளவிலான சிசுக்கொலைகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்பதில் சந்தேகம் இல்லை.

அருட். சகோ. தே. செல்வரட்ணம்

இன்று இவ்வாறாக அதிகளவான கருச்சிதைவுகள் நிகழக் காரணம் கருவறையில் இருக்கும் கருவானது அது பிறக்கும் வரை அன்றேல் உற்பவித்துச் சில மாதங்கள் செல்லும் வரையிலாவது அது மனிதத்தன்மை பெறவில்லை என்னும் தவறான விளக்கமேயாகும்.

எம்முடைய கத்தோலிக்க விசுவாசத் தின்படி "கரு உற்பத்தியாகத் தொடங்கிய அந் நேரத்திலிருந்தே ஒரு உயிர் ஆரம்பிக்கின்றது" அது தனது சொந்த வளர்ச்சியுடன் கூடிய ஒரு புதிய மனித உயிர். இது ஏற்கனவே மனிதத் தன்மை கொண்டிராவிடில்; ஒரு பொழுதுமே மனிதத் தன்மை கொண்ட தாய் ஆக்கப்பட முடியாது. அதாவது தாயின் கருவறையில் இருக்கும் பொழுதே அந்தக் கரு "மனித உயிர்" இக்கருத்தினை தற்கால மருந்துவ துறையும் உறுதிப்படுத்துகின்றது.

கருச்சிதைவை நியாயப்படுத்துவதற்கு முன்வைக்கப்படும் பிரதானகாரணம் யாதெனில்: பாலியல் வல்லுறவுக்கும், பாலியல் துஷ்பிரயோகங்களுக்கும், பாலியல் உணர்ச்சிகளிற்கும். பலியாகிறவர்களில் அதிகமானோர் தாய்மை அடையும் நிலையில் இல்லாத பிள்ளைகளே. ஏனென்றால் அவர்கள் இன்னும் பிள்ளைப் பருவத்திலேயே இருக்கிறார்கள்.

இது உண்மையாக இருந்தாலும் சமூகப் பிறழ்வு நடவடிக்கைகளாகிய பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கான காரணங்களில் கவனம் செலுத்தாது, சாதாரணமான வகையில் கருவை அழித்தல் அநீதியான செயலாகும்.

இவ்வாறான ஒரு யாதார்த்த நிலையில் மரியின் மகனாய் மண்ணுலகில் அவதரித்த இறைமகன் கிறிஸ்துவின் பிறப்பு விழா. அலங்காரச் சோடினைகள், மின்விளக்குகள், ஒளிவிழாக்கள், நத்தார் தாத்தா, கரோல் பாடல்கள், புதிய ஆடைகள், மலிவு விற்பனைகள், பாலன் குடில்கள் ஆகிய வெளி ஆடம்பரமான ஆரவாரங்கள் களைகட்ட தொடங்கிவிட்டன. ஆனால் விண்ணகத் தந்தையின் உன்னத கொடையாகிய குழந்தையை, அவர் அவதார மறை நிகழ்வின் மாட்சியை, உண்மை அர்த்தத்தை உணர, உணர்ந்து செயற்பட மறந்து விடுகின்றோம். வெளி ஆடம்பரங்களில் இவற்றை தொலைத்து விடுகின்றோம்.

இதனால்தான் அன்று ரமாவில் கேட்ட இராக்கேலின் அழுகைக்குரல் யாழ் மண்ணிலும் கொல்லப்படும் பல சிசுக்களின் "ஒரே புலம்பலும் பேரழுகையுமாய் தொடர்கின்றது.

"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" என்பதே கிறிஸ்து பிறப்பு விழாவின் நற்செய்தி. ஆனால் இத்தகைய ஒரு சூழ்நிலையில் கிறிஸ்துவினுடைய பிறப்பு எவ்வாறு எம்முடைய மனங்களில், இல்லங்களில் இடங்களில் அமைதியை ஏற்படுத்த முடியும்? எவ்வாறு உண்மையான மகிழ்ச்சியைத் தரமுடியும்? இச் சின்னஞ் சிறியோருக்கு இவற்றை செய்த போதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்பது நற்செய்தி; எம்முடைய இந்நிலையில் இவ் இறைவார்த்தை எவ்வாறு எமக்கு நற்செய்தியாக மாறமுடியும்?

மீண்டும் வருடாவருடம் வந்து போகின்ற ஒரு நிகழ்வாகவும், வெளி ஆடம்பரங்களோடு முடிந்துவிடுகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவாகவுமே அமையமுடியும்.

# ஒளியைத் தேடிய உள்ளம்

அன்றும் பூபாள இராகம் கேட்டு விழித்தெழுந்த யசோதை வழமை போல் இயற்கை அன்னையைத் தரிசித்தபின் தனது வகுப்பில் புதிதாக இணைந்த புதிய மாணவி நிர்மலாவின் கடந்தகால நினைவில் மிதந்தாள். பாடசாலையில் புதிதாகச் சேர்ந்த நிர்மலாவின் முகத்தில் ஒரே சோகம் நிரம்பியிருந்தது. இந்த வயதில் ஏன் இப்படிக் கவலை என்று தன்னிடமே கேள்வியைக் கேட்டுக் கொண்டாள். யசோதை வழமைபோல் வீடு சென்றதும் புதிய மாணவியைப் பற்றிப் பெற்றோரிடம் கூறினாள். அவர்கள் நாளை அந்த மாணவியுடன் கதைக்கும்படி கூறினார்கள். பாடசாலையில் நிர்மலாவைக் கண்டதும் புன்னகை சிந்தினேன். அவளும் சிரித்தாள். ஒரு அழகிய சிலையின் சிரிப்பு. பாடசாலை முடிந்ததும் அவளிடம் சாதாரணமாக குசலம் விசாரித்தேன். அவள் பேசினாள். சுரத்தில்லாத பேச்சு. எனக்கு மனசு சரிப்படவில்லை. எங்கள் வீதியிலேயே அவளின் வீடும் இருந்தது. வீடு சென்றதும் அம்மாவிடம் மாணவியைப் பற்றிக் கூறினேன். அம்மா வருகின்ற சனிக்கிழமை நிர்மலாவின் வீட்டிற்கு செல்லும்படி கூறினாள். அம்மாவின் கூற்றுப்படி சனிக்கிழமை நிர்மலாவின் வீட்டிற்குச் சென்றேன்.

அங்கே நான் கண்ட காட்சி ஓர் படத்தில் அழகிய பாலகன் வலது கையை நீட்டியபடி இருந்தார். கீழே மற்றொரு படத்தில் நிர்மலாவின் முகச்சாயலில் ஓர் இளைஞனின் படம். என்னைக் கண்டதும் அவளின் தாயார் என்னை வரவேற்று 'நிர்மலா' எனக்குரல் கொடுக்க நிர்மலாவும் வந்தாள். தாயின் முகம் வாடிக் களைஇழந்து காணப்பட்டது. முதற்படத்தில் இருக்கும் குழந்தை யார்? என நான் பேச்சுக் கொடுத்தேன். 'குழந்தை யேசு' எனப் பதில் வந்தது. இந்தச் சொல் எனது மனதிற்கு ஒருவகை இன்பத்தையும் மதுரத்தையும் தந்தது. அடுத்த படத்தை சுட்டிக்காட்டிக் கேட்டதும் இருவரும் அழத் தொடங்கினார்கள். எதுவுமே விளங்காத போதும் நான் நிர்மலாவை அணைத்து மெல்லத்தடவி ஆறுதல்படுத்தினேன். தாயின் வாயில் நின்று உதிர்த்த வார்த்தைகள் கவலையின் காரணத்தை எனக்குப் புரிய வைத்தது. இந்தக் குடும்பத்தினரின் துயரத்தைப் பகிர்ந்து கொண்டு வீடுவந்து அம்மாவிடம் அவர்களின் இடப்பெயர்வு, ஆறுதலற்றநிலை, சொத்துடன் வீடும், தந்தையும், தமையனும் இறந்த நிலையையும் கூறி வேதனைப்பட்டேன். அம்மா என்னை ஆறுதல்படுத்தி நிர்மலாவுடன் உறவாடி அன்புறவை வளர்த்துக் கொள்வோம் என்றாள்.

இலங்கையில் சமாதானப் புறா சுதந்திரமாகப் பறக்கத் தொடங்கியபோதும் இவர்களுக்கு சொந்த இடம் திரும்பமுடியாத நிலை. தாயும் மகளும் தொடர்ந்தும் எங்கள் கிராமத்திலேயே தங்கினார்கள். எங்கள் நட்பு இறுக்கமாகப் பலப்படுத்தப்பட்டு நாளுக்கு நாள் வளர்ந்து வந்தது. எங்கள் குடும்பத்தினருடனும் எங்கள் உறவுகளுடனும் உரையாடி உறவாடுவதன் மூலமாக அவர்களது மனக்கவலை சற்றுக் குறைந்திருந்தது. அமைதியுடனும் சந்தோசத்துடனும் வாழ்ந்தார்கள். நிர்மலாவின் வீட்டில் நடைபெறும் வழிபாடுகளில் நானும் பங்குபற்றுவேன். நிர்மலாவுடன் சேர்ந்து கோவிலுக்கு சென்று இவர்கள் கூறும் குழந்தையைக் காண வேண்டும் என்று என் உள்ளம் மிகவும் ஆசைப்பட்டது. நிர்மலாவும் தாயும் எனக்குப் பல வழிகளில் முன்மாதிரிகையாக வாழ்ந்தார்கள். வறுமையிலும் பண்பாடு குறையாமல் மனச்சாட்சியுடன் வாழ்ந்தார்கள். இயற்கையை இரசிப்பதில் நிர்மலா என்னைவிட ஒருபடி உயர்ந்திருப்பாள். அவளின் இரசனை பல தத்துவங்களைக் கூறும். நிர்மலா என்னுடன் வரும்போதெல்லாம் இயற்கை அன்னையின் எழில்களை வர்ணித்து இறைவனைப் புகழ்வாள். ஒருமுறை நிர்மலா "இதோ பார் யசோதை

கெலன் பெர்னாண்டோ
பாசையூர்

மலைச்சரிவில் தவழும் ஆறு பல கிளைகளாகப் பிரிந்து சென்று கடைசியில் கடலிலே கலக்கின்றது. அதே போலத்தான் நாமும் இறைவனிடம் இருந்து வந்து பல மதங்களைத் தழுவி அன்புறவில் வாழ்ந்தாலும் கடைசியில் இறைவன் என்னும் மாபெரும் கடலிலேயே சங்கமிப்போம்" என்றாள். இடையிடையே பைபிள் வசனங்களையும் சங்கீதங்களையும் கூறுவாள். இவை என் மனதில் நாளுக்கு நாள் தாக்கத்தை ஏற்படுத்தியது. எனக்கும் பைபிள் படிக்க வேண்டும் என்ற ஆவல் பிறந்தது. நிர்மலாவிடம் கேட்டு பைபிளைப் பெற்று வாசித்தேன். அதிலே குறிப்பிட்டிருந்த குழந்தை யேசுவின் பிறப்பு என் இதயத்தைக் கவர்ந்தது. "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போருக்கு ஒளிதரவும், நம்முடைய கால்களை அமைதி வழியில் நடத்தவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் விடியல் நம்மைத் தேடி வருகிறது." (லூக் 2:78-79) குழந்தை யேசுவாகிய ஒளியைக் காண என்மனம் பேராவலாக இருந்தது.

யேசுவின் பிறப்புத் திருநாளும் விரைவில் வந்தது. நான் பெற்றோரிடம் குழந்தை யேசுவைக் காண ஆசைப்படுவதாகவும் நிர்மலாவுடன் கோவிலுக்குப் போக அனுமதி தரும்படியும் கேட்டேன். பழமையில் ஊறிய பெற்றோராயினும் அன்புப் பிணைப்பையுணர்ந்து தாங்களும் வருவதாகக் கூறினார்கள். எனது சந்தோசத்திற்கு அளவேயில்லை. உடனடியாக நண்பியிடம் சென்று நாங்களும் இரவுத் திருப்பலிக்கு வருவதாகக் கூறினோம். பாலன் பிறந்த திருப்பலியில் நடந்த ஒவ்வொரு நிகழ்வும் எங்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது. முடிவில் எல்லோரும் பாலனைச் சந்திக்கச் சென்றார்கள். நாங்களும் சென்றோம். நிர்மலாவைப்போல் முழங்காலில் மண்டியிட்டுப் பாலனைத் தரிசித்தோம். தூப, தீப மலர்கள் மத்தியில் குழந்தை யேசு இருகரம் தூக்கி எங்களை வரவேற்றார். என் இதயம் நிறைவைப் பெற்று பூரித்தது. பெற்றோரும் மெய்மறந்து நின்றனர். வீடு செல்லும் வழியில் எல்லோரும் கிறிஸ்மஸ் வாழ்த்துக் கூறிப் பிரிந்து சென்றோம். அடுத்த நாள் காலை ஒரு தீர்மானத்துடன் எழுந்து எனது அப்பாவிடம் உள்ளத்தின் எதிர்பார்ப்பை எடுத்துரைத்தேன். அப்பா நான் பாலன் யேசுவின் மதத்தில் சேரலாமா? எனக் கேட்டேன். அப்பா கூறினார். "மனிதம் மதிகப்பட்டு எல்லோரும் மனச்சாட்சியுடன் வாழும்போது ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" ஆகும் உனது மனம் விரும்பும் மதத்தில் சேர்ந்து கொள் என்றார். ஒளியைத் தேடிய எனது உள்ளம் ஒளியைக் கண்டது. நானும் நிர்மலாவுடன் சேர்ந்து எங்கள் வீட்டில் பாலக யேசுவுக்கு குடில் கட்டித் தீப, தூப மலர்கள் சாற்றினோம். எங்கள் எல்லோருடைய இதயத்திலும், இல்லத்திலும் இறை ஒளி பிரவேசித்தது. இந்த ஒளியானது என்னை அமைதி வழியில் நடத்தி விடியலைத் தேடித் தரும் என்பதில் ஐயமில்லை. தற்போது எங்கள் கிராமத்திலேயே நிரந்தரமான ஒரு குடும்பமாகவே நிர்மலாவின் குடும்பம் இணைந்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியாகவே இருக்கின்றது. யசோதை தன்னை நிர்மலா மூலம் வழிகாட்டி நடத்திய இறைவனைப் புகழ்ந்து தன் கடந்த கால நினைவில் இருந்து மீண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வுச் சித்திரம்

# காவலன் கண்மணிகள்

## சமத்துவம் மலரட்டும்

புனிதம் ஒன்று மண்ணில்
மனிதனாகப் பிறந்து
மனிதனைப் புனிதமாக்கியது
அகதி வாழ்வை அதுவும் அனுபவித்ததால்
எம் அவல வாழ்வை போக்க
அருள் மொழிகள் உரைத்தது
சமத்துவம் மலர்ந்த நேரம்
அதன் மகத்துவம் மானிடற்கு புரிந்தது
உண்மை ஒளி ஒன்று எடுத்துரைத்தது
அடுத்த மனிதர் அயலவரென்று
அன்பு செய்தது. அவனே
எந்தன் உறவும் என்று
அள்ளி அணைத்தது. வற்றாத ஊற்றும்
வாழ்வு தரும் வார்த்தையும்
நல் ஆயனும் நான் என்றது. இன்று
அவ்வார்த்தை எம் ஏழ்மையின்
உருவைத்தாங்கி தாழ்மையின்
குடிலில் தாலாட்ட தூங்குகின்றது.
இனி என்னாளும் மனிதனின்
மனதில் சமத்துவம் மலரட்டும்.

*ச. அசிஸ்குமார்*
*மெலிஞ்சிமுனை.*

## கிறிஸ்மஸ் பப்பா

*~வானம்பாடி*

மழை மந்தாரம்,
மாலை 4 மணி இரவு 7மணிபோல் இருளாக இருந்தது.
ஆதவன் தன் இரு பிள்ளைகளையும் அழைத்தார்.
மூத்தவன் தேனுஷன், இளையவள் தேன்மொழி.
இருவரும் ஓடிவந்து
அப்பாவின் இருபக்கத்திலும் அமர்ந்தனர்.
"*குழந்தை யேசு*" என்ற அழகிய அல்பம்
அவர் மடியில் இருந்தது.
அதில் குழந்தை யேசுவின் பல வர்ணப் படங்கள்
வளர்ச்சிப் பருவ முறைப்படி அமைந்திருந்தன.
செபமாலைத் தியானத்தின் மகிழ்ச்சி,
மறை உண்மைகளின் விளக்கப் படங்கள் இருந்தன.
குழந்தை யேசுவை மையப்படுத்தி வந்த கதைகள்,
கவிதைகள், கட்டுரைகள் இருந்தன.
பல நாடுகளிலிருந்து வந்த பலவர்ண
கிறிஸ்மஸ் வாழ்த்து மடல்கள் அந்தந்த நாடுகளின்
பெயர்ப் பட்டியலின் கீழ் அமைந்திருந்தன.
பிள்ளைகள் இருவரும். அவற்றை ஆவலுடன் பார்த்தார்கள்.
அப்பாவைக் கேள்விகளால் திணறடித்தார்கள்.
சன்ரகுலாஸ், கிறிஸ்மஸ் பப்பா இருவருக்குமிடையேயுள்ள
வரலாற்றுப் பின்னணியை விளக்கும்போது,
"ஓ மரியா! ஓ மரியா!" என்ற பாடலுடன் ஒரு சிறுவர் குழு
ஆதவன் இல்லம் வந்தது. விசாலமான முற்றம்.
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலைக்காண,
பிள்ளைகள் ஓடிப் போனார்கள். ஆதவனும்
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலை இரசித்தவண்ணம்
சிறுவர்களுடன் சேர்ந்து தாளம் போட்டார்.
பணம் எடுத்துவர ஆதவன் உள்ளே சென்றார்.
பாட்டு நின்றது. தாளம் நிறுத்தப்பட்டது.
கிறிஸ்மஸ் பப்பாவின் ஆடலும் நின்றது.
தாளம் போட்ட சிறுவன்
கிறிஸ்மஸ் பப்பாவின் காதில் மெல்லமாக,
"டே சுரேஸ்! உங்கட அம்மா வாறாவடா" என்றான்.
ஆதவன் வீட்டின் சமையல் அறைப் பக்கமிருந்து வந்த
சுரேசின் அம்மா மேளம் தட்டிய சிறுவனிடம்
"சுரேஸ் எங்கே" என்று கேட்டுவிட்டு
அங்கு நின்ற சிறுவர்களை ஒரு பார்வை பார்த்தார்.
"அவன் கிறவுண்சில் கிறிக்கட் அடிக்கிறான்" என்றான்.
பணம் கொண்டுவந்த ஆதவன்
அங்கு ஒருவரையும் காணாது,
"அன்ரி கிறிஸ்மஸ் பப்பா எங்கே" என்று
சுரேசின் அம்மாவிடம் கேட்டார்.
தேனுசன், "அப்பா! இந்த குட்டி கிறிஸ்மஸ் பப்பா
எங்களுக்கு ஏன் பரிசுகள் தரவில்லை?" என்றான்.
"இங்க வாற குட்டி கிறிஸ்மஸ் பப்பாக்கள்
பரிசு கொடுக்காயினம் ! காசு வறுகவல்ல வாறவய"
என்று சொன்ன அன்ரி,
"போயும் போயும் படிச்ச நீங்களும் இவங்களுக்குக்
காசு கொடுத்துப் பழுதாக்கிறீங்க" என்று
ஆதவனைப் பார்த்துக் கூறினார்.
ஆதவன், "அன்ரி அவங்க சின்னவங்கதானே. அதுவும்
இந்தக் காலப் பிள்ளைகளுடன் கடும்பிடி சரிவராது.
அவங்களை முதலில் அன்பால் வசீகரித்து,
பின்தான் புத்தி சொல்லவேண்டும்" என்று சமாளித்தார்.

**நம்முள் ஒவ்வொருவரும் தம்மைக் குறித்தே**
**கடவுளுக்குக் கணக்குக் கொடுப்பர்.**
உரோ 14:12

## கிறிஸ்துவின் பிறப்பு நாளே..........வா

வா கிறிஸ்துவின் பிறப்பு நாளே ........வா
மானிட குலத்தின் மாட்டு தொழுவத்தில் உதித்த
மன்னவனே! - நீ
மக்களின் பாவங்களுக்காய் சிலுவையில்
உயிர்நீத்தீர்
இப்போது இருபது ஆண்டுகளாய்................
இருண்ட நம் வாழ்வில்...........................
ஒளி பிறக்கும் நேரமிது!
திடமான முடிவோடு களமாடி..................
தீர்வு பெறும் வேளையிது!
கொடுமைகள் கருகிட...........................
இங்கு - இருளில் இருந்து ஒளியையும்!
தீமையில் இருந்து நன்மையும்!
பொய்மையிலிருந்து உண்மையும்!
சாவிலிருந்து வாழ்வையும் பெற - என்றும்
உமது ஒளியை தந்திடுவீர்.

க. சூட்டி
நீர்வேலி வடக்கு
நீர்வேலி.





## இரங்கிடுவாய் இயேசு பாலா

மகிமையின் தெய்வம்
மாமரி மைந்தன்
மாடமாளிகை அன்று
மாடடைக் குடிலில்
இருளும் குளிரும்
பரவிடும் இரவில்
இறையேசு பிறந்தார்
இன்பமே கொள்வோம்

அருள் பொழி முகில்
அமைதியின் உருவம்
அன்பென்னும் அரசர்
அறிவென்னும் வார்த்தை
பாவத்தைப் போக்கிட
பரத்தினை திறந்திட
பரன் புவி பிறந்தான்
நரர் பாவம் அழியவே

பொங்கிடும் உணர்வுகள்
பொறுமையின் தவிப்புக்கள்
வறுமையின் கோலங்கள்
வாட்டிடும் வரட்சிகள்
இத்தனை துன்பமும்
இத்திலம் மீதினில்
இன்றே மறைந்திட
இரங்கிடுவாய் யேசு பாலா

S. றெஜினோல்ட்
யாழ்ப்பாணம்.

## அவதரித்தார் இயேசு

அவனியில் அலகையால்
அகப்பட்ட மாந்தர்களை
ஆதரவாய் ஆட் கொள்ளவே
ஆதி மூலனாய் இயேசு வந்தார்

இறைவாக்கு இவ்வுலகில் - அதை
இங்கிதமாய் நிறைவேற்றிட
ஈறிலான் மகன் இயேசு பிரான்
ஈனோர் துயர் துடைக்க வந்தார்

உலகத்தின் உத்தமனாய் - மரி
உதரத்தின் நித்திலமாய்
இகத்தினில் அகவொளி ஏற்றிட
இறைமைந்தன் அவதரித்தார்

எம் உள்ளங்கள் உயிர்த்து எழ
எம் அடிமை வாழ்வு விலங் கொடிய
அமைதியின் அண்ணலாய்
அவதரித்தார் இயேசு அவனியிலே

பு. கொலஸ்ரீனா,
பாசையூர், யாழ்ப்பாணம்.

## ஆ:.தே போற்றிடுவோம்

அவனியிலே எம்மிறைவன்
அவதரித்தார் எமக்காக
ஆர்ப்பரித்து மகிழ்ந்திடுவோம்
ஆவலுடன் வணங்கிடுவோம்
இப்புவிவாழ் மாந்தரையே
இங்கிதமாய் வாழவைக்க
ஈசனாய் பிறந்துவிட்டார்
ஈங்கெம்மை மீட்டிடவே
உலகிற்கு ஒளிகொடுக்க
உத்தமராய் வந்துவிட்டார்
ஊழியுள்ள காலமெல்லாம்
ஊருவகோர் எம்மையுமே
என்றும் காத்திடவே
எம்முடனே சேர்ந்திருந்து
ஏற்றம் பெறவைக்க
ஏசுவாக அவதரித்தார்
ஐயங்களை போக்கி
ஐஸ்வரியமாய் வாழவைக்க
ஒன்று சேர்ந்து எம்மையுமே
ஒளிதந்து காப்பாற்ற
ஓசன்னாப் பாடி நாம்
ஓதியோதி வாழ்ந்திடவே
ஔடதமாய் வந்தவரை
அ்.தே போற்றிடுவோம்.

சி. தனூஜன்
ஆண்டு 7C யா/யாழ் மத்திய
கல்லூரி

## நிம்மதியாய் வாழவைப்பீரே

அன்று பெத்லகேமிலே
அகதியாய்ப் பிறந்தவரே
இன்றும் அகதியாய்
இடைவிடாது அலைகிறோம்.

போக்குவார் எவருமில்லை
பொல்லாத உலகினிலே
ஏங்கியேங்கி நாமும்
எந்நாளும் கலங்குகின்றோம்.

உறவுகளை இழந்து நாம்
உருக்குலைந்து தவிக்கின்றோம்
கயவர்கள் எம்மையுமே
கசக்கிப் பிழிந்தனரே.

இருக்க இடமின்றி
இரவு பகலாய் அலைகின்றோம்
உண்ண உணவின்றி
ஊரூராய்த் திரிகின்றோம்.

பாவிகள் எமை மீட்க
பாலகனாய்ப் பிறந்தவரே
குழந்தைகள் எம்மையுமே
குதூகலமாய் வாழ வைப்பீரே.

சமாதானத்தின் தேவனே
சமாதானம் எமக்கருளி
நித்தியமும் எம்மவரை
நிம்மதியாய் வாழ வைப்பீரே.

சி. நிசாந்,
தரம் 11C
யா/யாழ் மத்திய கல்லூரி.

## இயேசுவுக்கொரு பாட்டு

நல்ல உள்ளம் வேண்டும்
எங்கள் சின்ன யேசுவே
உன்னைப் போல வாழ வேண்டும்
நல்ல யேசுவே

அன்னை மரியின் வயிற்றில் உதித்த
மழலை யேசுவே
எந்நேரத்திலும் உதவிசெய்ய ஓடிவரும்
நல்ல யேசுவே

விண்ணும் மண்ணும் மாறினாலும்
சொல்லும் மாறுமோ
கல்லும் முள்ளும் வாழ்வில் வந்து
என்னை மாற்றுமோ

உன்னையன்றி எந்தன் வாழ்வில்
இன்பம் சேருமோ
உன்னை எண்ணும் உள்ளமெல்லாம்
சொர்க்கமல்லவோ!

*செபமாலைநாயகம் கிருசாந்தினி*
*போயிட்டி, இளவாலை*

## பிறந்துள்ளார் பிதாமகனார்

பிறந்துள்ளார் பிதாமகனார்
பிள்ளைகள் எம்மையுமே
பக்குவமாய் வாழவைக்க
பாலகனாய்ப் பிறந்துவிட்டார்.

காலமெல்லாம் நாங்களுமே
கண்ணீரோடு அலைந்தோமே
கானகத்து வாழ்வினையே
கரிசனையாய் ஏற்றோமே.

யுத்தத்தின் கோரப்பிடியில்
யுகயுகமாய்த் திரிந்தோமே
உறவுகளைத் தொலைத்து
உருக்குலைந்து தவித்தோமே

துப்பாக்கிச் சத்தமதை
துப்பரவாய்ப் போக்கியே
துயரமான எம்வாழ்வை
தூர விரட்டிடவே

சமாதான ஒளிக்கீற்று
சாதுவாய்த் தெரிகிறதே
சரியான தீர்வினையே
சமத்துவமாய் த்ந்திடவே

குழந்தையாய் அவதரித்தார்
குடிசையிலே எம்மிறைவன்
மழலைகள் நாங்களுமே
மண்டியிட்டு வரவேற்போம்.

இருண்ட எம் வாழ்வை
இங்கிதமாய் ஏற்றிடவே
எம்மிடையே பிறந்தவரை
ஏற்றியே நாமும் போற்றிடுவோம்.

எஸ். எஸ். காந்தன்,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## இயேசு பாலன் பிறந்தார்

இயேசு பால்ன் பிறந்தார்
நம் பாவங்களைப் போக்கிடவே
பாவிகளை மீட்கவே
பாரினில் வந்துதித்தார்

பெத்தலகேம் நகரினிலே
மார்கழிக் கடுங்குளிரினிலே
இடையர்கள் மாட்டுத் தொழுவத்திலே
ஏழையாகப் பிறந்து வந்தார்

உன்னதத்தின் மகிமையும்
பூவுலகோருக்கு அமைதியும்
என்று புகழ் பாடிட
இயேசு பாலன் பிறந்துவிட்டார்

இஸ்ராயேலை மீட்டவர்
ஏழ்மை வாழ்வு வாழ்ந்தவர்
ஏகாந்தத்தை வெறுத்தவர்
இதயங்களை வென்றுவிட்டவர்

இத் திரு நன்னாளில்
பாலர் நாம் அனைவரும்
எம் மக்கள் துயர் நீக்கவே
பாடிடுவோம் திருப்பாலர் புகழ்

திருப்பாலர் சபை மாணவி,
எ. மரீனா ஷாமினி.
இரணைப்பாலை.

## பொன்முகம் காட்டி சிரித்திடுவாய்

பாரினில் உதித்த மாபரனே
பாவத்தை போக்கிட வந்தவரே
சாத்தானை வென்றிட்ட சற்குருவே
சர்வ வல்லவன் திருமகனே

தங்கிட சத்திரம் இன்றியே
தந்திட்ட மாட்டுத் தொழுவத்திலே
புதல்வனாய் மரி மகனாய்
பூரித்தாய் தாய் மடியினிலே

பார் புகழ் போற்றும் பாலகனே
பாவிகள் துன்பம் துடைப்பவனே
மாசுகள் அகற்றிட வந்தவனே
மன்னிப்பு அருளும் மனுமகனே

அமைதியில்லா அவனியிலே
அமைதியின் அரசனாய்
வந்திடுவாய்
போராடும் இந்த பூவுலகினில்
பொன் முகம் காட்டி சிரித்திடுவாய்.

*T. மேரி நிலோஜா*
*கொழும்புத்துறை,*
*யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலன் கண்மணிகள்



## பாலகனே வந்திடுவீர்

இந்து சமுத்திரத்தின் நித்திலமாய் விளங்கும்
இலங்கை திருநாடுதனில் தொடரும்
இன்னல்களை நீக்கிட
இறைமகனே வந்திடுவீர்

பாவமெனும் துன்பக்கடலில் மூழ்கி
பரிதவிக்கும் உமதன்பு மைந்தரை
பாசத்துடன் அரவணைத்து வழிநடத்த
பாலகனே வந்திடுவீர்

பெற்றமனம் கதறியழ
பிள்ளை மனம் பரிதவிக்க
பாசப்பிணைப்புக்களை உடைத்தெறியும்
பாதகரின் கொடிய நிலையை மாற்ற
பாலகனே வந்திடுவீர்

சிறைச்சாலைகளில் தினமும்
சித்திரவதைகளை அனுபவித்து
வளமான வாழ்வு இன்றி தவிப்பவர்களுக்கு
வளமான வாழ்வுதனை அளித்திட
வானங்களின் ஆண்டவரே வந்திடுவீர்

சண்டை சச்சரவு பெருகி
சமாதானமின்றி தவிக்கும் மக்கள்
சுதந்திரக்காற்றை தினமும்
சுவாசிக்கும் வரத்தை அளித்திட
சமாதானத்தின் தூதரே வந்திடுவீர்

செ. ஜெனீஸ்ரெலா
உடுவில்.

## அமைதியின் மன்னன் பிறந்திட்டார்

மந்தைகள் தங்கும்
குடிலினிலே
மரியன்னை அவளின்
மடியினிலே
மன்னன் யேசு
மலர்ந்தாரே - அன்று
பெத்தலகேம் என்னும்
சிற்றூரிலே

பாவ இருளை
அகற்றிடவே
தேவ அருளை
பொழிந்திடவே
மழலை பேசும்
மகவாக - அன்று
பரமன் யேசு
பிறந்தாரே

யுத்தச் சத்தம்
ஓய்ந்திட்டு
புத்தம் புதிதாய்
அமைதிப்பூ
நறுமணம் கொண்டு
மலர்ந்திடவே - இன்று
ஈசன் பிறந்தான்
ஈழத்திலே

ஒளியாம் தேவ
மைந்தனவன்
விழி நீர் துடைக்க
வந்திட்டார்
துள்ளி வருவீர்
கண்மணிகாள் - இன்று
பரமன் பதம்
பணிந்திடவே

செல்வி. ம. றொஷீன்
யா/இளவாலைக் கன்னியர்
மடம் ம.வி

## பாலகனாய் உதித்தவனே

மகனாய் எமக்காய் வந்துதித்த சூரியனே
பூந்தளிர்போல் வந்துதித்த புண்ணியனே
மாமரியின் கருவில் உதித்த மாமறையே
இறைதந்தையின்படி வழிநடந்த மனுமகனே
எம் மத்தியில் வந்துதித்த பாலகனே
விண்ணும் மண்ணும் புகழும் மாமகனே
உன் பிறப்பிலாவது ஊற்றெடுத்திருக்கும்
சமாதானம்
ஆறாகப் பாய்ந்து ஓடிட யேசுபாலனே
எமக்கு அருளைப் பொழிந்து அருள்வாய்

எ. றொபினா
இரணைப்பாலை.





## பாலகனே நீ கண்வளராய்

சூசை மரி மகிழவும்
வான சேனை பாடவும்
வந்துதித்தார் பாலகன்.

இடையர்கள் இன்புறவும்
ஆ இனங்கள் அக்களிக்கவும்
வந்துதித்தார் பாலகன்



மண்ணகம் வாழ்த்தவும்
விண்ணகம் போற்றவும்
வந்துதித்தார் பாலகன்

பாவிகளை மீட்கவும்
நீதிமான்களை காக்கவும்
வந்துதித்தார் பாலகன்

தேசம் ஒன்றுபடவும்
அமைதி மலர்ந்திடவும்
வந்துதித்தார் பாலகன்

ஆ. டொ. பிறேமானந்
யா/ஹாட்லிக் கல்லூரி,
நெல்லியடி,
பருத்தித்துறை.

## புதியதொரு தென்றல்

மரித்துப்போன – நமது
மனங்கள் மீது
புதுப்பிறப்பின் புதுமைகளுடன்
பூவாய் மலர்வாய்.......!
நாவால் நவிலும் பாவங்கள்
நினைவால் பொலியும் பாவங்கள்
செயல்களால் மலியும் பாவங்கள்
செப்பிட இங்கே யாருண்டு?
அன்பின் நிமித்தம் மண்ணில்
அவதரித்த அன்புருவே
நின்னருள் புவிதனிலே
நிலைபெறச் செய்திடு
குறைவில்லா வாழ்வு மாந்தர்
மறை வழியில் வளர்ந்திடவே
இறைவா பிறந்து வாரும்
இப்போ மீண்டும் புதிதாய்....!
துப்பாக்கிகளின் கொடூரமதால்
அப்பாவிகள் அழிந்தனர்
சப்பாத்திக் கால்கள் பதிந்த
இப் பூமி தனிலே
இல்லாமல் அழியட்டும்
பொல்லாத யுத்தத்தின் கீறல்கள்
சமாதான கீதம் ஒலித்திடவே
சலனமற்ற எம் குரல்கள்
வெளிச்சத்தில் கவி பாட
ஒளி வீச்சாய் எம் மத்தியில்
வழியும் வாழ்வுமாய்
வந்து நெஞ்சில் பிறந்திடு.....
நாடு எங்கும் உமது
விடுதலை வேள்வியினால்
நிறைவாய் அன்பு கனிந்திட
இறைமகனே புலர்ந்திடு
இப்போ மீண்டும் புதிதாய்....!

ஜோ. ஜெஸ்ரின்
கொழும்புத்துறை

மாமரி அன்னை மடியினிலே - அன்று
மார்கழித் திங்களில் உதித்தவரே!
மாண்டிட்ட மனுக்குலம் சொல்லிடும் கதையது
மாமன்னர் நீரே விடை பகர்ந்திடு இங்கு.

காரிருளின் நடுவிலே உலகமிங்கு புரளுது
மானிடரைக் காணவே மனித மனம் ஏங்குது
நீதி கேட்டுத் தவிக்கும் உள்ளம் தடம் மாறுது
அநீதி செய்த நெஞ்சம் ஒன்று கவிபாடுது.

மனம்போன போக்கினிலே மனிதகுலம்
போகுது
தினம் ஆயனில்லா ஆடுகளாய் அலைந்தே
வாடுது.
திருந்திடாத உள்ளங்கள் வருந்திடாமல்
சிரிக்குது
திருந்திட்ட மனமோ வருந்தியே வாழுது.

சமாதானம் வேண்டிடவே நாடிங்கு
தவிக்குது.
ஒற்றுமையாய் வாழவே உயர்ந்த உள்ளம்
விரும்புது.
வேற்றுமையை வளர்க்கவே கடினமனம்
துடிக்குது.
இத்தனையும் பார்த்த கண்கள் மௌனம்
காத்தது.

நீதியுள்ள அரசராக இவ் அவனியிலே
நிலையாக ஆட்சி புரிந்திட செங்கோலைக்
கரமேந்தி
உலகின் கடைகோடி எல்லைகளும்
மீட்பினைக் கண்டடைய
உன்னதரே மீண்டும் புதிதாய் நீர் அவதரித்தே
வாருமையா

லூசிலா ஞானப்பிரகாசம்
நாரந்தனை.

## சமாதானம்

இரப்போர்க்கு இரங்கும் பெருநதியாய்
எம்மத்தியில் பிறக்கப்போகும் குழந்தையேசுவே
நிரந்தர சுகம் தரும் அருள் மழையாய் – எம்
நாட்டிற்கு நிரந்தர சமாதானத்தைப் பெற்றுத்தாரும்.

மனித பாவம் போக்க குழந்தை உருவாய்
பிறக்கப்போகும் பாலகனே – எம் மக்கள்
ஓர் குலமாய், இன, மத, மொழி பிரிவினையகன்று
சமாதானமாய் வாழ வழிகோரும்.



வி. ஜெயசங்கீதா
யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## சமாதானம் பொங்கட்டும்

மார்கழி குளிரினிலே
மாமரியின் மடிதனிலே
மானிடரை மீட்பதற்காய்
மனுமகனாய் வந்தவரே

மானிடரின் பிரிவுநீக்கி
மனங்களிலே அமைதிதனை
நிலையாக வழங்கிட
மன்னவனே வந்தருள்வீர்

மானிடரால் ஈந்திடமுடியாத
அமைதிதனை ஈந்திடவே
அமைதியின் வேந்தனாய் நீரும்
உலகிற்கு வந்தருள்வீர்

செல்வி. க. அருள்மதி
ஞானப்பிரகாசர் வீதி, மல்வம்.





Merry Christmas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்மசுங்க இது நம்ம கிறிஸ்மசுங்க....!

"வானத்தில புது நட்சத்திரங்க
சேதி என்னன்னு தெரிஞ்சுக்குங்க
இயேசு பாலன் பிறப்பில
அமைதி உண்டென்று அறிஞ்சுக்குங்க"

கிறிஸ்து பிறப்பு, இற்றைக்கு இரண்டாயிரத்து இரண்டு வருடங்களுக்கு முன்பு பெத்தலேகேம் என்னும் சிற்றூரில் நடந்தேறிய வரலாற்று நிகழ்வு. ஆனால் இன்றைக்கும் மனதிற்கும் சிந்தனைக்கும் மகிழ்ச்சியை அளிக்கும் மகத்துவ நிகழ்வு. கிறிஸ்து பிறப்பு நீண்டு விரிந்த மனித வரலாற்றை முன்னும் பின்னுமாக (கி.மு, கி.பி.) கூறு போட்ட நிகழ்வு. ஆனால் காலத்தால் காயம்பட்ட உலகிற்கு புதிய நம்பிக்கையையும் ஒளியையும் வாழ்வையும் கொடுக்கும் மாபெரும் நிகழ்வு

"மாட்டுக்குடில் மன்னவனா
மாபரன் இயேசு பிறக்கின்றார்
நாட்டுக் குடி மக்களுக்கு
நல்ல சேதி கொணர்கின்றார்"

யுத்தமற்ற, ஷெல் சத்தமற்ற நிலையிலே, ஈழதேசத்திலே இதமாக வீசும் அமைதித் தென்றல் நிரந்தரமாக நித்தமும் வீசாதா? என்ற ஏக்கப் பின்னணியில் நாம் எதிர்கொள்ளும் கிறிஸ்மஸ் - 2002 நமக்கு நல்ல செய்தியை தருகின்றது. கிறிஸ்மஸ், கொடுப்பனவுக்கும் கொள்வனவுக்குமான காலமல்ல; அணிகலன்களுக்கும் அலங்காரத்துக்குமான காலமல்ல; உண்பதற்கும் குடிப்பதற்குமான காலமல்ல; ஆடலுக்கும் பாடலுக்குமான காலமல்ல கிறிஸ்மஸ், இறை புகழ்ச்சிக்கான காலம்; உன்னத கடவுளுக்கு மகிமை அளிக்கும் காலம்; சிதைவுற்ற உறவுகளை சீராக்கும் காலம்; அமைதிக்கும் ஒப்புரவுக்குமான காலம்; புரிந்துணர்வில் பூரிக்கும் காலம்; ஆம் ஆண்டவனின் அன்பின் அதிசய காலம்.

"பசித்தோரின் நலனைக்காக்க அன்னதானம்
குருதியிழந்தோரின் நலனைக்காக்க இரத்ததானம்
சமுகத்தின் நலனைக் காக்க சிரமதானம் - உன்
இதயத்தின் நலனைக் காக்க சமாதானம்"

கிறிஸ்மஸ் உணர்த்தும் மேலான செய்தி சாந்தியும் சமாதானமுமே. உள்ளத்திலே அமைதி; வீட்டிலே, குடும்பத்திலே அமைதி; நம் நாட்டிலே அமைதி; உலகம் முழுவதுக்குமான அமைதி; நல் மனம் படைத்திருந்தால் நாம் அடையும் ஆண்டவனின் அமைதி. அமைதியின் அரசனாய் அவதரித்த இயேசுவின் பிறப்பு தினச் செய்தியாய் வானோர் படைத்திரள் முழங்கியது "நல் மனத்தோருக்கு அமைதி" என்பதே. போர் ஓய்ந்த அமைதி நிரந்தரமான அமைதி ஆகிவிடாது. சிந்தனையிலே செயலிலே வஞ்சகமற்ற, வன்முறையற்ற அமைதி உலகம் தர முடியாத ஆண்டவன் அருளும் அமைதி. அமைதி தேடி அலையும் நெஞ்சம் ஆண்டவனில் சரணாகதி அடையும் போது ஆன்மீக அமைதியை அடைந்து கொள்ளும்.

"நெசமாத்தான் சொல்லுங்க
ஒடுக்கப்பட்ட மக்களுக்கு
உரிமை வாழ்வு உண்டெண்டு
உசிரு மூச்சு உசுப்பி விட
உதயமாகும் கிறிஸ்மஸ்"

வார்த்தையான கடவுள் மனித மாண்பை மகத்துவப்படுத்த மண்ணில் மனிதனான நாள் கிறிஸ்மஸ் கடந்த காலங்களிலே ஈழத்தமிழராகிய நாம் முகவரி இழந்து முகாரி பாடினோம். நம்மிடையே மனித மாண்பு, மனித உரிமை, மனித அபிமானம் அனைத்தும் அழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு போரையும் அழிவையும் பசியையும், பட்டினியையும் அனுபவித்தோம். இனத்துவேசத்தின் பகடைக்காய்களாக்கப்பட்டோம். உறவுச்சிக்கல் நிறைந்த குடும்பங்களாகவும் அனாதைக் குழந்தைகளாகவும் ஆக்கப்பட்டோம். உடல் ஆரோக்கியத்தையும் மன சமநிலையையும் இழந்தோம்.

கைவிடப்பட்ட, அடிமைப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்டு பீதியடைந்த குடிமக்களாக வாழ்ந்தோம். விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்பட்டோம். ஆனாலும் காக்கும் தேவனின் கருணை நம் உடனிருந்தது. இஸ்ராயேலரை எகிப்திய அடிமைத்தனத்தினின்று விடுவித்த ஆண்டவரின் மீட்புத்திட்டம் எம் மக்களிலும் செயலாற்றுகின்றது.

கடந்த கால கசப்பான அனுபவங்களை மறந்து, மன்னித்து புதிய பார்வையும் பணியும் கொண்டு மனிதத்துவத்தை மறுசீரமைக்க, புதிய வரலாறு படைக்க அழைக்கும் கிறிஸ்மஸ் - 2002இல் இணைந்திடுவோம். பரஸ்பர மன்னிப்பின், ஒப்புரவின், ஒன்றிப்பின் ஒத்திசைவிலேயே அமைதி ஊற்றெடுக்கின்றது. அக அமைதியையும் புற அமைதியையும் ஆண்டவன் அருளால் அடைந்து கொள்ள 'நல்மனம்' கொண்டோராக உருமாறுவோம். அமைதியின் யேசு பாலன் நம் ஒவ்வொருவரிலும் பிறப்பெடுப்பாராக! கிறிஸ்து பிறப்பின் சமாதானமும் மகிழ்ச்சியும் உங்கள் உரித்துடைமைகளாகுக!

"ஆனந்த கிறிஸ்மஸ் கானங்கள் பாடிடுவோம்
பேதங்கள் மறந்து நாமும் சோதரர் ஆகிடுவோம்
உள்ளத்துக் கோவிலிலே மழலைக்கு இடமளிப்போம்
உறவிலே வளர்ந்து நாமும் உண்மைக்கு குரல்
கொடுப்போம்"

-சகோ. சூ. டக்களஸ் மில்ரன் லோகு
புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி,
கொழும்புத்துறை.

# போரின் வடுக்களில் கிறிஸ்து பிறப்பு



இரத்தம் குடித்து உயிர்கொலை செய்த
யுத்தம் முடிவுற்றது போல......
ஏதோ சுதந்திரம் எண்ட நினைப்பு
யுத்தத்தின் வடுக்கள் பற்றி சிந்தித்தாயா?

யுத்தத்தின் போர்வையில் கைது செய்யப்பட்டோர்!
விசாரணைக்காக அழைக்கப்பட்டோர்!
தொழிலுக்கு சென்று திரும்பாதோர்!
பாதுகாப்பிற்காக சரணடைந்தோர்
எங்கே இவர்கள் ?



நெற்றியில் இட்ட குங்குமப்பொட்டு அழிந்து
கழுத்தில் கட்டிய தாலி கழற்றி
விதவை என்னும் நாமம் சூடிய – உன்
சகோதரியின் நிலை.....
பிள்ளைகளின் எதிர்காலம் ?

வீசிய எறிகணையால் ஊனமுற்றோர்
புதைத்த மிதிவெடியில் கால் இழந்தோர்
ஏன்?
உயிர்களை இழந்தோர்
உறவுகளை இழந்து துயரத்தில் வாழுவோர் நிலை?

குண்டு சத்தத்தினால் செவிப்புலனிழந்தோர்
துப்பாக்கி வேட்டினால் பார்வை இழந்தோர்
ஏன்?
சித்த சுயாதீனம் ஆக்கப்பட்டோர்
பிறக்கும் சிசுக்களில் குறைபாடுகள்?

கட்டிக்காத்த ஊர் இழந்து...
தேடி வைத்த சொத்திழந்து
ஊருக்குள்ளே இடம் பெயர்ந்து!
அவல வாழ்க்கை
இன்னும் எத்தனை வடுக்கள் ? ? ?



A.9 திறந்தாச்சு
பொருட்கள் வந்தாச்சு – ஏன்?
ஆட்களும் வாறார்கள்
கொண்டாட்டம் கொண்டாட்டமே

கேளிக்கைகள் அதிகரிப்பு
களியாட்டம் சூடு பிடித்தாச்சு
கலாசார சீரழிவு
நாகரீகம் நிர்மூலமாகுதே!

கட்டிக் காத்த அரும் பொருட்கள் மாயம்!
ஆலயங்களில் சுருபங்கள் திருட்டு
ஆங்காங்கே கடைகள் உடைப்பு
பெண்களுடன் சேட்டை அதிகம்
கொண்டாட்டம் கும்மாளம்.

கிறிஸ்மஸ் வந்தாச்சு.....
கொண்டாட்டம் கொண்டாடுவோம்
போரின் வடுக்கள் ஓயவில்லை.....
சகோதரன் கண்ணீர் வடிக்கிறான்.
நாகரீகத்தின் பேரில் கலாசார சீரழிவு – ஆனால்
கிறிஸ்மஸ் ஆயத்தம்

அருட் சகோதரன் மரியதாஸ்.



# அருளாகி அவதரித்த ஆண்டவனே போற்றி போற்றி

நிறைவான ஒளியுள்ள நிம்மதியை எங்களுக்கு
குறைவின்றித் தரவாரும் குழந்தையேசு ! பாலகனே !

புதிதாகப் பூவுலகைப் புதுப்பிக்கும் பூங்கதிரே !
எதிர்கால ஏக்கத்தில் எமைமீட்க எழுந்தருளும்

உரிமைக் குரலோடு உதவிக்கரம் கொடுத்து
உயர்வுப் பணிபுரிய நல்லிதயம் நீதருவீர்

தப்பான போதனையும் தவறான செயற்பாடும்
ஒப்பற்ற நின்பிறப்பில் ஒழிந்தழிய வரமருளும்

"ஒருவர் ஒருவரது சுமைகளைத்தான் தாங்க"
திருப்பலம் தந்திடுவீர் திவ்வியனே! எங்களுக்கு

வானகத் தந்தையிடம் நாமெழுந்து செல்வதற்கு
ஞானவரம் தரவாரும் நம்யேசு ! நாயகனே !

உருள்கின்ற உலகினிலே உயிர்களை இயக்குதற்காய்
அருளாகி அவதரித்த ஆண்டவனே ! போற்றி போற்றி!

ஞா. அரியமலர்
பிரான்ஸ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

## கனிந்திடம்மா நல் விடிவு

இகழும் பரமும் வணங்கும் இரட்சகரின்
அன்னையே!
அகமும் முகமும் மலர 'ஆகட்டும்
என்றவளே'
தினமும் இடக்கப்பட்ட எம் நாட்டை
கண்ணோக்கி
வனமிருந்து எழுந்தருளி நாடெல்லாம்
வலம்வந்து
மலரும் சமாதான நகர்வுக்கு நல்வித்திட்டாய்
சுழலும் அனைத்துலகின் அரசியே! ஈழ
மாதாவே!

வளரும் சமாதானம்
வலுப்பெற்றது

நிறைவுறவே புலரும்
புத்தாண்டில் கனிந்
திடம்மா நல் விடிவு.

எஸ். யேசுதாஸ்
கொழும்புத்துறை

## நாளும் சமாதானம் நிறைவாக அருள்வீர்

இடர்படும் மக்களின் இன்னல்கள் நீங்க
படர் கொடும் துன்பங்கள் இனி மறைந்தோட,
வாரும் பாலக யேசுவே வாரும்
தாரும் சமாதானம் இனிதாய் நாம் வாழ.

விந்தைகள் புரிந்திட்ட விண்ணகத் தேவனே,
மந்தைகள் வேண்டுகிறோம் மண்ணகம் வாருமே,
நிலை குலைந்து வாழும் எம்மை நோக்குமே,
நிலையான சமாதானம் குறையாது தருவீரே.

மாமரி மைந்தனே மன்னாதி மன்னனே,
மாநிலம் வாழ்ந்திட மாதுயர் நீங்கிட,
மாளும் எமை நீர் கடைக்கண் நோக்கி,
நாளும் சமாதானம் நிறைவாக அருள்வீரே.

- சசியானி தார்சீசியஸ் -




## ஆண்டவர் வாக்கை நிறுவிய இயேசு

தந்தை வாக்கை நிறைவேற்ற
தரணி வந்த இயேசுவே - மனித
மனங்களில் புத்தொளி வீசிடும்
புதுப்பிறப்பாய் பிறந்திங்கு வா!

உன் வாக்கு என்னவென்று
புரிந்தும் நான் செய்யவில்லை - ஆனால்
என் பாவச் சுமை தீர்க்க
பாரில் நீ அவதரித்தாய்!

தாங்காத துன்ப மெல்லாம்
ஆழ் கடலில் மூழ்கவைத்து - இறை
சமாதானம் எமக் கருள
இதய கோவிலில் பிறந்து நீவா!

வி. பி. தனேந்திரா
அரியாலை



## மெரியூவுக்கு ஓர் கவிதை

## துளிர்த்த வசந்தத்தில் இயேசுவின் பிறப்பு

"எங்கும் அமைதி நிலவட்டும்.
அது முதல் என்னில் தொடங்கட்டும"

அன்று இயற்கையோடு வாழ்ந்த இனிதான வாழ்க்கை
குலைந்து
யாழ் நகர் விட்டு பெருங்களமாய் மாறியிருந்த வன்னி
மண்ணில் கால் பதித்து
நோய்களால் உருக்குலைந்து - ஆக்கிரமிப்பு
பேய்களால் அகதிகளாக்கப்பட்டு உள்ளம்
உடைந்தவர்கள் நாம்.

இன்று காலம் நமக்காகவும் மலரும்
எல்லா இரவுகளும் விடியும் என்று
அசைக்க முடியாத நம்பிக்கையுடன்
அமைதியை எதிர்நோக்கி காத்திருந்த எமக்கு
வசந்தம் துளிர்த்தது.
நீதிக் கதிராகி தியாகச் சுடராகிய
தெய்வத்தின் திருப்பார்வை
நம் தேசத்தில் பதிந்தது.

விடிவிற்காய் காத்திருந்து வேதனையின் விளிம்பில்
வடியும் கண்ணீரை இனியும் வடிக்க பலமிழந்த
நிலையில்
சோக வரிகள் ஒலித்த எம் தேசத்தில்
விடுதலை நாயகன் இயேசுவின் பிறப்பு
மானிடர் நமக்கு கிடைத்த மகா நற்செய்தி
ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய் பூர்வீகமாய் வாழ்ந்த
மண்ணில்
இறைவன் வரலாற்றில் நுழைந்த செய்தி இனிய
செய்தி

வறண்ட கைகளும் வாடிய முகங்களும் நொறுங்கிய
நெஞ்சமும்
இன்று வசந்தம் பெறுவது உன் அருளன்றோ!
தொடர்ந்தும் உம் அருள் எம்முடன் தங்கிட
உம் அருட் பார்வை நம் நாட்டில் கதிராக வீசிட
துளிர்த்த வசந்தம் துணிவுடன் நிலைத்திட
விடுதலை இராகங்கள் இசைத்து விடியலின் கீதங்கள்
முழங்கி
பாலகன் இயேசுவை வரவேற்போம்.

செ. பிறின்ஸ்லி
சில்லாலை



## பாலகனாய் பிறந்து வா

மீட்பளிக்கும் உடன்படிக்கையை
மேன்மையுடன் நிறைவேற்ற
இறைமகன் மனுவுருவாய்
மாமரி மடியில் சிறுமகனானார்
எம் தேசத்தின் தலைவிதியை
எழுதப்போகும் உடன்பாட்டை
ஆய்ந்தறியும் தலைமைக்குள்ளே
ஒப்புரவின் பாலகனாய்ப் பிறந்து வா!

ஒரே கருவறையில் உதித்த
காயீனும் ஆபேலும்
வன்பகை வளர்த்து கொலையில்
வீழ்ந்தது முறையா?
ஒரு தேசத்தின் புத்திரர் நாம்
இனமொழி மத பேதத்தில் மூழ்கி
செங்குருதியில் தோய்ந்து
அழிவதுதான் அறநெறியா?

யுத்தங்கள் வேண்டாம்
அவலங்கள் இனிப்போதும்
நித்தமும் இடம்மாறி அகதியாய்
கதியது கலங்கி அலைந்தது போதும்
சுத்திடும் ஊர்தியின் சுடுகுழல்
புகைவதை நிரந்தரமாய் நிறுத்த
மெத்திடும் அமைதியின் தூதனே!
பாலகனாய்ப் பிறந்து வா!

மனிதனை மனிதனாய்
மதிப்பது பெரும் பண்பு
அனைவர்க்கும் சம உரிமை
சிறைப்பட்டோர்க்கு விடுதலை
பகைவர்க்கு மன்னிப்பென
பகர்ந்த எம் மாபரனே!
ஈழத்து பெத்லேகேமில் மீண்டும்
பாலகனாகப் பிறந்து வா!

எஸ். ஜே. சுபீட்சன்
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளக் குடிசையில் இயேசு

அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார்.
வீடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை
எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து
தீவனத் தொட்டடியில் கிடத்தினார் *லூா. 2:7.*

இந்த நிகழ்வு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்தேறிய ஒன்றாக இருக்கிறது. இருப்பினும் இதுவே இறைவனின் நேரடி மீடப்புத்திட்டதின் ஆரம்பமாக அமைகின்றது.

ஆடம்பரம் இன்றி அமைதியான, மக்கள் நடமாட்டம் அற்ற ஓர் இடத்திலேயே இயேசுவின் பிறப்பு நடந்தேறியது. இயேசுவின் இந்த மனித சாயலின் உட்பொருள் மீட்புத் திட்டத்தில் பெரும் பங்குவகிக்கிறது. உலகின் ஒளி நானே என்வழியால் அன்றி மீடபு வராது ஏனெனில் நானே அனைத்திற்கும் ஊற்றும். உறைவிடமாக இருக்கிறேன். எனது ஒளியில் நடப்பவன் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒளியைக் கொண்டிருப்பான் (லூ. 8: 12-14)

அன்று, இயேசு பிறந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு பல மைல்கள் தொலைவில் இருந்து புறப்பட்டார்கள் ஞானிகள். அவர்கள் விண்மீன் வழிப்படுத்தலில் தமது பயணத்தை மேற்கொண்டார்கள். (மத். 2:1)

அவர்களது பயணம் பெத்லகேமை அண்மித்த வேளையில் அவர்கள் துணையாய் வந்த விண்மீன் மறைந்து விட்டது. அவர்கள் உள்ளத்தில் ஏக்கம், தவிப்பு, குழப்பம். ஏனெனில் நாங்கள் வந்த விடயம் நிறைவு பெறாதா? உலகை மீட்க வந்த அரசரை நாம் கண்டு கொள்ளமாட்டோமா? அவரை நாம் காணாது திரும்பிவிடுவோமா.? என்ற கேள்விகள் அவர்கள் உள்ளத்தை ஆட்கொண்டன. இதனால் தமது இலக்கை அடைய உதவி தேவை என்று உணர்ந்து கொண்ட ஞானிகள் ஏரோது மன்னனின் அரண்மனை நோக்கிச் செல்கிறார்கள். வஞ்சக நெஞ்சம் கொண்ட ஏரோது அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்று செய்கின்றான். "நீங்கள் அந்த அரசனை வணங்கிவிட்டு மீண்டும் வந்து எனக்கு தெரிவியுங்கள் தானும் சென்று வணங்க வேண்டும்." (மத் 2:8) ஆனால் இந்த ஒப்பந்தம் இறைவனால் முறியடிக்கப்பட்டது அந்த ஞானிகள் மன்னனின் அரண்மனையில் இருந்து குழப்பத்துடன் வெளி யேறினார்கள். அந்த வேளை விண்மீன் மீண்டும் அவர்களுக்காக தோன்றி, இயேசு பிறந்த இடம் நோக்கி அவர்களை வழிநடத்தியது. ஞானிகள் இயேசு பாலனைக் கண்டு மகிழ்ந்தார்கள். அவர்கள் உள்ளம் இயேசு என்னும் அமைதியின் ஒளியைக் கண்டு கொண்டது.

அந்த ஞானிகளின் உள்ள ஏக்கத்தைப் போல் எம் இனத்தின் கதைகளும் ஏக்கங்கள் சொன்னது. உலகெங்கும் போர் நிஜமாகியது அதிலும் இந்து சமுத்திரத்தின் முத்திலும் போர் கருமேகமாகியது. இது அதிகாரத்தின் ஓர்மத்தால் சுடர் விட்டு எரிந்த போராட்டம். ஓர் இனத்தின் அழிவுக்கான, உரிமைகள் நிராகரிக்கப்பட்ட, எந்தச் சுதந்திரமும் இல்லாத, அரசின் போர். இதுவே தமிழினத்தின் வாழ்வானது. உணவிழந்தோம், உறவிழந்தோம், உறைவிடம் இழந்தோம், உழைப்பிழந்தோம், உறக்கம் இழந்தோம், ஒட்டுமொத்தமாக அமைதி இழந்தோம்.

நீண்டு சென்ற இப்போர் வரலாற்றிலே இடைக்கிடை தலைதூக்கி எட்டிப்பார்க்க விரும்பியது அமைதி. வெண்புறாக்கள் பறக்கவிடப்பட்டன. தீர்வுத் தாள்களில் கையொப்பங்கள் இடப்பட்டன. இவை அமைதியின் துளிர்களாகி எமது நாட்டை சற்று எட்டிப் பார்த்தன. உதவி தேடிச் சென்ற ஞானிகளுக்கு என்னைவிட ஓர் அரசனா என்ற வஞ்சக எண்ணத்துடன், பழிவாங்கும் நோக்குடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஏரோதைப் போன்று எமது மண்ணிலும் அமைதிப் பேச்சுக்களும், அமைதிப் பறவைகளும் சிறிது காலம் சிறகடித்து பறந்து மறைந்தன.

இத்தகைய போலியான பேச்சுக்களின் பின்னடைவுகளால் போரின் ஆதிக்கம் மென்மேலும் அதிகரித்தது. இதன் விளைவாக, பிள்ளைகளை பறிகொடுத்த தாயினத்தின் அவல ஓலங்கள், தாயை இழந்த, தந்தையை இழந்த பிஞ்சுகளின் முனகல்கள், சொந்தம் இழந்த உறவுகள், குண்டுகளின் கீறல்களால் அங்கம் இழந்த எம் உடன்பிறவா சகோதரர்கள், இலக்கிழந்த இளைஞர், யுவதியர், வேலையற்ற பட்டதாரிகள், பசி என்று சொல்ல பலமற்ற மனிதர்கள், இவையே எமது நாட்டின் நிஜங்களாகின.

ஆனால் இன்று இவ் நிஜங்கள் உலகிற்கு படங்களாகின. அமைதியின் தேவை உணரப்பட்டது. மீண்டும் ஆயுதங்கள் ஓய்வெடுத்தன. அமைதியின் காற்று கடலில் இருந்தும், மலைகளுக்கிடையிலிருந்தும் தென்றலாகி வீச தொடங்கிவிட்டது. இந்த அமைதியின் தாலாட்டால் நாம் மதி மயங்கிவிடக் கூடாது. ஏனெனில் இந்த அமைதி ஒரு நிழலே. இதிலே நாம் இலயித்து விடாது. அனைத்திற்கும் மேலான அமைதியாகிய இயேசுவை எம் உள்ளத்தின் ஒளியில் இனம் கண்டுகொள்வோம்.

*கிறிஸ்து உலகில் அல்ல*
*முதலில் எம் உள்ளத்தில் பிறக்கட்டும்.*

**சகோ. கை. பீ. கனிசியஸ் றாஜ்**

# அழியாக் கருவால் விளைந்த மீட்பு



தாயின் கருவறையே சிசுவின் கல்லறையாகவும், கொலைக் களமாகவும் மாற்றப் படும் அவலம் தொடரும் பூமியது. ஐந்தறிவு படைத்த பிராணிகள் எண்ணிப் பார்க்காத, செய்யத் துணியாத கீழ்த்தரமான கரு அழிப்பை செய்கிறான் ஆறறிவுள்ள மனிதன். அவனியில் உருவாகிக்கூட இப்பிரபஞ்சத்தை பார்க்காது மூச்சுக்கூடவிடாது மூர்க்கத்தனமாக சிதைகின்ற சிசுக்கள் இன்று பல.

வானதூதர் மரியாவை பார்த்து 'மரியா..... இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்;' என்று கூறியபோது மரியா மறுமொழியாக 'இது எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே!' என்றார். மரியா கருவுற்றபோது அவள் ஒரு கன்னி. திருமணத்திற்கு முன்பே அவள் கர்ப்பமானாள். இது யூத சமுதாயத்தில் இழிவான செயலாக கருதப்பட்டது. இதனை மறைக்க அவள் தன் கருவை கலைத்திருக்கலாம். ஆனால் மரியா அப்படி செய்யவில்லை. தன் கருவை பேணி வளர்த்தாள். அதனை இவ்வுலகிற்கு மீட்பராக தந்தாள். அன்று அச்சிசு அழிக்கப்பட்டிருந்தால் இன்று கிறிஸ்தவமும் இல்லை, கிறிஸ்து பிறப்பு விழாவும் இல்லை.

கருச்சிதைவு இன்றுமட்டுமல்ல. அது ஒரு பழைய ஏற்பாட்டில் இஸ்ராயேல் மக்கள் மத்தியிலும் இருந்துள்ளது. "தாய் வயிற்றில் நான் இருந்தபோதே, அவள் ஏன் என்னைக் கொல்லவில்லை?" (எரே 20:17) என எரேமியா இறைவாக்கினர் கேள்வி தொடுக்கின்றார். ஆயினும் பிள்ளைச் செல்வங்களை இறையருளின் வெளிப்பாடு என ஏற்று வாழ்ந்தார்கள். 2750 பழைமை வாய்ந்த சீன இலக்கியங்களில் கருச்சிதைவு பற்றி கூறப்பட்டுள்ளது. சீனாவில் சென்ற நூற்றாண்டின் இறுதியில் மக்கள் தொகையை கட்டுப்படுத்த பெரும் தொகையான கருச்சிதைவுகள் செய்யப்பட்டன.

சிசு சுயமாக, தற்செயலாக சிலருக்கு கலைந்து (Miscarriages) அவர்கள் பிள்ளைச் செல்வத்திற்காக ஏங்கி நிற்க; பலர் வளரும் சிசுவை தாமாகவோ அன்றேல் பிறரின் உதவியுடனோ கலைத்து கொலையாளர்கள் ஆகின்றார்கள். உயிரின் மேல் இறைவனுக்குத்தான் அதிகாரம் உண்டு. கரு தாய் வயிற்றில் உருவாகும். அந்தக் கணமே அது மனித உருப்பெறும் உயிராகும். அதை அழிப்பது உயிர்க்கொலைக்கு சமம். படித்தவரும் படியாதவரும் இதனை செய்துவருவது ஒரு வியப்பான விடயமே. பிள்ளையை கலைத்துவிட்டு (தட்டிவிட்டு) சாதாரணமாக உலாவருகின்றார்கள் பலர். சிலருக்கு இது ஒரு குற்ற உணர்வாக இருந்து உளவியல் ரீதியில் பாதிக்கப்படுகின்றனர். நாட்டு மருந்துகள் இத்தீய செயலுக்கு பயன்படுத்தப்படுகின்றன. சில வைத்திய அதிகாரிகளும் காந்தம்போல் பெண்களை ஈர்த்து இச்செயலை மறைமுகமாக செய்கின்றார்கள். மருத்துவத்தில் வளர்ச்சி பெற்ற இங்கிலாந்தில் ஆண்டுக்கு 1,500,000 சிசுக்கள் அழிக்கப்படுகின்றன. இதில் ஈடுபடும் 5000 பெண்கள் இறக்கின்றார்கள். ஆகவே எம் நாட்டின் நிலை...? கிராமப் புறங்களில் கொடூர விதமாக, கீழ்த்தரமாக பிரயோகிக் கப்படுகின்ற சிசு அழிப்பு முறையால் பல பெண்கள் இறந்து கொண்டே இருக்கின்றார்கள்.

**அருட்சகோ. அ.பீ. திருமகன்**

இத்தீய செயலுக்கு எதிராக இன்று பெரிதாக குரல்கள் எழுவதில்லை. கத்தோலிக்க திருச்சபையைத் தவிர இதனை எதிர்த்து பலர் பேசாததற்குக் காரணம் இது ஒரு பிழையான செயல் என்று உணராததே. முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'அப்போஸ்தலர்கள் படிப்பினை' தொடக்கம் இன்றைய திருத்தந்தையின் மடல்கள் மட்டும் இதற்கு எதிராகவே கத்தோலிக்க திருச்சபை குரல் கொடுக்கின்றது. இத்தீய செயலில் ஈடுபடுபவர்கள் திருச்சபையிலிருந்து விலக்கி வைக்கப்படுகின்றனர். (திருச்சபை சட்டம் 1398).

கூரிய ஆயுதங்களாலும் இரசாயண அமிலங்களாலும்: குழாய்களாலும் சிதைக்கப்படுகின்ற சிசுவின் ஓலத்தை தாய்மைதான் அறியும். ஆனாலும் ஏன்தானோ அந்த தாய்மை இதற்கு இடம் கொடுக்கின்றதோ தெரியவில்லை. மழலைகள் இரத்தம் சிந்தி மடிகிறார்கள். வேலியே பயிரை மேய்ந்துவிட்டு ஏப்பம் விடுகின்றது. உலகில் பெரிய மனிதர்களாக சமுதாய தலைவர்களாக வரவேண்டியவர்கள் சிசுவிலேயே கொலை செய்யப்படுகின்றனர். இன்று எத்தனை வைத்தியர்கள், பொறியியலாளர்கள், ஆசிரியர்கள், சமய பெரியவர்கள், சமூக சேவையாளர்கள், விஞ்ஞானிகள், வியாபாரிகள் சிசுவிலேயே மாண்டு போகிறார்கள். அன்று அழிக்காமல் மரியாவால் வளர்க்கப்பட்ட சிசுவே உலகின் மீட்பராக உதித்தது. அன்னை திரேசா கூறுகிறார், "ஒரு தாய் தன் குழந்தையைத் தன் வயிற்றில் கொல்லமுடியும் என்றால் மனிதனுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது".

## பாமராடையே மாபரன வருகை



மாபரன் இயேசு மண்ணில் வந்து
பாமரரின் உருவம் பூண்டு
பாரினில் துன்பம் நீங்கிடவே
போரின் அவலம் போக்கிடவே
மாடடைக் குடில் தனில்
மகிமையாய் உதயமானார்.

பாலன் இயேசு நம்முள் வந்து
பாவிகளைத் தம்முள் கொண்டு
மானிடது மீட்பினை அடைந்திடவே
மானிலம் ஒளியாய்த் துலங்கிடவே
ஓலைக் குடிசை தனில்
உன்னதராய் உதயமானார்.

அமைதி வேந்தன் பாலன் இயேசு
அன்பினை பொழிய வந்துதித்து
உண்மையினை பரப்பிடவும்
பொய்மையினை ஒழித்திடவும்
மாட்டுக் குடில்தனில்
மழலையாய் உதயமானர்.

மனித மனதிற் கொண்டு
மற்றவரோடு மனம் மகிழ்து
அரவணைக்க யாரும் இன்றி
அலைந்து திரியும் மனிதர்கட்கு
அர்த்தமுள்ள கிறிஸ்மஸினை
எடுத்துக்காட்டி உதவிடுவோம்

"பாமரிடையே உதித்த
மாபரனே நீ வருக"

**ஜே.ஜே. றாஜிகா**



# குழந்தை யேசுவே வாரும்......

"சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்" என்றும், "குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்" என்று கூறிய யேசு, குழந்தையாக, திருக்குழந்தையாக குவலயம் வந்த தினம்தான். நாம் மகிழும் இன்றைய கிறிஸ்து பிறப்புத் தினம். குழந்தையாக வந்தார், குடிலில் வந்தார், குபேரனாக அல்ல ஏழைக் குடிமகனாக எமக்காக வந்தார். எம்மிடம் வந்தார்.

அந்த இரவு, அவர் வந்த இரவு, அவர் தந்த பரிசு சமாதானம். அவர் எதையும் சுமந்து வரவில்லை எமக்காக உவந்து தந்ததுதான் சமாதானம். "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, உலகிலே அவர் தயவு பெற்றோருக்கு அமைதி ஆகுக" இதுதான் அவரின் வரவின் செய்தி, தூரவின் செய்தி.

அன்று அந்த மக்கள் அமைதிக்காக அலைந்தார்கள், அமைதி தேடி அலைந்தார்கள், அமைதி நாடி அலைந்தார்கள், அமைதி இன்றி வாடினார்கள். என்று பிறப்பார் இயேசு, என்ன தருவார் யேசு, எப்போது வருவார் யேசு, என்று காலம் காலமாக காத்திருந்தார்கள். அவரை எதிர்பார்த்திருந்தார்கள்.

இன்று நாமும் அவர்களைப் போல் அமைதி தேடி ஓடினோம். அமைதிக்காக வாடினோம். அமைதிக்காக போராடினோம். இரு தசாப்தங்களாக, பெரு வேதனைகளோடும், சோதனைகளோடும், கூடவே சாதனைகளோடும் விடிவைத் தேடி, ஒரு முடிவைத் தேடி, விடியலைத் தேடி, சுமைகளைத் தாங்கி, மனமேங்கி, இறைவனை முகம் நோக்கி, ஓங்கி குரல் எழுப்பி சமாதானத்திற்காக காத்திருந்தோம். இன்றைய கால கட்டத்திலே எமக்கு வேண்டியது. வேறெதுவுமல்ல வேறெவருமல்ல சமாதானமே. மக்கள் ஓலமிட்டு, மனதிலே கோலமிட்டு வேண்டுவது, "வந்தருளும் ஆண்டவரே, வந்தருளும். தந்தருளும் நிறை சமாதானம் தந்தருளும்" என்பதாகும்.

எமது மக்கள் அகதிகளானது போல, இடம்விட்டு இடம் பெயர்ந்தது போல, சொந்த மண்ணைவிட்டு ஓடியதுபோல, எம் குழந்தை யேசுவும், எமக்காகப் பிறக்கும் வேளையிலே அகதியானார், இடம்பெயர்ந்தார். ஓர் நிலையான இடம் தேடினார். நாம் எங்கு செல்வோம், எப்படி செல்வோம், யாரிடம் செல்வோம் என அலைந்து, உலைந்து, மனங்குழைந்து நொந்தது போலவே, அவரும், அதுவும் கடவுளின் மகன், காலமெல்லாம் காத்திருந்த மகன், எதிர்பாத்திருந்த மகன், ஈனக் கழுதையின் மேலே, ஈன மக்களுக்காக பவனி வந்து, மாடடை குடிலில் மாபெரும் பிறப்பு எடுத்தார்.

இருளில் வாழ்ந்த மக்களுக்கு அருளின் மைந்தனாக, பொருளின் சீலனாக, ஒளி கொண்டு வந்தார். வழிகாட்ட வந்தார், வாழ்வுதர வந்தார், வாழ வைத்தார். "சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, என்னிடம் எல்லோரும் வாருங்கள்" என்று அழைப்புவிட்டார். நாம் பாவச் சுமையிலிருந்து விடுதலை பெற, குடும்பச் சுமையிலிருந்து விடுதலை பெற, நாட்டுச் சுமையிலிருந்து விடுதலை பெற, விடுதலையின் வீரன், சமாதானத்தின் தேவன், வாய்மை தவறாத தீரன், உண்மையின் நாதன், யேசு பாலன் மீண்டும் எமக்காகப் பிறக்க வேண்டும். அவரது வருகை எமக்கு அவசியம். அவர் எமக்கு, நாம் நாடி நிற்கும் சமாதானத்தை, இன்று எமக்கு அருள வேண்டும்.

நிரந்தர வாழ்வுக்கு, நித்திய வாழ்வுக்கு வழிகாட்ட, ஒளியாக வந்தவர். இன்றைய காலகட்டத்திலே எமக்கு சமாதானத்தை, நிலையான சமாதானத்தை, நிரந்தர சமாதானத்தை அருள வேண்டும். "அவனின்றி அணுவும் அசையாது" என்ற மெய்ப்பொருளின்படி, நாம் ஏங்கும் சமாதானத்தை, பொங்கும் புனல்போல தரவல்லவர் வேறு யாருமல்ல, இறைமகன் கிறிஸ்துவே.

அவர் எமக்காகப் பாடுகள்பட்டு, மரித்து உயிர்த்த போதும் கூட, மரணத்தை வென்ற வெற்றி வீரனாக வந்தபோதும் அவர் தந்த மாபெரும் கொடை "சமாதானம்" பன்னிரு வரை அனுப்பும்போதும் அவர்களுக்கு உரைத்த உபதேசம், "உங்களுக்குச் சமாதானம்" என்று வாழ்த்துங்கள் என்பதாகும். மரியாள், மார்த்தாள் வீட்டில் யேசு இருந்தபோது, மார்த்தாள் மனம் குழம்பி, யேசுவிடம் முறையிட்டபோது, அவர் மா்த்தாளை சமாதானப்படுத்தினார். அங்கு, அவ்வேளை அவளிடம் சமாதானம் குடிகொண்டது. மரித்து உயிர்த்தபின் யேசு அப்போஸ்தலர்களுக்குத் தோன்றி விடுத்த செய்தி "உங்களுக்குச் சமாதானம்" என்பதாகும். இவற்றின் மூலமாக யேசு சமாதானத்தின் தூதுவராக, சமாதானத்தின் வேந்தனாக, சமாதானத்தின் பிறப்பிடமாக விளங்குகிறார் என்று நமக்குப் புலனாகிறது.

இன்று உருக்குலைந்த எம் மக்களுக்கு, உயிர்களை, உடைமைகளை, உறவுகளை, உரிமைகளை, உடன் பிறப்புக்களை இழந்த மக்களுக்கு உடன் தேவைப்படுவது சமாதானம். இடம்பெயர்ந்த மக்களுக்கு, சொந்த இல்லிடங்களை இழந்த மக்களுக்கு வேண்டுவது சமாதானமே. அமைதி இழந்த மக்களுக்கு, அல்லல்படும் மக்களுக்கு அவசியம் வேண்டுவது சமாதானம். ஆதங்கப்படும் மக்களுக்கு, ஆதரவிழந்த மக்களுக்கு, அனாதைகளாக்கப்பட்ட மக்களுக்கு, அபலைகளாக்கப்பட்ட மக்களுக்கு, அன்பை, அரவணைப்பை, அகமகிழ்வை இழந்த மக்களுக்கு சமாதானம் வேண்டும்.

"எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு" என்று பாடினார் பாரதியார். அதேபோன்று, இன்று "எங்கும் சமாதானம்" என்பதே பேச்சாகவும், மூச்சாகவும் இருக்கிறது. எப்படியாவது, எப்பாடுபட்டாவது சமாதானம் பிறக்க வேண்டும், சமாதானம் நிலவ வேண்டும், வளர வேண்டும், உயர வேண்டும், உயிர்பெற வேண்டும் என்றுதான் மக்கள் விருப்பமாக இருக்கிறது. இது இறைவன் திருப்பமாக, இறைமகன் எமக்கு இந்நாளிலே அருள வேண்டும். ஆசிக்க வேண்டும்.

சமாதானத்தின் தேவனை, வரவிருக்கும் தேவனை நாம் வரவேற்போம், வாழ்த்துவோம், வேண்டுவோம். 'வாரும் ஆண்டவரே வாரும், தாரும் சமாதானத்தைத் தாரும்' என்று கரங்களை உயர்த்தி, அவர் வரங்களை வேண்டுவோம். எம் மனங்களை மாற்றி, எம் குணங்களை மாற்றி இறை அன்பைத் தேடுவோம். இறை ஆசீரைப் பெறுவோம். எம் இல்லங்களிலும், உள்ளங்களிலும், வீட்டிலும், நாட்டிலும் சமாதானம் நிலவ, தழைத்தோங்க வேண்டுவோம்.

பாலக யேசுவின் பிறப்பு, எமக்குச் சமாதானத்தின் பிறப்பாகட்டும்.

**மோ. தார்சீசியஸ்**
**கல்கிசை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்

## தாழ்ந்தோரை உயர்த்திட!

யாரைப் பார்க்கப்
போனீர்கள்?
மெல்லிய ஆடை அணிந்தோரையா
அவர்கள்
இதோ மாளிகையில் இருக்கிறார்கள்
எவரெஸ்டின் படி கட்டுக்களை
ஒன்றன் பின் ஒன்றாக
கடப்பவர்கள்
அல்பீஸ் மலைத் தொடர்களுக்கு
அப்பால் பிறக்கும்
நினைவுகளால் வாழ்பவர்கள்.
உயர்குலத்தை
உதிரத்தில் தேடும்
பண்டிட்டில் வளர்பவர்கள்
இவர்களிடம்.
அறிவு இருக்கிறது
செறிந்த பணமிருக்கிறது
செல்வாக்கும்
ஓர் அரசும் இருக்கிறது உலகமும்
மண்டியிட்டுக் கொள்கிறது
ஏனெனில் அவர்கள் உயர
பறப்பவர்கள் என்பதால்.
தெய்வம் மனிதனானது.
அது காற்றில் ஆடும்
தீபத்தை சந்தித்தது
அடிமை நிலைக்கு தாழ்ந்து
விடிவு கொடுக்க வந்தது.
எழ்மையை அழித்திட
தாழ்ச்சியை தரித்தது.
நீங்கள் யாரைப் பார்க்கப்
போகிறீர்கள

*செல்வன்*
*குருநகர்*

## ஆர்ப்பரிப்பு!

இறைமகனார் சமாதானப் பிரபு மக்கள்
இரட்சகராய் மனுமகனாய் அவத ரித்தார்
கறைபடிந்த வழிகளெலாம் செம்மை யாகும்
கண்ணீரின் பள்ளமெலாம் நிரவ லாகும்
நிறைதவறி உயர்ந்தமலை அகந்தைக் குன்று
நிர்மூல மாயழிந்து தாழ்ந்தே போகும்
மறைநெறியில் மனதுயர்வோம் மகிழ்ச்சி நீடும்
மங்கலப்பொற் புத்தாண்டின் மலர்ச்சி காண்போம்

துன்பமெனும் கந்தையிலே பொதிந்த வாறாய்த்
தொல்லுலகின் பரிசாகப் பிறந்த பாலன்
அன்பினிலும் கருணையிலும் துயர்கள் மாளும்
அரவணைப்பின் வலக்கரத்தே அகிலம் வாழும்
இன்னிசையின் எக்காளத் தொனியின் கீதம்
எண்டிசையும் எதிரொலிக்கும் விண்ணின் மன்னா
மின்னலிடை மழையாகப் பொழியும் சாந்தி
மீதூரப் புத்தாண்டின் எழுச்சி காண்போம்

உன்னதத்தின் மேலிருந்தே உலகம் யாவும்
ஊடுருவிப் பார்ப்பவரைப் பாசான் நாட்டு
மன்னவனை வதைத்தவைரச் சிதறிப் போன
மந்தைகளாம் இஸ்ராயேல் மக்கள் தம்மைத்
தன்னகத்தே ஒன்றிணைக்கும் தயவின் ஊற்றைத்
தாழ்ந்தோரைக் கையேந்தித் தஞ்சம் நல்கும்
பொன்னுலகின் முப்பொருளைப் புகழ்வோம் இந்தப்
புத்தாண்டிற் சத்தியத்தின் உயர்ச்சி காண்போம்

புதியதொரு பாடலினை இசைத்தே என்றும்
புகழ்பாட வரமஈந்த சீயோன் வேந்தன்
எதிரிகளின் சிறையுடைத்தே தூயோர் தம்மை
இரட்சித்து மீட்டெடுத்த இரக்கத் தேவன்
அதிகடினப் பாறைதனை நீரூற்றாக
ஆக்கவல்ல அதிகாரன் ஆரோன் மக்கள்
துதிபுரிந்த நம்பிக்கைத் துணைவன் பாதம்
தோத்திரிப்போம் புத்தாண்டின் அமைதி காணுபோம்.

*யாழ் ஜெயம்*

## அன்பான பாலகனே!

அன்பை பெருக்கிட
அறிவை வளர்த்திட
ஆணவம் ஒளிந்திட
இறுமாப்பு களைந்திட
பாவலர் பாடிட
அன்னையின் மடியினில்
அருந் தவப்புதல்வனாய்
அல்ல
எம் மனங்களில் - எப்போது
பிறப்பாய் அன்பான
பாலகனாய்

பிரியந்தன்
குருநகர்.

## ஒளியாக உதித்திடுவீர்!

காலங் காலமாய் காத்திருந்தோம்
அமைதிப் புறாவின் ஒளியை காண
கன்னி மரியின் கரங்களில் எப்ப
நாம் காண்போம் என்று
அமைதி இழந்த உள்ளங்கள் தேடி
அலைந்தது - உன்னைக் காண
எங்கு நீ இருந்தாய்! எப்ப நீ வருவாய் என்று
ஏக்கத்துடன் தேடி அலைந்தனர் உம் மக்கள்

ஏங்கும் விழிகளின் ஏக்கங்களை - தீர்க்க
ஏழையர் வாழ்வு ஏற்றங் காண
அமைதிப் புறாவாய் நீ இம்மண்ணில் - உதித்தாய்!
ஒளி பிறந்தது.
பூமியிலுள்ளோர்க்கு பூரிப்பு உண்டாயிற்று
புதுப் பிறப்பாய் மாறியது. புது உலகம் - படைக்க
அமைதிப் புறா உதித்ததால் பூமி புத்துயிர்
பெற்றது. ஒளி புலர்ந்தது.

உன் வரவால் அனைவரினதும் உள்ளம் மகிழ்ந்தது
அமைதி தர அமைதிப் புறாவாய்
நீ வந்து உதித்துவிட்டாய்
பாவச் செயல்கள் நீங்கி, பட்டினி நீங்கி
பசியின்றி வாழ உதித்தது அமைதிப் புறா
ஒளி மலர்ந்தது.

அமைதியுடன் வாழுவதற்கும் - பாசங்கள்
நிலைப்பதற்கும்
உறவுகள் ஊற்றாய் தொடர்வதற்கும்
எம் அனைவரையும் ஒன்று சேர்க்க
எல்லோரின் உள்ளங்களிலும் - இல்லங்களிலும்
சமாதான புறாவாகவும், அமைதிப் புறாவாகவும்
வந்துதித்தாய்
சமாதானம் உதித்தது! அமைதி நிலவியது
அமைதிப் புறாவே! உன் ஒளி மங்காது
என்றென்றும் பிரகாசிக்கும் ஒளி பரவியது.

*தி. தவேந்தினி*
*யா/புங்குடு தீவு மகா வித்தியாலயம்,*
*புங்குடுதீவு.*

## பெருமான் யேசுபிரான்

அன்பின் பிறப்பிடமும்
அறிவின் இருப்பிடமும்
ஆன தயாபரன் இருள்
அகற்றும் ஒளியானார்

மாடுறையும் குடிசையிலே
மாமரியாள் மடியினிலே
மார்கழிக் குளிரினிலே
மன்னுயிரை மீட்கவந்தார்

சாந்தியற்ற உள்ளமதில்
சமாதானம் கொண்டுவந்தார்
சமத்துவமாய் வாழ்வதற்கு
சாதுர்யம் ஈந்திடுவார்

வருந்துயர் களைந்தே
வன்முறை நீக்கிய உம்
வரவினால் மனுக்குலம்
வளமுடன் தழைத்திடச் செய்வார்

நாட்டில் அல்லல் தாண்டவமாய்
நாடிவரும் வேளையிலே
நாதியற்றோர்க்கு ஆறுதலாய்
நன்மை தேடி புரிந்திடுவார்

ஏழ்மையின் உருவெடுத்து
எளியவரை காத்திடவே
எளிமையாய் வந்துதித்தார்
எம் பெருமான் யேசுபிரான்

**ஜோ. ஜெ. சலீமா**
**கொழும்புத்துறை.**

## உலகத்தின் ஒளியே உள்ளத்தில் வாரும்!

அமைதியின் மன்னன் அகிலத்தில் உதித்தான்
அருள்வாழ்வின் வழிகாட்டி அவனியிலே தோன்றியுள்ளான்
அன்னை மரி மடிதனிலே அமலனாக அவதரித்தான்
அருட்கரம் தனில் அவர் அமைதியைச் சூழ்ந்திட்டார்

ஆண்டாண்டு காலமாக அனுபவிக்கும் சுமைகளையும்
ஆதரவு தேடி இங்கு அலையும் எம் உறவுகளையும்
ஆறுதல் ஏதுமின்றி பேதலிக்கும் எம் - மவரை
ஆசையுடன் அணைத்திடவே உதித்திட்டார் எம்வேந்தன்

இறைத்திட்டம் ஏற்ற கன்னி இறை செய்திதனைக் கேட்டு
இதயமதுள் கலக்கமுடன் இருக்கையிலே இறைவேந்தன்
இகத்தினிலே தோன்றி நின்று இடுக்கண்கள் நீக்கி நின்றார்
இனிமையான சேதி என்றும் சமாதானம் தோன்றிடவே

ஈவிரக்கம் ஏதுமின்றி உயிர்க்கொலைகள் மலிந்திடவும்
ஈனர்களின் கல்நெஞ்சம் எம் பந்தங்களை
வதைத்திடவும்
ஈடில்லாப் பாடுகளைச் சுமந்திடும் எம் தேசம்
ஈசன் நின் திருவடியில் அமைதியினைக் கண்டிடவும்

உறவுகளைப் பிரிந்து உண்மை அன்புதான் மறந்து
உண்மையும் நீதியும் குழியினிலே புதைத்திங்கு
உத்தமனாம் இயேசு பரன் உதித்திட்டார் இம்மண்ணில்
உண்மை, நீதி, சாந்தி நிறை சமாதானம் ஓங்கிடவும்

ஊதாரி மைந்தர்களாய் தந்தை வழி தாம் மறந்து
ஊமை நெஞ்சங்களாய் விடுதலை தனை இழந்து
ஊனுறக்கம் மறந்திங்கு துடித்திடும் நெஞ்சங்கட்கு
ஊனர்களின் வழித்துணையாய் வந்துதித்தார் இயேசுபாலன்

**த'ருமதி. எம்.ஐ. ராஜ்குமார்**
**பாதுகாவன் நிருபர்**
**அச்சுவேலி.**

## உதயம்

உதயம் தேடும் இதயங்கள்
உலகில் இணைந்திடுமே!
உத்தமன் கிறிஸ்து பதம்
உவகை அடைந்திடுமே!

உதய தாரகை உதித்தது
உன்னதங்களிலே பாடினர்
உன்னத வானவர் அனைவரும்
உருண்டு திரண்டெழுந்தனர்

கன்னிமையில் பழுதின்றி
கன்னி வயிற்றில் உதித்தான்
கர்த்தரவர் உதயம் தனை
கயவர் நாம் புகழ்ந்திடுவோம்

பண்பாளன் துதிபாட
பண்ணிசைத்துப் பாட
பலகோடி உள்ளம் தனிலே
பகலவனாய் உதித்த உதயம்தனை

பாலகனாய் உதித்திட்டார்
பாரினிலே உதய தாரகையாய்
பக்குவமாய் பிறந்திட்டார்
பாழடைந்த மாட்டுத் தொழுவமதில்

மன்னவன் அவனின் உதயம்
மண்ணுலகோர் அனைவர்க்கும்
மாண்புறு உதயமாமே
மங்காத உதயமாமே

வானவன் வீட்டில் நின்ற உதயம்
வானவில்லாக உதித்தது.
வானவர் புடைசூழ
வாசனை உதயமானது

ஓர் முறையே அந்தத்தாரகை
ஓர் மாட்டுத் தொழுவத்தில்
ஒழிந்து பிறந்தது
ஒரு உதய தாரகையாக

அன்பாளன் உதயம்
அந்தப் பண்பாளன் உதயம்
அமைதியின் உதயம்
அனைவர்க்கும் உதயம்

தாவீதரசனின் உதயமது
தாகம் கொண்டோரின் உதயமது
தரணி மாந்தரின் உதயமது
தணியாத உதயமது.

வேண்டிடுவோரின் உதயமது
வேதம் போற்றும் உதயமது
வேள்விகள் இல்லா உதயமது
வேதனை தணித்திடும் உதயமது.

பூவுலகாளும் உதயமது
பூவிதழின் உதயமது
பூம்புனலின் உதயமது
புகழ்ந்திடுவோரின் உதயமது.

பரலோக வாசலின் உதயமது
பாவிகள் அனைவரின் உதயமது
பரிதவிப்போரின் உதயமது
பாசத்தின் உதயமது.

உதயத்தின் பிறந்தநாளை
உவப்புடன் கொண்டாட
உள்ள ஆயத்தம் உலகினர்க்கு
உன்னதமான தொன்றாமே!

தொண்டுகள் செய்திடுவோம்
தொலைந்த எம் இதயங்களை
தொழுவத்தில் தேடிடுவோம்
தொழுவங்களாய் மாறிடுவோம்

உதயத்தின் வரவை
உணர்வுடன் அனுசரிப்போம்
உன்னதர்களாகிடுவோம்
உதயங்களாகிடுவோம்.

*யே. ஜெறால்ட்,*
*புனித வளனார் அம.தி குருமடம்,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.*

## பாலகனே வந்திடுவீர்!

புது மகள் படைத்த புத்தாண்டே
நீ புதுப் பொலிவுடன் விளங்கு
புத்தாண்டு என்று சொல்லி
எத்தனை ஆண்டு கழிந்துவிட்டன.

கழிந்துவிட்ட ஆண்டை அல்ல
மலரப்போகும் ஆண்டை நோக்கி
இவ்வாண்டு அனைவரால் அங்கீகரிக்கப்பட்ட
ஆண்டு ஆனால் ஆழப்பட்டது அல்ல.

இவ்வாண்டு ஓர் சமாதான ஆண்டு
ஓர் நீதியான நிலையான ஆண்டு
தமிழர்களுக்காக உருவாக்கப்பட்ட ஆண்டு
இவ்வாண்டு அனைவராலும் ஆர்ப்பரிக்கப்பட்ட ஆண்டு

பாலகா நீ யுத்தத்தை நிறுத்த வந்தாய்
அதனால் தான் புத்தாடை அணியாமல்
ஏழைக் குடிலில் பிறந்துவிட்டாய்
நீ எழுந்திடும் ஒவ்வொரு வருடமும்
புத்தாண்டே நீ மலர்ந்திடுக.

**ஜே. நேசன்**
**யுலனூர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்கள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம் உனது தேடல்?





மனித வாழ்க்கை என்பது ஒரு தேடல். தேடல் இல்லையேல் வாழ்வின் பொருளில்லை. இலட்சியப் பாதையில் இத்தேடல் மனிதனுக்கு மனிதன் மாறுபடுகின்றது என்பது மாற்றிவிட முடியாது உண்மை. வாழ்வை சுவையாக்கிக் கொள்ள மனிதன் தேடிக்கொண்டே இருக்கின்றான். இன்று மனித வாழ்க்கையில் தேடல்கள் அதிகரித்துக் கொண்டே செல்லுகின்றது கண்கூடு.

## தேடல்கள் பலவிதம்

வண்டுகளின் தேடல் மலர்களில் தேன். கவிஞனின் தேடல் மனதில் கற்பனை. காதலின் தேடல் வாழ்வில் காதலி. வேட்டைக்காரனின் தேடல் காட்டில் விலங்குகள். கலைஞனின் தேடல் பார்வையில் அழகு. பிச்சைக்காரனின் தேடல் பாத்திரத்தில் பிச்சை. விஞ்ஞானியின் தேடல் உலகில் கண்டுபிடிப்பு. உளவியலாளரின் தேடல் உள்ளத்தில் அமைதி. சாத்தானின் தேடல் பூமியில் குழப்பம். பக்தனின் தேடல் பரம்பொருள். ஆண்டவனின் தேடல் அகிலத்தில் ஆத்திகன்.

எனவே எங்கும் தேடல். எதிலும் தேடலின் விதங்கள் விபரித்துக் கொண்டே போகலாம். பல்வேறு காரணங்களுக்காக பலவிதமான தேடல்கள் மனிதனில் புதைந்து கிடக்கின்றன.

## ஒவ்வொன்றும் ஒருவிதம்

தேடல்கள் இல்லையேல் மண்ணில் மனித வாழ்க்கை இல்லை. தேடலில் மையங்கொண்ட மனித வாழ்க்கை மனிதனுக்கு மனிதன் மாறுபட்டாலும் ஒவ்வொன்றும ஒவ்வொரு விதத்தில் அமைகின்றது.

இங்கு இரண்டு வித்தியாசமான தேடல்கள் கிறிஸ்துவில் மையப் படுத்தப்படுகின்றன.

பாவத்தின் சேற்றில் அமைதி இன்றி பரிதவிக்கும் பாவிக்கு நேசக் கரம் நீட்ட, மண்ணுலகில் மனிதர் எவரும் தரமுடியாத அமைதியை தன்னகத்தே கொண்டு மனிதனைத் தேடி மாட்டுக் கொட்டிலில் மன்னர் இயேசு பிறக்கின்றார். பிறந்த பாலனைத் தேடி ஞானிகள் ஒருபுறம். அரசன் ஏரோது மறுபுறம். ஆனால் இவர்களின் தேடலின் நோக்கம் இரு வேறு முரண்பட்ட காரணங்களாக இருந்தன..

உண்மையானவரை உண்மையில் உண்மையாகவே தேடுகின்றார்கள். ஞானிகள் பாவத்தில் பாழாய்ப் போன உலகை மீட்டு பாரெங்கும் நல்லமைதியை அருள நாயகன் பிறந்துள்ளார் என்று அவரை தேடுகின்றனர். அவரை வணங்கி அவரிடம் ஆசீர் பெற அவரைத் தேடினார்கள். உண்மையாகவே அவர்களின் உள்ளம் உலக மீட்பரைத் தேடும் உள்ளம் என்பதால் அதிசய விண்மீன் அவர்களின் தேடலுக்கு ஆதரவு கொடுத்தது. ஆநிரைத் தொழுவில் அகிலத்திற்கும் அமைதி அருள்பவரை கண்டு வணங்கினர். சுயநலமற்ற தேடல் அவர்களில் சுத்தமாக இருந்ததால் தேடிய தேவனைக் கண்டனர். வேண்டிய அமைதியை அவரில் பெற்றனர். மன்றாடிய அசீரும் மனம் மகிழ கிடைத்தது.

'எனது அரசிற்கு போட்டியாக ஒரு அரசனா? உலகில் அவனை வாழவிடுவதா? அவனைக் கொல்ல வேண்டும்' கங்கணம் கொண்ட ஏரோது நாயகன் இயேசுவை நகரெங்கும் தேடப் புறப்படுகின்றான். வள்ளல் தேவனைக் கண்டு வணங்கி அகில மீட்பரிடம் ஆசீர் பெற பொய் போர்வையில் உண்மையானவரை தேடுகின்றான். ஏரோதின் தேடலில் ஏமாற்றும் எண்ணம் இருந்தது. ஏற்றுக் கொள்ளும் உள்ளம் அவனிடம் இல்லை. பொய்மை இருந்தது. உண்மை இருக்கவில்லை. அநீதி இருந்தது நீதி இருக்கவில்லை. பழிவாங்கும் எண்ணம் இருந்தது பரிவுபசாரம் இருக்கவில்லை. வஞ்சகம் இருந்தது. நேர்மையிருக்கவில்லை. இதனால் நேச இயேசுவை அவனால் கண்டு கொள்ள இயலவில்லை. மாறாக அவன் தேசம் எங்கும் பச்சிளம் பாலகரின் தலைகள் உருண்டன. பச்சை இரத்தம் ஆறாகியது. இருந்தும் தேடிய இயேசுவை கண்டு அழிக்க முடியவில்லை. காரணம் அவன் தேடல் சுயநலம் சுற்றிப் போய் இருந்தது. தேவனுக்கு அவன் தேடல் உகந்ததாக இருக்கவில்லை.

எமது மண்ணில் இன்றைய தேடல்கள் பல விதம். காணியைக் கைப்பற்ற கணக்கற்ற தேடல்கள். பணத்தை சேமிக்க பல வழித் தேடல்கள். வீட்டைக் கட்ட விதவிதமான தேடல்கள். கட்டடங்களை வாங்கி வாடகைக்குவிட வெளிநாட்டில் இருந்து முண்டியடித்து வந்து மூலை முடக்கெங்கும் தேடல்கள்.

இவ்வாறு இன்றைய தேடல்கள் சுயநலத் தேடல்களாக அதிகரிக்கின்றன. இதற்கு மத்தியில் நாட்டில் நல்லமைதி வேண்டி ஆட்சியாளர்கள் அதைத் தேடுகின்றார்கள். பரம எதிரிகளாக இங்கு காணப்பட்டவர்கள் பக்கத்தி லிருந்து இந்த அமைதியைத் தேடுகின்றார்கள். இவர்கள் உள்ளங்களில ஞானிகளின் தேடல் உள்ளதா? ஏரோதின் தேடல் உள்ளதா? யார் அறிவார்.

## உனது தேடல்!!

நம்முடைய வாழ்க்கையில் சுயநலத்தை வெறுப்போம். சுத்த கருத்துடன் தேவனைத் தேடுவோம். அலகையில் மாயைகளை வெறுத்த ஆண்டவரைத் தேடுவோம். புழுவும் பூச்சியும் அரிக்கும் செல்வங்களை தேட வேண்டாம். புண்ணிய செல்வங்களை பூமி எங்கும் தேடுவோம். சுய இலாபத்தால் இருண்ட இதயத்தை இடித்தவிட்டு இயேசுவின் அமைதியை தேடுவோம். இனியும் வேண்டாம் ஏரோதின் தேடல்கள். எமக்கு வேணடும் ஞானிகளின் தேடல்கள். வெறுப்போம் ஏரோதின் தேடலை ஏற்போம் ஞானிகளின் தேடலை தற்போது தான் தேடிய அமைதியை தேவனில் காண்போம். அவரும் எமக்கருள்வார்.

'தேடுங்கள் கண்டடைவீர்கள்
தேவனின் மொழி இது
மாறவேண்டும் எம் மனங்கள்
தேடவேண்டும் தேவனின்
அமைதியை'

ம. பிரான்சிஸ்க்
வெற்றிலைக்கேணி

## சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை



இறைவனின் அருள் வாழ்வினை இழந்து வாழந்த மனிதனை, தனது இரத்தத்தினால் மீட்க உருவெடுத்த இயேசு பாலகனின் பிறப்பினை, மகிழ்வுடன் நினைந்து, ஆனந்தமாக வாழ்த்துக் கூறி, உளவனப்புடன் புதிய ஆண்டை எதிர்கொள்ள உலகம் தயாராகி விட்டது. புதுப்புது உடைகள் வாங்கி, வாழ்த்து அட்டைகள் அனுப்பி வகைவகையாய் சிற்றுண்டிகள் சுட்டு வெளி அளவிலே பலவகையான ஆயந்தங்களிலே அனைவரும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். இதமாக வீசும் சமாதானக் காற்று எம் மகிழ்சியினை இரட்டிப்பாக்கும் என எதிர்பாக்கின்றோம் இதேவேளையில், மிக முக்கியமான ஆயத்தமொன்றை நாம் நிறைவு செய்துவிட்டோமா? என்று சிந்தித்து விடை காண வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதாவது நாம் ஒவ்வொருவரும் ஆன்மீகரீதியிலே எத்துணை சிறப்பாக ஆயத்தப்படுத்தியுள்ளோம்?. என்பது தான் அந்த வினா.

விழாக்கள் என்பது பெரு மகிழ்வின் நாள்கள் ஆகும். ஆனால் அவைகள் எம் வெளி ஆயத்தங்களியே தான் தங்கியுள்ளன என கூறமுடியாது. மகிழ்ச்சி என்பது எமது உள்ளங்களிலே உதித்து எழவேண்டும். அது விழாவோடு மட்டுப்படுத்தப்பட்டு விடாமல், ஆறாக எம் வாழ்விலே ஒட வேண்டும். இதற்கு ஆன்மீக புதுப்பித்தல் அடித்தளமாக அமைகின்றது. அன்று மனுவுரு எடுத்து மனுக்குலத்தை மீட்க வந்த இறைமகனுக்கு சத்திரத்திலே இடம் கிடைக்கவில்லை. மாட்டுத் தொழுவமே அவரின் பிறப்பிடமாகியது. ஆனால். இன்று அதே நிலைதான் எம்மத்தியிலேயும் உள்ளது.

இயேசு பிறக்க சத்திரங்கள் தேடப்பட்டது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்களுக்கு முன்பு. இன்று மனித மனங்களாகிய சத்திரங்களை இறைமகன் தேடுகின்றார். ஆனால் எம் சத்திரங்களோ பலவகைப்பட்ட பொருட்களினாலும், ஆசைகளினாலும், மனிதர்களினாலும் நிறைந்துள்ளன. இயேசு பாலனுக்கு எங்களிடத்திலே இடமில்லை. இந்த நிலையினின்று எம்மை மாற்றி எம் மனக்கோவில்களைத் தூய்மைப் படுத்தி அவற்றை இயேசுவின் பிறப்பிற்காக ஒழுங்கமைப்பதே இவ் விழா எமக்கு விடுக்கும் அழைப்பாகும். எமது உள்ளம் இயேசுவின் பிறப்பிற்கு தயாராக இல்லை எனில் இக் கிறிஸ்து பிறப்பு விழாவினால் எவ்வித பயனும் இல்லை. பாவங்கள் நீக்கி பரகதி சேர்க்கும் இயேசுவிடம் எம் பாவங்களை அறிக்கையிட்டு பாவ மன்னிப்புப் பெற்று ஆறுதலடைவோம். உலகம் தரமுடியாத1 மன அமைதியினை இயேசு பாலன் எம் மனங்களிலே உதிக்கச் செய்வார். எம் உள்ளங்களில் அவரின் பிறப்பு. எமக்கு அதையே பெற்றுத்தரும்.

*சகோ. ஜெ. எல்மோ*

## தேடும் அமைதி...



"உள்ளத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகும்! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக" (லூக் 2:13-14)

துப்பாக்கி முனைகள் குறிபார்ப்பதை நிறுத்தி விட்டன, பல்குழல் கணைகள் தங்களின் செயற்பாடுகளுக்கு, ஓய்வு கொடுத்து விட்டன. கவசவாகனங்களின் இரச்சல்களும்...... இரும்பு பறவைகளின் போர் ஒலியும் மறைந்துவிட்டன, எம்மை சுற்றியிருந்த முள்வேலிகள் அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன கடல் அன்னையின் மக்கள் அவளின் மடியில் தடைகளின்றி தவழ ஆரம்பித்துவிட்டனர், போர்க்களத்தில் நின்று எதிர் சமர் புரிந்த தளபதிகள் பேச்சுவார்த்தை மேசையில் ஒன்றாக அமர்ந்து விட்டனர், இவைகளைப் போல் இன்னும் பல, பல எங்கள் மண்ணிலே இவைகள் உதயமாகிக் கொண்டிருக்கும் அமைதியின் கீற்றுக்கள், இக்கீற்றுகளில் மொத்தவடிவமாகிய அமைதி எமது மண்ணிலே உதயமாக வேண்டும், எம்மக்களின் நீண்ட நாள் கனவு இதுதான்.

ஆனால், யாழ் மண்ணிலே நடக்கும் மூடிமறைக்கப்படமுடியாத கேவலமான நிகழ்வுகள் உதயமாகிக் கொண்டிருக்கும் அமைதியின் கீற்றுகளை மூடிமறைக்கும் கவசங்களாக மாறிக்கொண்டிருக் கின்றன. நாங்கள் எங்களின் வரலாறை மறந்து விட்டோம். மறந்ததன் பிரதிபலிப்புக்கள் தான் இன்று யாழ் மண்ணில் அரங்கேறும் அசிங்கங்கள்.

எங்களின் உடன் பிறப்புக்கள் பல எங்களுக்காக முகவரிகளின்றி வெடித்து சிதறி காற்றோடு கலந்த கதை எங்கள் வரலாறு. நாவற்குளி பாலத்தால் நான்கு நாட்கள், நான்கு அடிகடக்க முடியாமல் திணறிய கதை எங்கள் வரலாறு. பல்குழல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது சாவகச்சேரி நகரம் பல மக்களுடன் மண்ணோடு மண்ணாகிய உண்மையை நாமறிவோம் சமாதானத்துக்கான யுத்தம் என்று, எமது உடன் பிறப்புகளை முகவரிகள் தெரியாமல் அடித்தும், சுட்டும், கொன்றும் புதைத்த கண்ணீர் கதையை செம்மணி ஒப்பாரி பாடும் மக்கள் தஞ்சம் தேடிய ஆலயங்கள் இரும்பு பறவைகளின் எச்சங்களினால் மக்களுடன சேர்த்து சின்னாபின்னமாக்கப்பட்ட நிகழ்வை இன்றும் அந்த ஆலயங்கள் நினைவூட்டும். இவைகள் தான் எமது வரலாறு. இவைகளினூடக நாம் புடமிடப்பட்டோம், இன்று A-9 கண்டிவீதி திறப்பினூடக இவைகளை நாம் மறக்க ஆரம்பித்துவிட்டோம் அதன் விளைவாக சாத்தானின் வருகையும் இருளின் ஆட்சியும் எங்களின் மண்ணில் தெரிய ஆரம்பித்திருக்கின்றன.

யாழ் நகர திரைமறைவில் அரங்கேறும் கருக்கலைப்புகளும், நடத்தப்படும் விபச்சார விடுதிகளும், வீதிகளில் அரங்கேறும் இளைஞர்களின் சேட்டைகளும் குழுமோதல்களும், கல்விகற்க வேண்டிய காலத்தில் ஒரு பிள்ளைக்கு தாயாகும் மாணவிகளின் பரிதாப வாழ்வும் இருளின் பிரதிப்பலிப்புக்கள். இன்ரநெற் என்ற மாயைக்குள் சிக்கி முதிர்ச்சி அடையும் முன் பாலியல் துஸ்பிரயோகங்களில் ஈடுபடும் மாணவர்களில் அலங்கோலமான வாழ்வும், வழிதவறிப்போகும் இளமையை தட்டிக்கேட்க துணிவற்ற பெற்றோர்களின் அவல நிலையும், தவறிப்போகும் இளமையை தட்டிக்கேட்காமல், தட்டிக்கொடுக்கும் பெற்றவர்களின் "பெருந்தன்மையும்" ஆடை குறைப்புகளை நாகரீகம் என நினைத்து அநாகரீகமாக வீதிகளில் வலம் வரும் பெண்மையும், கருவிலே அழியப்போகும், சமாதானத்திற்கான அறிகுறிகள் மீண்டும் எமது மண்ணிலே உருவாகப் போகும் அழிவுகளுக்கான ஆரம்ப நிலை.

எனவே, வானதூதர்களால் இடையர்களுக்கு அறிவிக்கப்பட்ட அமைதியின் நற்செய்தி எமது மண்ணிலும் ஒலிக்க வேண்டுமாயின், எமது மண்ணிலே பிறந்து கொண்டிருக்கின்ற "அமைதி" என்ற குழந்தையை கருச்சிதைவு செய்யாது பாதுகாக்க வேண்டும். எமது மண்ணிலே பிறப்பெடுக்கும் அவலங்களும், கேவலங்களும், அநாகரிகங்களும் அசிங்கங்களும் கருவிலேயே சிதைக்கப்பட வேண்டும். எம் ஒவ்வொருவருடைய வாழ்வும் மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்றே இதற்கான அத்திவாரத்தை நாட்டுவோம். எம் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட வாழ்வாலும் கருவிலே இருக்கின்ற அமைதியை பிறப்பெடுக்க ஒத்துழைப்போம் அப்போது "உலகிலே அவருக்கு உகந்த வருக்கு அமைதி உண்டகும்" என்ற அமைதியின் நற்செய்தி எமது மண்ணிலே திக்கெட்டும் ஒலிக்கும், அமைதிக்கான எமது கனவு நிஜமாகும்.

**அ. அன்ரன் ஸ்ரீபன்.**

## மானிடர் யாவருக்கும் கிறிஸ்துவின் செய்தி



இன்று மேற்கத்தய நாடுகளில் அமைதியாய், அற்புதமாய் கொண்டாடப்படுமா எனும் பெரிய கேள்வி எழுகின்றது. ஏனெனில் எங்கு, எப்போது கிறிஸ்து பிறந்ததாக வர்ணிக்கப்படும் புனித நகரமான ஜெருசலேமில் இன்றும் இரத்த வெள்ளம் ஒடுகின்றது. நாளுக்கு நாள் கொலைகளும், குண்டு வெடிப்புக்களும், ஆக்கிரமிப்புக்களும், அழிவுகளும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இக்கட்டான இச் சூழ்நிலையில் மக்கள் என்ன செய்வாதெனத் தெரியாது அங்கலாய்கின்றனர்.

ஆண்டவன் ஆசீரால் நம் நாட்டு இரத்த ஆறுகள் காய்ந்து கொண்டிருக்கின்றன. போர் எனும் புயல்காற்று ஓய்ந்து சமாதானக் காற்று சந்தோஷமாய் தேசமெல்லாம் வீசுகின்றது. ஆனந்தத் தென்றல் அனைவரின் ஆன்மாக்களையும் வருடிச் செல்கின்றது. மகிழ்சியும், அமைதியும் அனைவரையும் ஆட்கொள்கின்றது. நிரந்தர சமாதானத்தின் அறிகுறிகள் பல திசைகளிலும் தென்படுவதையிட்டு ஆடுகின்றேம். பாடுகின்றோம். ஆனந்தமாய் பலவற்றைக் கொண்டாடுகின்றோம். இந்த சூழ்நிலையில் கிறிஸ்து பிறப்போடு எம் நாட்டில் நிரந்தர சமாதானம மலர்வதாக என சிலர் ஆசிக்கின்றனர். ஆனால் பலர் இந்த நத்தார் பண்டிகையை வெகு விமரிசையாய் கொண்டாட திட்டங்கள் தீட்டுகின்றனர். ஆட்டங்கள் போடுகின்றார், மேடைகள் தேடுகின்றனர். மாடிகள் ஏறுகின்றார். கோயில்களும் நாடுகின்றனர். இதனைப் பார்ப்போரும பரவசம் அடைகின்றார்.

பல வழிகளில் இந்த மனிதத்தை தொலைத்து விட்டோம். அன்பு, நீதி, உண்மை, மனித மாண்பு, மன்னித்தல், எனும் நல்ல பண்புகளைத் தொலைத்துவிட்டோம், தொலைத்த இடத்தையும் மறந்துவிட்டோம். அதனால் ஆசை, அதிகாரம், போட்டி, பொறாமை, எரிச்சல், ஏமாற்றுதல், கொலை, கொள்ளை, பகைமை, பாலியல் வல்லுறவு, அன்பற்ற பேச்சு, நான் என்ற சுயநலம் போன்ற பாவங்களால் நாம் சூழப்பட்டு பாவிகளாய் வாழ்கின்றோம். எம்மை மீட்கவே இரட்சகர் இயேசு மனிதனாக, மீட்பராக மீண்டும் எம் மத்தியில் பிறக்கின்றார். பாவ வாழ்வை, இருள் சூழ்ந்த சீவியத்தை விட்டு மனம் மாறி ஒளியின் பாதையில் நாம் நடக்க அழைக்கின்றார். பயணிக்க தயாராகுவோம்.

"நேர்மையாளர்களை அல்ல பாவிகளையே மனம் மாற அழைக்க வந்தேன்," என்கின்றார் இயேசு (லூக் 5: 32). இப்போது கிறிஸ்து யாருக்காகப் பிறந்தார், ஏன் பிறந்தார், கிறிஸ்தவர்கள் என்றால் யார் என்பன புரிந்து விட்டால் போதும். பின்னர், புரிந்த செய்தியை, தெரிந்த வழிகளில் சிந்திப்போம், செயற்படுத்துவோம், அயலவருக்கும் தெரியப்படுத்துவோம். மானிடர் நாம் ஒன்றாய் கூடி அன்பு சமூகத்தை கட்டியெழுப்புவோம், அதற்காய் எம்மை ஆயத்தம் செய்வோம். பழைய பாவ வாழ்வை, அன்பற்ற செயல்களை, பழிவாங்கும் தன்மைகளை களைந்து, கிறிஸ்து பிறப்போடு - அன்பு, மன்னிப்பு, சகோதரத்துவம், சமாதானம், எனும் மனித பண்புகளை வளர்த்துக் கொள்வோம். மீட்பர் இயேசுவின் வருவாய் எம் உள்ளத்திலும், உலகத்திலும் அமைதியும், சமாதானமும் உண்டாக ஆசிப்போம்.

"மானிடர் மனைகளிலும். அவர் தம் மனங்களிலும் கிறிஸ்து பிறக்க என் ஆசிகள்"

அருட். ச.யேசுதாசன். O.M.I
டி. மசனட். குருமடம்,
கொழும்புத்துறை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதி அருளும் அரசனாய் ஆண்டவன் எம் மண்ணில்

"இருளிலும் இறப்பின் பிடியிலும். இருப்போர்க்கு ஒளி தரவும் நம்முடைய காலங்களை அமைதிவழி நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தினாலும் இரக்கத்தினாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது" இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் அலகையின் அழுங்குப் பிடியில் சிக்கி இறைவனை மறந்து உலக இன்பங்களையே தேடிய மானிட சமுதாயத்தினை அலகையின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க, உரிமை வாழ்வை, விண்ணக மகிழ்வை வழங்கிட இறைவன் மனிதனானார். விண்ணக வேந்தன் மண்ணகம் வந்த மகிழ்வு நிறை நாளை ஆண்டுதோறும் நினைவுகூர்ந்து இம் மன்னனது இரண்டாம் வருகையை எதிர்நோக்கி அதற்காக எம்மைத் தாயார் படுத்தும் நாம் இவ் வருட கிறிஸ்து பிறப்பு விழாவை சம கால நிலைப்பாடுகளுடாக உள்ளார்ந்த ரீதியில் உணர்ந்து கொள்ள அழைக்கப் படுகின்றோம்.



அன்று ஓர் அரசனின் வீதி உலாவிற்கு முன் அவன் செல்ல இருக்கும் வீதிகள் சிறப்பான முறையில் சீரமைக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டு காணப்படும், அதே மரபு முறையில் விண்ணக வேந்தனின் வருகைக்கு ஆயத்தம் செய்தார் திருமுழுக்கு யோவான். "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக் குங்கள் அவருக்காகப் பாதையைச் செம்மையாக்குங்கள், பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும், மலை குன்று யாவும் தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும். கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவருக்கும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்" என்று யோவன் ஆயத்தம் செய்தது வெறும் வீதிகளையல்ல இறைமகன் வரவிருக்கும் மக்களது உள்ளங்களையே. கடின மனங்களை மாற்றி, ஏற்றத் தாழ்வுகளை அகற்றி மூடக் கொள்கைகளை விட்டு விலகி சட்டத்தையன்று மனிதத்தை மதித்து இறைவழி வாழ அழைத்திட்டார்.

மெசியாவின் வருகைக்கான யோவானின் ஆயத்த செயற்பாடுகள் என்றுமில்லாதவாறு இன்றைய நாட்களில் எமது நாட்டில், மக்களின் உள்ளங்களில் மேற்கொள்ளப பட்டுள்ளமை ஓர் மாபெரும் உண்மை. கடந்த இரு தசாப்தங்களாக ஓயாது மோதிக் கொண்டிருந்த போரலைகளினால் அடித்துச் செல்லப்பட்ட உயிர்களும், உடமைகளும், மனித மாண்பும் மதிப்பிட முடியாதவை. இந்த அநீதியின் ஆட்சியில் அலகையின் கோரத் தாண்டவத்தில் சிக்குண்டு பாவிகளாய் பரிதவித்து மனமுடைந்து நின்மதியற்று விடியலை எதிர்பார்த்து ஏக்கத்துடன் வாழ்நத எம் நாட்டு மக்கள் மேல் அமைதியின் ஒளிக் கீற்றுக்கள் இன்று பிரகாசிக்க ஆரம்பித் துள்ளன. களத்திலே போராடிய கரங்கள் கை குலுக்கி உறவு கொண்டது பகைமறந்து மன்னித்தும் ஆட்சியாளர்களது மனமாற்றமும் கடமையுணர்வும், மக்களி டையே ஏற்பட்ட சமத்துவமும் சகோதரத்துவமும் அனைத் திற்கும் மேலாக ஆண்டவன் சன்னிதி நோக்கி எழுந்து கொண்டிருக்கும் இலட்சக் கணக்கான, கோடிக் கணக்கான உள்ள ங்களின் கண்ணீர்ச் செப ங்களும் அமைதியின் மன்ன னான கிறிஸ்துவின் வரு கைக்கான அர்த்தமுள்ள சிறப்பான ஆயத்தங்களாக அமைகின்றது என்றால் அது மிகையாகாது.

அன்று அமைதியை மீட்பைக்கொணர்ந்த மெசியர்வை கடின மனம் கொண்ட சுயநலம் கொண்ட யூதர்கள் சிலுவையில் அறைந்து கொன்றது போல் எம் நாட்டின் யுத்த நிலமையைத் தமக்கு சாதகமாக்கி சேவைக்காகவன்று தம் தேவைக்காக செயலாற்றும் சில புல்லுருவிகள் இன்று ஏற்பட ஆரம்பித்துள்ள அமைதி நிலையைக் குழி தோண்டிப் புதைக்க எண்ணுகின்றனர். நன்மையைத் தீமை வெல்வதில்லை என்பதை உணர்த்திய கிறிஸ்துவின் உயிர்ப்பு போல் இத் தீமையை வென்றிட நீதியை நிலைநாட்ட நாம் ஒவ்வொருவரும் முன்வருவோம்.

முழு மனித இனத்தின் மீதும் இரக்கம் கொண்ட இறைவன் அன்று தம் ஒரே மகனை மீட்பராக அனுப்பியது போல் இன்று சிறப்பாக எம் நாட்டின் மீது இரக்கம் கொண்டு எம் தேசமதில் அமைதியின் மன்னனாக தம் மைந்தனை அனுப்பியுள்ளார். எனவே எமது மனமாற்றம் நிறை தூய வாழ்வால் சகோதரத்துவ அன்பால் அவர் தரும் அமைதியை நிறைவாகப் பெறுவதுடன் உத்தம கிறிஸ்தவ வாழ்வின் மூலம் எமது உள்ளங்களை இறைவனின் ஆலயமாக மாற்றி நிலை வாழ்வில் நுழையவும் ஆயத்தமாவோம்.

செல்வி. ம. யூஜின்
இளவாலை.

# மீண்டும் எம்மண்ணில் பிறப்பாரா? எம் துயர் துடைப்பாரா?

கலியுகத்தில் இருந்து கணணியுகத்தில் காலபதித்து "கம்யூட்டர்" யுகத்தில் நடைபயிலும் இன்றைநெறில் இளைப்பாறி இருபத்தியோராம் நூற்றாண்டையும் அடைந்து விட்ட இவ்வுலகில் இறைமகன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒளி உதித்தது, உண்மை பிறந்தது. வண்மை தகர்ந்து வடிவான சிற்றூரம் பெத்லேகம் ஆர்ப்பரிப்பால் அதிர்ந்தது. "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக, பூவுலகில் நன்மைசெய்தோர்க்கு அமைதியாகுக. என வானவர் அணி, அணிவகுத்தது. இருளுக்கு எதிரான போர், தீமைக்கு எதிரான போர், பொய்மைக்கு எதிரான போர், அநீதிக்கு எதிரான போர் ஆரம்பமாகியது. "வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார், இவ்வார்த்தை கடவுளோடு இருந்தது கடவுளாயும் இருந்தது" என்ற வார்த்தை மனுவானது

ஏன் இந்தக் கடவுள் மனிதனாக வேண்டும்? ஏன் மானிடர் மீட்கவேண்டும்? ஆம் ஆதிப் பெற்றோரின் பாவம் படர்ந்து அன்றும் ஆணவம் தலைவிரித்து ஆடியது கொலை கொள்ளை, கற்பழிப்புக்கள், கள்ளச் சந்தைகள் அன்றாட வாழ்வின் நிகழ்வுகளாயின. மனித அடிமைத்தனங்கள் அடாவடித்தனங்கள் இன்றும் போல் அன்றும் குறைவில்லை ஏழை பணக்கார ஏற்றத்தாழ்வுகள், ஆயக்காரர், பாவிகள் என்ற பாகுபாடுகள். இந்த நிலையில் தான் எம்மண்ணில் பிறப்பார்? மீட்பரென? எம்துயர் துடைப்பாரா? மீட்பரென எதிர்பார்த்த அன்றைய யூத இனம் அந்த யூத இனத்தின் துயர் துடைக்க பிறந்தார் மீட்பர். பறைசாற்றினார் எளியோர்க்கு நற்செய்தி, சிறைப்பட்டோருக்கு விடுதலை, குருடருக்கு பார்வை, ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு, அளிக்கப் பட்டது அருள்தரும் ஆண்டின் நற்செய்தி. புரிந்து கொண்டதா அந்த இனம்? தெரிந்து கொண்டதா இந்த இனம். ஏற்றுக் கொண்டதா அந்த இனம்? இல்லை காரணம் அவர்கள் எதிர்பார்த்ததோ நிலையற்ற மீட்பு, நிலையற்ற கண்துடைப்பு. இதனால் அவர் காட்டிய வழியை அந்த இனம். கண்டு கொள்ள வில்லை. அவர்காட்டிய வழியில் அவர்களால் நடக்க முடிய வில்லை.

இதேபோன்ற அரசியல் சமூக பின்னனிகளுடன் பிரச்சனைகளுடன் சீரேடுகளுடன் "இருளே எம் இருப்பா? ஒளியே வாராதா? மரணம் தான் முடிவா? ஆண்டு பல ஆண்டுகளாக நாம் அடிமையாய் வாழ்வதா?" என ஏங்கித்தவிக்கிறது எம் மண் எம் மக்கள் காரணமற்ற கைதுகள், முகவரி தெரியாத கல்லறைகள், முகம் பார்க்க முடியாத சடலங்கள், திறக்கப்படாத புதைகுழிகள் எனச் சில தாங்கொணா துன்பங்களோடு பயணித்தது தான் எம் மண் எம் மக்கள்.

எனவேதான் இந்த மண் இந்த மக்கள் மீண்டும் எம் மண்ணில் பிறக்காரா? எம்துயர் துடைப்பாரா? என கண்ணீரில் நொந்தவர்களாக கண்ணீரில் வாழ்வோர்களாக, கண்ணீரில் வளர்வோர்களாக கலங்கித் தவிக்கின்றது. எப்போது எம் மண்ணில் ஒளி உதிக்கும் அநீதியின் ஆட்சி ஒழியும். இசையாஸ் இறைவாக்கினர் குறிப்பிட்டதுபோல எப்போது எம் மண்ணில் குருடருடைய கண்கள் திறக்கப்படும் செவிடான காதுகள் கேட்டும், எப்போது முடவன் மான்போல துள்ளுவான் எப்போது ஊமைகளின் நாவு மகிழ்ச்சியால் பாடும் என பார்த்துப் பார்த்து கண்கள் பூக்கின்றன.

ஆம் இந்த அமைதியற்ற சமாதானமற்ற சகோதரத்துவம் அற்ற இம்மண்ணில் என்றோ ஒரு நாள் "உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக பூவலகில் நன்மனத் தோர்க்கு அமைதியாகுக என்ற சமாதானத்தின் இந்த எதிர்பார்ப்பின் இன்னிசைக் கீதம் எம் மண்ணில் காலாற்றிற்கும் முழங்கும் என்பது உறுதி. இந்தவேளை எம்மண்ணில் வேதனையா? நெருக்கடியா? இன்னலா? இடப்பெயர்வா? பட்டினியா? இடரா? இறப்பா எல்லாம் அழியும் எம் கண்ணீரும் ஒழியும் எம்மண்ணில் மன்னர் யேசு பிறக்க எம் துயர் துடைக்க எம்மை உருவாக்குவோம். முழங்குவோம் நற்செய்தியை நம் வாழ்வில், வாழ்வோம் வாழவைப்போம்.

அ. யூட்கறோவ் A/L. 2002
புனித வளனார் குருமடம் (அ.ம.தி.)
கொழும்புத்துறை.

# உள்ளத்தின் சமாதானமே உலக சமாதானம்





உருண்டோடும் உலகிலே, அள்ளுண்டு செல்கின்ற மனிதன், தாம் கடந்து செல்லும் பாதையில் இன்பம் துன்பம், வளர்ச்சி தளர்ச்சி, எழுச்சி வீழ்ச்சி, எனும் நிலைகளில் கால் பதித்துச் செல்கின்றான். எது எவ்வாறாயினும், அவனது பயணம் விடுதலையை நோக்கிய பயணமாக அமைகின்றது.

எம்மிடத்தில் எவ்வளவு ஆற்றல்கள், திறமைகள், வல்லமைகள் இருந்த போதிலும், போராடித்தான் வாழ வேண்டுமென்பது, இறைவனின் சித்தமாகும், ஆதி மனிதன் செய்த பாவ வினையால், மனுக்குலத்திற்கு இறைவன் விட்ட தண்டனையிது. அதாவது எமது வாழ்வில் ஏதாவது ஒரு பிரச்சனை இருந்து கொண்டேயிருக்கும். சிலருக்கு வறுமை என்பது ஒருபிரச்சனை. சிலருக்கு நோய் ஒரு பிரச்சனை. சிலருக்கு தாம் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை நடக்கவில்லை என்ற பிரச்சனை. இவற்றிற்குத் தீர்வுகாண நாம் முற்படும் போது, நமக்குள் ஒரு போராட்டம் நடைபெறுகின்றது. இப்போர், தனிமனித வாழ்வில் ஆரம்பமாகி, குடும்பத்தில், சமுதாயத்தில், நாட்டில் என விரிசலடைந்து, பெரியதொரு யுத்தமாக மாறிவிடுகின்றது. இதனால் மனித வளங்கள் அழைக்கப்படுனிறன. மனித மாண்புகள் இழிவுபடுத்தப்படுகின்றன. மனித உயிர்கள் கொடூரமாகப் பறிக்கப் படுகின்றன ஆதியில் மனிதன் இவ்வாறு வீழ்ச்சியுற்று அழிகின்ற நிலையை நீக்கிட, மானிட மகனைத் தந்தையாம் இறைவன், இவ்வுலகிற்கு அனுப்பினார்.

வாழ்வாக வழி யாக, உயிராக ஒளியாக, உலகிற்கு வந்த தேவன், நல்லவை தீயவை, நன்மை தீமை, பாவ புண்ணிய பேதங்களைப் பகுத்தறியும் வகையில், வார்த்தையில் உரைத்ததை வாழ்ந்தும் காட்டினார். நோயிலும், பேயிலும், வறுமையிலும் வரட்சியிலும், அடிமையிலும் அறியாமையிலும், விலங் கிடப்பட்டு, விடுதலை தேடியவர்களுக்கு, அவரால் விடுதலை கிடைத்தது. அதாவது யேசுவின் வலுவுள்ள வார்த்தைக்கு செவி மடுத்தவர்கள், விசுவசித்தவர்கள், ஏற்றுக் கொண்டவர்கள் மட்டுமே, விடுதலையிலும் வெற்றிகண்டார்கள். நாமும் இன்று அமைதி, சமாதானம் விடுதலை இவற்றையே எதிர் பார்த்து நிற்கிறோம். இவை எம்மைத் தேடி எப்போது வரும் எனக் காத்திருப்பதை விட, நாம் இவ்வமைதி அன்பு சமாதானத்தை எம் உள்ளத்திலிருந்து வெளிப்படுத்த வேண்டும், அதாவது இவற்றை நாம் மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ முற்படும்போது, எம்மிலும் எம் வீட்டிலும் எம் குடும்பத்திலும் நாட்டிலும் ஏன் உலகிலும் நிரந்தர அமைதியை, சமாதானத்தை நாம் உருவாக்கமுடியும் இம்மனநிலை எம் ஒவ்வொருவரிலும் உருவாக, உந்து சக்தியாக இருப்பது இறை வார்த்தை யாகும். இவ்வார்த்தை எல்லா உள்ளங்களிலும் விதைக்கப்படவேண்டும் இறை வார்த்தை வாழ்வாக மாற வேண்டும். அப்போதுதான் பிறந்த இயேசு கொண்டு வந்த அமைதி, அன்பு, சமாதானம், விடுதலை எம்மிலும் பிறக்கும். எங்கும் எதிலும் எப்பொழுதும் இன்பமும் பிறக்கும்.

திருமதி. றோஸ் இராஜரெட்ணம்
115. ஸ்ரேசன் றோட், யாழ்ப்பாணம

# ஒளியின் மக்களாக உறுதியுடன் அர்ப்பணிப்போம்

ஒரு குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை எண்ணற்ற குடும்பங்களை தன்னகத்தே கொண்டு திருச்சபை இன்று வளர்ச்சிபெற்று பெருவிருட்சமாக தன்கிளைகளை நானிலமெங்கும் பரப்பி நிற்கின்றது. குடும்பங்களில் பகிர்ந்து வாழும் செயல் இருந்தால்தான் குடும்பங்களினாலான திருச்சபையும் பகிர்ந்துவாழும் திருச்சபையாக மாறமுடியும். பகிர்ந்து வாழுதல் அடிமட்டத்திலிருந்தே வரவேண்டும் மேல் இருந்தல்ல அதிகாரத்தினால் கொண்டுவரவும் முடியாது. கிறிஸ்துவின் சாயலை எம்மில் பிரதிபலிக்கச் செய்யாமல் கிறிஸ்துவுக்குச் சான்றுபகர எம்மால் இயலாது. எனவே துணிவுள்ள சாட்சிகளாகவும் இறைவார்த்தையின், தூதுவர்களாகவும் திருத்தூதர்களை மாற்றிய தூய ஆவியானவருக்கு எம்மை முற்று முழுதாகக் கையளிக்கின்ற வேளையில், அவர் எம்மை மென்மேலும் கிறிஸ்துவின் சாயலிலே உருமாற்றுவார். தூய ஆவியானவர் திருத்தூதர்களை நற்செய்திப் பணியிலே கஷ்டங்கள் துன்பங்கள் நிறைந்த வேளையிலும் புதுப்புது வழி முறைகளினூடாக வழிநடத்தினார். கிறிஸ்துவின் வருகையின் முழு நோக்கமே நாம் இறைதந்தையின் அன்பை உணர்ந்து அவரது இரக்கத்தினால் மீண்டும் வாழ்வுக்கு இட்டுச்செல்லப்படவேண்டும் என்பதாகும். திருச்சபையாகிய நாம் பலவேளைகளில் அதை மறந்து வெவ்வேறு காரியங்களில் அகப் பட்டு விடுகின்றோம். எமது வாழ்க்கை முறையால் கடவுள் அன்பாய் இருக்கிறார் என்று மற்ற மக்கள் அறியமுடியும். எமது அன்பு, ஒன்றிப்பு ஒரு சிறந்த அடையாளமாக சிறிய கிறிஸ்தவ குழுமங்களின் உருவாக்கம் அமைகிறது. பொது நிலையினருக்கு பங்குகளிலும், தமது குடும்பங்களிலும் பணிபுரிவது மிகவும் கடினமாகவுள்ளது. சிறு கிறிஸ்தவ குழுமமாகிய அன்பியத்தில் உருவாகும் அல்லது செயலாற்றும் போது கிறிஸ்துவோடு கொண்டுள்ள நெருக்கமான உறவின் மூலமாக வளர்ச்சியடைந்து, வலிமைபெற்று, பயனுள்ளதாகின்றது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள சிறு கிறிஸ்தவ குழுமமாகிய அன்பியமொன்றில் நெருங்கிய நண்பராயிருக்கவேண்டும். சவால்களைச் சந்தித்து தியான இலக்கை அறிந்து, அறிமுகப்படுத்தி துன்பங்களை எதிர் கொள்ளவேண்டும்.

கிறிஸ்துவின் 2003ம் ஆண்டு பிறப்பு விழாவை மகிழ்வோடு கொண்டாடும் நாம் ஆதிக்கிறிஸ்தவர்களின் அன்பிய வாழ்வை வாழ எம்மைத் தயாராக்க அழைக்கப்பட்டிருக்கின்றோம். யாழ் மறை மாவட்ட அன்பிய செயற்பாடுகளை உள்வாங்கி சிறு கிறிஸ்தவ குழுமங்களின் வளர்ச்சியில் பார்வையாளராக அல்லாது பங்களிப்புள்ள வர்களாகவும். அயலவர்களின் நண்பர்களாக மாற எம்மை மாற்ற புத்தாண்டில் பிறக்கின்ற பாலன் யேசு கொண்டுவந்த சமாதானத்தையும், நல்லாசியையும் ஏற்கின்ற கிறிஸ்துவின் மக்களாக சிறிய கிறிஸ்தவ குடும்பங்களின் வளர்ச்சிக்கு எம்மை உட்படுத்த அழைக்கப்பட்டிருக்கின்றோம். கிறிஸ்துவின் வருகையின் மகிழ்வு அன்பிய தாகம் கொள்ள தற்போதய சூழல் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்து ஒளியின் மக்களாக உறுதியுடன் அர்ப்பணிப்போம்.

- கீதபொன்கலம்-

## எங்கே செல்கிறது?

எங்கோ, செல்கின்றது என்ன?
அது தான் நம் கிறிஸ்தவம்.
பறவைகள் போகும் செவ்வானம் மேலே,
நதிகள் போகும் எந்நாளும் கீழே,
தலைகீழானால் என்னாகும் நிலமை,
அதுவே நம் கிறிஸ்தவ நடைமுறை
மனுக்குலத்தை மீட்க மனிதன் உருவில் இறைவன் -
அது இறந்த காலம்
படைத்தவனிற்கும் மீட்டவனிற்கும் படுக்க இடமோ
- மாடடைக் குடில்தான்.
மனிதனைத் தேடும் இறைவன் - இது நிகழ்காலம்
மனிதமோ நாலு பேர் என்ன சொல்வார்களோ
என்று
அடிமைப்படுகின்றது, - அதுவும் யாருக்கு
மனிதர்களிற்கே.
இறைவன் வடிவில் மனிதன் ஏது? எதிர்காலம்
- கேள்விக்குறியாய்!

உண்மையான அன்பு
உயர்வான இலட்சியம்
உத்தமமான குடும்ப வாழ்க்கை
உறுதியான நாணயத்தன்மை
நீதியான அரசாங்கம்
பக்தியான செயற்பாடுகள்
இதுவன்றோ, [illegible]
இன்னொருவனை அழவைப்பதன் மூலம் - நான்
[illegible]
இன்னொருவன் காணியைப் பறிப்பதன் மூலம்
- நான் வீடு கட்டிக்கொண்டு,
இன்னொருவனை அழிப்பதன் மூலம் தான்
- நான் வாழமுடியுமென்றால் அதற்கும் தயாராக,
- நான், எனது எண்ணத்துடன்
எங்கே போகின்றது - நம் கிறிஸ்தவம் யாரறிவார்.

பொன் பொருளில் ஆசையில்லா சின்ன பாலகன்
இடயர் நடுவே மண்ணில் பிறந்தார் - ஆனால்
பொன் பொருளின்றி இன்று இல்லை கிறிஸ்து
பிறப்பு - காரணம் இல்லாவிடின்
என் மதிப்பு என்னாவது,
வீதியிலே சாலையிலே வீழ்ந்து கிடக்கும் -
ஏழை எளியோர்
விழாக் கோலம் கொண்டு உண்டு களிக்கின்றனர் -
கிறிஸ்து பிறப்பு
என்ன இது - அர்த்தமே இல்லாது
எங்கே போகின்றது நம் கிறிஸ்தவம்

இனிமேலாவது,
இருட்டினிலே வேடங்கள் வேண்டாம்,
எங்கே செல்கின்றது என்றில்லாது,
வடிவிறகாய் இவை ஒளி நோக்கி செல்கின்றது - நம்
கிறிஸ்தவம்
இறை பலமே மனித நலம் ஆகட்டும்

அ. மரிஸ்ரெலா அனி
சில்லாலை, புனித கதிரை மாதா ஆலயம்,
சில்லாலை

பனித்துளி விழுந்திடும்
பன்னிரெண்டாம் மாதமதில்
மண்ணுலகை மீட்டிடவே
மனுமகனும் மண்ணில் வந்தார்

போர்கள் பயங்கரங்கள்
யாவும் ஓய்ந்துபோய்
உறவுகள் ஒன்றிணைந்து
உவகை ததும்பி நிற்கும் எம் நாட்டில்

இன்று போல் என்றென்றும்
இன்னல்கள் நீங்கிடவே
அமைதியின் மன்னனாய்
அமலா நீ பிறந்திடுவாய்

உன் பிறப்பின் ஒளியினால்
உள்ளங்கள் மகிழ்ந்திருக்க
விண்ணக தேவனே பாலா
மீண்டும் நீ பிறந்திடுவாய்



யே. அசுந்தா
வட்டக்கச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

## 1ம் வருட நினைவலைகள்



மண்ணில் 1927 ~ 06 ~ 02
விண்ணில் 2001 ~ 11 ~ 07

அமரர்
**பொன்யைா பூவிலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர், யாழ்பரியோவான் கல்லூரி)

ஆசையுடன் பாசமாய் வளர்த்த
எம் அன்புத் தந்தாய் - உங்கள்
அன்பு முகம் தேடித் தேடி அலைந்து
ஆண்டு ஒன்றானதே!

## 6ம் மாத நினைவலைகள்



மண்ணில் 1935 ~ 07 ~ 10
விண்ணில் 2002 ~ 05 ~ 04

அமரர்
**மரியமுத்து பூவிலிங்கம்**
(இளைப்பாறிய உப அதிபர், யா.ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன், யா.வேம்படி மகளிர் கல்லூரி)

அழும் விழிநீர் துடைக்க
அன்னையும் இங்கு இல்லை
அவள் பாசமுகம் மறைந்தும்
மாதங்கள் ஆறானதே!

எம்மை ஈன்ற இனிய பெற்றோரே
பாருலகில் எமக்கு பாதுகாவலராய்
அளித்திடுவீர் ஆசீர்!

இல. 85, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்:
பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்


---

## 25 வருட நிறைவு



சலமோன்பிள்ளை மரியாம்பிள்ளை
(சவிரிமுத்து)

**மறைவு:-1977.12.16**



## 1ம் வருட நிறைவு



அன்ரன் கிறிஸ்ரி
சவரிமுத்து

**மறைவு:-2001.12.25**

விசுவாசத்தையே கேடயமாகக் கொண்டு
வாழ்வின் சவால்களை எதிர்கொண்டு
தியாகச் சுடர்களாய் எரிந்து அணைந்த
எங்கள் அன்புக்குரியவர்களே. நீங்கள்
இறைபதம் சேர்ந்து நித்திய அமைதி பெற
இறைஞ்சுகிறேன் பரமனை.


- அன்புப் பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்

17, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

- மனைவி, மக்கள், சகோதரர்,
பெறாமக்கள், மருமக்கள்.

---

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான் அரு: 11:25"



மலர்வு 20 ~ 01 ~ 1913
உதிர்வு 09 ~ 03 ~ 1995

**திரு. மரியாம்பிள்ளை சேபஸ்தியாம்பிள்ளை**
(தம்பி ஐயா)



மலர்வு 10 ~ 04 ~ 1924
உதிர்வு 09 ~ 01 ~ 2000

**திருமதி. மரியம்மா சேபஸ்தியாம்பிள்ளை**
(தங்கச்சி அம்மா)

"ஆண்டுகள் பல ஓடிமறைந்தாலும், மாண்டு போகாது உங்கள் நினைவுகள். மீண்டும் நாம் உம்மைச் சந்திக்கும்வரை வேண்டுவோம் இறைவனை எந்நாளும்."

---

## ஆறாம் மாத நினைவு அஞ்சலி

திருமதி. மரியம்மா
பத்திநாதர்



மண்ணில் : 25.03.1916
விண்ணில் : 27.06.2002

திரு. தீயோகுப்பிள்ளை
மனுவேல்பிள்ளை



மண்ணில் : 17.10.1920
விண்ணில் : 24.06.2002

மண்ணில் நீங்கள் வாழ்ந்தபோது உங்கள்
அன்பால் எம்மை அரவணைத்து நின்றீர்கள்.
விண்ணில் இன்று உங்கள் வாழ்வில்
தெய்வீக அன்பால் நித்தியமும் நிறைந்திருங்கள்.

திரு. ஞா. பத்திநாதர் குடும்பம்.
அலுக்கை, அளவெட்டி.

---

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவஞ்சலி



**திரு. ஆதாம் தோமாஸ்**

மண்ணில்
07-06-1942

விண்ணில்
28-11-2002

எங்கள் குடும்பத்தின் குல விளக்காய்
ஒளி வீசும் தாரகையாய் ஒளி பரப்பி
அன்போடும் பண்போடும் எமை வளர்த்து
அறநெறி போதித்து அன்பு மொழி பேசி
அன்போடு அன்பரின் பாத அடிகளில் நடக்க
பாசத்தோடு எமை வாழ வைத்து
எமையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு
இறைவனோடு இன்புற்று வாழ சென்றுவிட்டீர் ஐயா.
மாதம் ஒன்றும் ஆனது ஐயா உங்கள்
கருணை பொங்கும் வதனமும். உங்கள் நினைவும்
எம் நெஞ்சை விட்டு நீங்காதையா
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை அனுதினமும்
வேண்டுகின்றோம்.
"இவர் அமைதியில் இளைப்பாறுவாராக"

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்
பேரப்பிள்ளைகள்,
அருட்சகோதரி இ[illegible]

கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

---



சமாதானத்திற்கான யுத்தம் என்ற கோசங்கள் மாறி புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற முயற்சிகள், யுத்த நிறுத்தம், அபிவிருத்தி, சமாதான சக வாழ்வு என அமைதிக்கான முயற்சிகள் அரசியல் களத்தில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் காலம் இது. அமைதியின் தூதனாய் இவ்வுலகில் பிறந்த இயேசுக் கிறிஸ்துவினுடைய பிறப்பு விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படும்.

அது ஒரு வெறும் சம்பிரதாய விழாவாகவோ அன்றேல் "கறுப்புக் கிறிஸ்மஸ்" ஆகவோ இம்முறை இல்லை. காரணம் நீண்ட இரவின் முடிவில் தோன்றும் வைகறை ஒளி போன்று நீண்டகால யுத்தத்தின் முடிவில் அமைதியின் கீற்றுக்களை அனுபவிக்கும் காலம் இவ்வாண்டு.

விழாக்களை மிக்க மகிழ்ச்சியோடு இவ்வாண்டு முழுவதிலும் எம்மில் பலர் கொண்டாடியதுண்டு. கிறிஸ்மஸ் விழாவையும் கடந்த காலத்திலும் பார்க்க இவ்வருடம் நிறைந்த மகிழ்ச்சியுடன் கொண்டாட விரும்புகின்றோம்.

# ஞாயிறு மொட்டுக்கள்

சுவாமி ஜீவாபோல் (அ.ம.தி)

## கிறிஸ்து பிறப்பு விழா (25.12.2002)

எசா 62: 1-5 தி.ப. 13:16-17 22-25. மத். 1:18-25

எசேயா இறைவாக்கினர் துன்புற்றிருந்த மக்களைப் பார்த்து "உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய். கைவிடப் பட்டது, பாழ்பட்டது என அழைக்கப்படாது ஆண்டவரின் கரத்தில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" என நம்பிக்கையூட்டும் வார்த்தைகளை திடமாக எடுத்துக் கூறுகின்றார். நாடு மணவாழ்வு பெறும். உன் கடவுள் உன்னில் மகிழ்வார் என குதூகலமான வார்த்தைகளை மக்கள் மனங்களில் ஆழப் பதிக்கின்றார்.

இம்மானுவேல் என்றால் கடவுள் நம்மோடு என்பதே பொருள். இது வெறும் கனவுமல்ல கற்பனையுமல்ல. கிறிஸ்மஸ் என்றும் மகிழ்ச்சிகரமான விழாவாகும். இருப்பினும் புலம்பெயர்ந்தோராக, வேலையற்றோராக, ஏழையராக, அநாதைகளாக, அங்கவீனர்களாக, மன நோயாளிகளாக தனிமை உணர்வோடும் வேதனைகளோடும் நிம்மதியற்றவர்களாக இன்னும் எம் சமூகத்தில் நூற்றுக்கணக்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். நாமும் கடந்த யுத்தத்தின் விளைவினாலும் எம் சுய நலன்களின் விளைவினாலும் அமைதியிழந்து ஏழையராகவே இருக்கிறோம். கிறிஸ்துவின் பிறப்பு விழா எங்களில் எப்படி மகிழ்ச்சியை பிறப்பிக்கும் என்ற சந்தேகம் எமக்கு உண்டு. கிறிஸ்து பிறந்த காலப் பகுதியில் அரசியல் தலைவர்களாகவும் மதங்களின் முதல்வர்களாகவும் செல்வத்தில் மிதந்தவர்களாகவும் ஏராளமான மக்கள் இருக்க ஆண்டவருடைய வாக்குறுதி குழந்தை வடிவில் நிறைவேறியது. மரியா போன்ற தூய உள்ளத்தோருக்கும் யோசேப்பு போன்ற நேர்மையாளருக்கும் கிறிஸ்துவின் பிறப்பு மனமகிழ்வூட்டும் மாபெரும் நிகழ்ச்சியாகும். பொருளிலும் பதவியிலும் ஆணவத்திலும் மகிழ்ச்சி பிறக்காது. தூய்மையும் நேர்மையும் அன்பும் சகோதரத் தோழமையும் எங்கு எங்கு வளர்க்கப் படுகின்றதோ அங்கு நம்மோடு கடவுள் அங்குதான் அமைதியும் மகிழ்ச்சியும் குடி கொள்ளும்.

## வருடப்பிறப்பு (01.01.2003)
## இறைவனின் அன்னை மரியா பெருவிழா

(எண். 6:22-27. கலா4:4-7.லூக்.2:16-21)


2003ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி எம் எண்ணங்கள் இவ்வாண்டு எத்தகையதோ என்ற ஏக்கத்தில் அலைமோதும். நாளை நிச்சயமற்றது என்பதனால் புதிதாகப் பிறக்கும் ஆண்டில் எம் வாழ்வில் என்ன என்ன காத்திருக்கின்றனவோ என்ற அங்கலாய்ப்பு தோன்றுவது இயற்கை. மனித வாழ்வை முன்னெடுத்துச் செல்லுவது அவரவர் உள்ளத்தில் ஊன்றியிருக்கும் எதிர்நோக்கு உணர்வு. கடந்தகாலப் பாடங்கள் எதிர்காலத்தை முறையான திசை நோக்கி திருப்புவதற்கு ஒருவன் எமக்கு வழிகாட்டும் திசைகாட்டிகளாக அமைகின்றன. மீட்பு வரலாற்றில் கடந்த காலம் என்பது இறைவன் முன்னோர்களோடு வழிநடந்து வந்த அவரது பராமரிப்பும் அவரது பிரசன்னத்தால் மக்கள் கண்டுகொண்ட மாபெரும் செயல்களுமே ஆகும். இவ்வாறு ஆண்டவர் தம் வாக்குறுதிகளை என்றும்' காக்கின்ற தந்தை என்ற உணர்வை உடன்படிக்கையின் ஆண்டவர் என்பதை மரியா என்றும் ஆணித்தரமாக நம்பினாள். அதனால் இது எங்ஙனம் ஆகும் என்ற மனித ஏக்கத்தின் மத்தியிலும் ஆகட்டும் என்று இறைவனிடம் சரணடைகின்றாள். இறைவார்த்தையை அமைந்த மனதோடு ஏற்றுக் கொண்டதால் உலகிற்கு வாழ்வளிக்கும் இறை வார்த்தையாகிய இயேசுக் கிறிஸ்துவை இவ்வலகிற்கு அளிக்கும் பேறு பெற்றவளாய் விளங்கினாள். தாயுடன் சேயை இணைத்து மரியன்னையின் தாய்மைக்கு ஆண்டின் முதல் நாளன்று விழா எடுப்பது மரியன்னையின் மனநிலையை நாம் அனைவருமே எம்மில் தரித்து ஆண்டவரின் வாக்கு இவ்வாண்டு முழுவதும் எம்மில் நிறைவேறட்டும் என்று இறையாசீர்களுக்கு வழிசமைத்துக் கொடுப்பதே. இறைவன் எதிலும் தீமையை விரும்புபவர் அல்ல. மாறாக ஆசீர் அளிப்பவர். அருள் பொழிபவர். அமைதி அருள்பவர். அத்தகைய ஆண்டவரில் நம்பிக்கை வைத்ததால் மரியாளின் வாழ்வு சூரிய உதயத்தைக் கண்ட சூரிய காந்தி போல அகமகிழ்ந்தது. மரியன்னையின் தாய்மை காற்றினால் அலைக்கழிக்கப்படும் கப்பலின் நங்கூரம் போன்றது. வாழ்க்கையின் சோதனைகளும் வேதனைகளும் எதிர்பாராத நிகழ்வுகளும் எம்மில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாமல் மரியன்னையின் தாய்மை எங்களை என்றுமே தாங்கி நிற்கும். என்றும் மக்களின் வாழ்வில் புத்துணர்வுகளை பிறப்பித்து துன்ப துயர்களை நீக்கி விடுதலை வாழ்வு வழங்க வந்த ஆண்டவர் இயேசு தாய்மையின் பரிந்துரைகள் வழியாக தம் மீட்புப் பணியை எம்மில் தொடர்ந்து ஆற்றுவார். என்றும் மனித வரலாற்றில் குறிக்கீட்டு வழமையும் புதுப் பொலிவும் வழங்கி விடிவை நோக்கி பயணிக்கத் தூண்டும் ஆண்டவரது அருள் ஆசீர்கள் மரியாளின் பரிந்துரைகளால் நிச்சயமாக ஒவ்வொரு இல்லத்திற்கும் உள்ளத் திற்கும் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. ஒரு தாயின் பிள்ளைகள் என்றால் இவ்வாண்டு முழுவதிலும் ஏனையவரும் வாழ வேண்டும். அவர்கள் வாழ்வும் மலர வேண்டும் என்ற சகோதர உணர்வு எம்மில் இன்னும் ஆழமானதாக தோன்ற வேண்டும். ஒரு தாயின் பிள்ளைகள் என்றால் ஆண்டின் முதல் நாளில் மட்டுமல்ல ஆண்டு பூராக ஒருவர் மற்றவரை வாழ்த்த வேண்டும். தட்டிக் கொடுக்க வேண்டும். ஒருவர் மற்றவருக்கு துணைக்கரம் நீட்ட வேண்டும். பரிந்துரைக்க வேண்டும். இறைவனின் மீட்பின் கருவிகளாக மீட்புப் பயணத்தை மரியாவோடு தொடர்ந்து ஆற்றுவோம்.




## இந்த இடத்தில் சிரிக்கவும்

ஒரு மறைக்கல்வி வகுப்பில் மாணவன் எதற்கெடுத்தாலும் மிகவும் பொருத்தமான வேதாகம வார்த்தைகளைக் கூறுவதில் வல்லவராய் இருந்தான். அமைதியான நேரங்களில் கூட அவன் இந்த வேதாகம வார்த்தைகளைக் கூறி குழப்பிவிடுவதால் மறையாசிரியர் வேதாகம வார்த்தைகளைப் பாவிப்பதை தவிர்க்கும்படி கண்டிப்பாக உத்தரவிட்டிருந்தார்.

ஒரு நாள் ஆசிரியர்கள் உணவருந்திக்கொண்டிருக்கும் போது ஆடு ஒன்று உணவருந்தும் அறைக்கு வந்துவிடவே ஆசிரியர் அக்குறிப்பிட்ட மாணவரிடம் ஆட்டைக் கலைக்கும்படி கூறினார். அருகில் இருந்த மற்ற ஆசிரியரோ "வேதாகம வார்த்தைகளைப் பாவிப்பதில் வல்லவனான நீ இந்த ஆடு வந்துபோன சம்பவத்திற்கும் ஒரு வேதாகம வார்த்தையைக் கூறு" என்று கேட்டார். அம் மாணவனோ அமைதியாக "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்குரியவர்களோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை" (அரு. 1:11) என்றான்.








24

தோல்வி -
**அவரது வாழ்வுக்கு முற்றுப்புள்ளி அல்ல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாசரேத்து தூதர் யேசு வருகிறார்! நமக்காய் நிச்சயம் பேசி வெல்லுவார்!

பேய் தொடுத்த போரில் – ஆதிப்பெற்றோர் தோற்றனர்
சாவு நோய் துன்பமதைச் சம்பளமாய் ஏற்றனர்
மனம் போன போக்கில் போய் – கடவுளையே மறந்தனர்
கால்போன போக்கில் போய் அகதிகளாய் அலைந்தனர்
விட்டாரா இறைவன்? கருனைக்கடல் அல்லாவா?
சமாதான உடன்படிக்கை செய்தாராம் பாருங்கள்.
மனிதனாய் உருவெடுக்க மகனை அனுமதித்தார்
சமாதான தூதுவராய் இறைமகன் யேசு வந்தார்
தன்னுயிரைக் கொடுத்து மன்னுயிரை மீட்டார்
மன்னிப்பு வழங்கிப் புது வாழ்வளித்து மீண்டார்
நல்லகதைதான் இந்த நத்தார்க்கதை – இனிச
சொல்லவரும் கதை அதன் தொடர்கதை
சமாதானத்தைச் சாத்தான் விரும்பவில்லை
எல்லையோடினவாதம் மதவாதம் என்றெல்லாம்
தொல்லை கொடுத்து போரைத் தொடுத்தது
எனது உனது என்ற இந்தச் சமரிலே
மனதை இழந்தவர்கள் ஏராளம்! ஏராளம்!
எறியும் குண்டுகளால் தலைகள் சிதறியிங்கே
உயிரை இழந்தவர்கள் ஏராளம்! ஏராளம்!
ஆலயமணிகள் அமைதிக்காய் ஒலித்தன!
பிரார்த்தனைக் கூட்டங்கள் தொடர்ந்து நடந்தன!
ஆயுதப்போரின் காவியநாயகன்
அமைதி ஒப்பந்தம் செய்து கொண்டதால்
நீண்ட ஈழப்போர் நிறுத்தம் கண்டது
நோர்வே நடுவராய் நின்று கொண்டது
நோர்வேத்தூதரின் உருவில் இம் முறை
நாசரேத்தூதர் யேசு வருகிறார்
போரும் தடையெல்லாம் தாண்டிச் செல்லுவார்
நமக்காய் நிச்சயம் பேசி வெல்லுவார்






*"நவாலியூர் நாயக"*

# கண்டதும் கேட்டதும்

## புலவர் மணி - அமுது - லண்டன்

பெண்ணரசி பெற்றெடுத்த
பிள்ளை சின்ன இயேசு என்னும்
கண்மணியைக் காணச்சென்றேன் தம்பி – அவன்
கடைக் கண்ணால் பாக்கவில்லைத் தம்பி

மாட்டுத் தொழுவம் ஒன்றில்
மன்னன் பிறந்தான் என்று
கேட்டு அவன் பாதம் சென்றேன் தம்பி – அவன்
கிளிமொழியோ கேட்கவில்லைத் தம்பி

முத்தி வழி சொல்ல வந்த
மல்வனைக் காண என்று
சித்தம் மகிழ்ந்து சென்றேன் தம்பி – அவன்
திரும்பியும் பார்க்கவில்லைத் தம்பி.

துன்பச் சிலுவை தூக்கித்
தோளில் சுமக்க வந்த
அன்பரசைக் காணச் சென்றேன் தம்பி – அவர்
அரைக் கண்ணால் பார்க்கவில்லைத் தம்பி

பால் வடியும் பொன் முகத்தைப்
பார்வை ஈந்த பொற்கரத்தை
நூல்கள் போற்றும் கோமகளைக் கண்டேன் தம்பி
நொடியில் கண்ணை மூடிவிட்டார் தம்பி.

எண்ணி எண்ணிக் கலங்கி
ஏழைமனம் புண் குழம்பி
திண்ணையில் படுத்திருந்தேன் தம்பி – ஒரு
தெய்வ கீதம் கேட்டதடா தம்பி.

நாலு நாளாய்ச் சாப்பாடில்லை
நானும் கையை நீட்டிக்கேட்டேன்
பாலும் பழமும் கையில் கண்டு கேட்டேன் – உடனே
படலை சாத்தி நாய் அழைத்தாய் ஓட்டம்

கையில் தடி ஊன்றி நின்றேன்
கதறிக் கொண்டு தண்ணீர் கேட்டேன்
பையில் பணம், வீடு வாசல் இருந்தால் – தெய்வ
பாசம் முற்றும் பறந்து போமோ பருந்தாய்!

சிறையில் போட்டு வாட்டினார்கள்
சிறுத்தை என்று தீயால் சுட்டார்
கறையில் படிந்து மனநோயானேன் – வந்து
கண்டாயில்லை தொண்டனென்றாய் சரியோ?

அங்கம் எல்லாம் பொங்கி வீங்கி
ஐயோ என்று ஓல மிட்டு
உங்கள் வேலி ஓரத்திலே துடித்தேன் – நீயோ
ஒற்றைக் கண்ணல் பார்த்துவிட்டுப் பறந்தாய்

வெய்யில் சூறைக் காற்றினிலே
வெள்ளம் மழைச் சேற்றினிலே
ஐயோ வன்னிக் காட்டினிலே கிடந்தேன் – வந்து
அடுத்த பக்கம் பார்த்தபடி நடந்தாய்.

என்று சொன்ன பாலன் சொற்கள்
என்னை நோக்கி எறிந்த கற்கள்
இன்று பிழையை நினைந்து விட்டேன் மனிதன் – பிறர்
இன்னல் தீரப் பணிகள் செய்தால் புனிதன்.

அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என அழைக்கப்படும் (எசாயா 9:6).

# புலவர்மணி அமுது அவர்களுக்கு பாப்பரசரின் செவாலியர் பட்டம்



தமிழ் பேசும் உலகில் நன்கு அறியப்பெற்ற கவிஞர் அமுது அவர்களுக்குப் பரிசுத்த பாப்பரசர் "The knight of St Gregory the Great" வீரப் பெருந்தகை என்ற பொருள்படும் செவாலியர் என்ற மதிப்பார்ந்த பட்டத்தை அளித்துக் கௌரவித்திருப்பதாக பாப்பரசரின் பிரதிநிதி அவர்கள், யாழ். ஆயர் பேரருள் . தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களுக்கு அறிவித்துள்ளார்.

வட இலங்கையில் இந்த மதிப்பார்ந்த பட்டத்தை 60 ஆண்டுகளுக்கு முன்பு, சம் பத்திரியார் கல்லூரிப் பிரதம ஆசிரியர் அமரர்.சூ. அருளானந்தம் அவர்கள் பெற்றிருந்தார். அவருடைய அரும் பணிகளைப் பாராட்டிச் 'செவாலியர்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது.

இப்போது நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் 'அமுது' என எல்லோராலும் அழைக்கப்பெறும் ஆசிரியர் ச.அ. அடைக்கலமுத்து அவர்களுக்கு இப்பட்டம் சூட்டப்படுகிறது.

இளமையிலேயே பாதுகாவலன பத்திரிகைக்கு எழுதி, எழுத்துப் பணியில் கால்வைத்தவர் அமுது. கொலம்பகம், செஞ் சூசை... ஆசிரிய கலாசாலையில் படிக்கின்றபோதே "தூதன்" என்ற நூற்றாண்டு மலருக்கு ஆசிரியராய் இருந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது 'இளங்கதிர்' என்ற ஆண்டு மலருக்கு ஆசிரியராய் இருந்தார். அந்த மலர் சர்வகலா சாலையில் இருந்து வெளியான அனைத்து மலர்களிலும் சிறந்தது என்பார் பேராயர் ஜெப நேசன் அவர்கள்.

இப்போது அமுது அவர்களுடைய அப்போஸ்தலிக்க ஆசிரிய சேவையையும், எழுத்துப் பணியையும் இலக்கியப்பணியையும் பாராட்டிப் பாப்பரசர் மகிமையான விருதையளித்துப் பட்டமும் கொடுத்துள்ளார். காவலன் பத்திரிகை சார்பாக நாங்களும் அவரைப் பாராட்ட விரும்புகின்றோம்.

கவிஞர் அமுது அவர்கள் நீண்ட காலம் பாதுகாவலனுக்கு எழுதிவந்ததோடு இன்றுவரையும் இப்பத்திரிகையைப்பெற்று வாசித்துவருகிறார். இலங்கையில் இருந்து வெளிவரும் எல்லாப் பத்திரிகைகளிலும் அவருடைய எழுத்துக்கள் வெளிவந்துள்ளன. இப்போதும் லண்டன், பாரீஸ் பத்திரிகைகளுக்கும் எழுதுகிறார். "இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்" என்று தனது வாழ்க்கையை ஆறுமாசமாகத் தொடர்ந்து எழுதுகிறார்.

பாதுகாவலனில் வெளிவந்த மாதா பாடல்கள் பின்னர் 'மாதா அஞ்சலி' என்ற நூல் வடிவில் வெளிவந்தன. பின்னர் 'நெஞ்சே நினை' 'அன்பின் கங்கை அன்னை திரேசா' 'காக்கும் தாங்கள்' 'மஞ்மாதா காவியம்' என எட்டு நூல்களை எழுதியுள்ளார். அமுதுவின் கவிதைகள் என்று அண்மையில் வெளியான நூல்களை எழுதியுள்ளார். 'அமுதுவின் கவிதைகள்' என்று அண்மையில் வெளியான நூலின் வெளியீட்டுவிழா தை 25 லண்டன் நகரமண்டபம் ஒன்றில், அருள். கஸ்பார் அடிகள் தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்னைதிரேசா என்ற நூலின வசன நடையைக் கவிப்பேரரசன் வைரமுத்து அவர்கள் கூடப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

ஜேர்மனியில் 'தமிழ்க் கங்கை' என்றும், யாழ்ப்பாணத்தில் 'சொல்லின் செல்வன்' என்றும், லண்டனில் 'கவிமாணி என்று" பட்டம் பெற்ற அமுது அவர்களுக்கு பேராசிரியர் கலாநிதி எஸ்.யே. இம்மானுவேல் அடிகளார் லண்டன் நகர மண்டபத்தில் 'முன்பணி வேந்தன்' என்று பட்டம் சூட்டிப் பொன்னாடை போர்த்தினார். இவ்வாண்டின் ஆரம்ப காலத்தில் யாழ். பல்கலைக்கழக உப வேந்தர் 'மதுரகவி' என்று பட்டம் சூட்டியதோடு பல்கலைக்கழகச் சான்றோர்கள் பலரும் பாராட்டி உரை நிகழ்த்தியதும் நினைவு கூரத்தக்கது.

யாழ்ப்பாணம் மறை மாவட்ட சங்கத்தின் துணைத் தலைவராகப் பல வருடங்கள் தமிழ் ஆசிரியாசங்கங்களில் செயலாளராகவும் செயலாற்றினார்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, பாப்பரசர் இவருடைய நற்பணிகளைப் பாரா ட்டி, தமிழ் மொழியில் மிகச் சிறந்த எழுத்தாளரும், கவியரசரும் என்ற பாராட்டுப் பத்திரம் ஒன்றை அனுப்பிவைத்தனர். அதனை 'சவுத்வாக்" பகுதி ஆயர் மகாவற்திப்பனார் அவர்கள் ஒளிவிழா நிகழ்ச்சிப் பணியாளர் இயக்குனரே பொறுப்பாயிருந்து நிறைவேற்றினார்.

சென்ற நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்றிருந்த தமிழறிஞர்களான பண்டிதமணி, கணபதிப்பிள்ளை, வித்துவ சிரோமணி சுப்பையாபிள்ளை, வித்துவான் வேந்தனர், வித்துவான் நடராசா, புலவர்மணி இளமுருகனார். மகாவித்துவான் கணேசையர் என்போரிடத்தில் பாடங்கேட்டதை மிகப் பெருமையோடு கவிஞர்



அமுது அவர்கள் குறிப்பிட்டதுண்டு. சமய வாழ்விலும் அவர் பணிகள் போற்றப் பெற்றன.

எழுத்துத் துறையிலும், கவிதைத் துறையிலும், நகைச் சுவையாகப் பேசுவதிலும் அமுது அவர்கள் ஆற்றல் பெற்றவர். பாப்பரசர் இவ்வாறான தமிழ் அறிஞரைப் பெருமைப்படுத்தியிருப்பது யாழ். மறைமாவட்டத்தைப் பெருமைப்படுத்தியதாகும். மேலும் இவ்வேளை ஈழநாட்டுத் தமிழ்க் கவிஞர் ஒருவரைப் போற்றிப்பாரா ட்டிய செயலும் ஆகும்.

**ஆ.ஜெயநாதன்**
**லண்டன்.**

# பாதுகாவலன் ஆசிரியரின் கிறிஸ்மஸ் வாழ்த்து

பாதுகாவலன் அன்பு நெஞ்சங்களே! அமைதியும், சமாதானமும் தோன்றியுள்ள காலப்பொழுதினில் கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்களை உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.


கடந்த ஆண்டு முழுவதும் பாதுகாவலன் பத்திரிகைப் பணி சிறக்க துணைபுரிந்த ஆயர், குருக்கள், துறவியர், வாசக அன்பர்கள் அனைவரையும் அன்போடும் நன்றியோடும் இவ்வேளையில் நினைவு கூருகிறோம். சிறப்பான விதமாக பாதுகாவலன் பத்திரிகையாளர்களாகப் பணிபுரிந்தோர், பத்திரிகையை அச்சிட உதவிய கத்தோலிக்க அச்சகப் பணியாளர், ஆக்கங்களை எழுதித்தந்த எழுத்தாளர்கள், பத்திரிகை பற்றிய குறிப்புக்களையும் விமர்சனங்களையும் தந்த ஆவலர்கள் அனைவர்க்கும் நன்றி. பாதுகாவலன் தினத்தில் நாம் அனுப்பிய கேள்விக் கொத்தினை நிரப்பி அனுப்பிய அனைவரையும் இவ்வேளையில் விசேடமாக நினைவு கூருகிறோம்.

எம் மண்ணில் தோன்றியுள்ள சமாதானம் என்றும் நின்று நிலைக்க வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்றும் துணை புரிவாராக.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
*ஆசிரியர், பாதுகாவலன்*



பத்திரிசியார் நிறுவனத்தின் வருடாந்த சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் யாழ் ஆயரும், நிறுவனத்தின் பதிவாளர் திரு. தனசிங்கம் அவர்களும் உரையாற்றுகின்றனர்.



கிளிநொச்சி மனித முன்னேற்ற நிலையம் இடம் பெயர்வின் பின் சொந்த இடமான இன்பகத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்டு கார்த்திகை மாதம் யாழ் அவர்களால் திறந்து வைக்கப்படும்போது எடுக்கப்பட்ட படம்.

**நியூஜிலா பாக்கியநாதன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் ஒவ்செற் முறையில் 2002ம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது. T.P. 2378